# ஷெய்குனா ஸூபி ஹழ்ரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் நினைவு மலர்

**மலரை நுகரும் முன்...**

ஏகன் அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.

ஏந்தல் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அன்னார் குடும்பத்தினர், தோழர்கள், ஏனைய நபிமார்கள், அவ்லியாக்கள், அன்பியாக்கள் அனைவர் மீதும் இறைவனது ஸலாத்தும், ஸலாமும் உண்டாவதாக!

நந்தமிழ் நாட்டிலும், கேரளத்திலும், ஈழத்திலும் பல்லாயிரக்கணக்கான ஆத்மீகச் சீடர்களைப் பெற்று அவர்களாலும், மற்றவர்களாலும் கண்ணியத்தோடு ஸூபி ஹலரத் என்று அழைக்கப்பெறும் எங்கள் குருநாதர் ஷெய்குல் காமில், முஹிப்புர் ரஸூல், ஆரிபு பில்லாஹ் ஆலிமுல் அல்லாமா அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி, காதிரி, ஸித்தீகி பாஜில் நூரி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் நினைவில் மலர்ந்த அறிவுப் பெட்டகம் தான் உங்கள் கரங்கள் ஏந்தி நிற்கும் இம்மலர்!

தப்லீக் ஜமாஅத், வஹ்ஹாபியத், ஜமாஅத்தே இஸ்லாமி போன்ற கொள்கைக் குழப்பம் கொண்ட – சுன்னத் வல் ஜமாஅத்திற்கு முரண்பட்ட இயக்கங்களை தமிழக முஸ்லிம்களுக்கு முதன் முதலில் அறிமுகம் செய்வித்து, அவர்கள் வழி தவறிப் போகாமல் செய்திட அரும்பாடுபட்ட பெருமை எங்கள் ஷெய்குனா அவர்களையே சாரும் என்றால் அது மிகையல்ல!

இந்தியத் துணை கண்டத்தின் வட பகுதியில் இத்திருப்பணியினைத் தொடங்கி வைத்தவர்கள் அறிவுலக மேதை அஃலா ஹலரத் அஹ்மது ரிழாகான் ரஹிமஹுல்லாஹ் அவர்களாவார்கள் அதே பணியினை தமிழகத்திலே செயலாற்றிக் காட்டியவர்கள் எங்கள் ஷெய்குனா அவர்கள்!

எனவே தான் 1984 ஜுலை 7இ8 தினங்களில் திருச்சி மாநகர் நவாப் மஸ்ஜிதில் நடைபெற்ற சுன்னத் வல் ஜமாஅத் மாநாட்டில் இந்த கொள்கை விளக்கப் பணியை தமிழகத்திலே தன்னந்தனி மனிதராக நடத்தியவர்கள் ஸூபி ஹலரத் அவர்களாகும் இப்பணியினை இன்றைக்கு நாம் ஒரு பெரும் குழுவினராகச் சேர்ந்து செய்ய வேண்டி உள்ளது என உரையாற்றிய பலரும் உணர்ச்சி பொங்க தமது பேருரைகளில் குறிப்பிட்டனர்.

அத்தோடு நமது இம்முயற்சிக்கு வழிகாட்டியாக அமைந்துள்ள ஸூபி ஹலரத் அவர்களின் பணியை போற்றுமுகமாக இம்மாநாட்டில் தொடங்குகின்ற மஜ்லிசு உலமா, அஹ்லிஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் சபைக்கு அன்னாரது கலீபாக்களுள் ஒருவரைத் தலைவராத் தெரிவு செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தின்படி ஷெய்குனா அவர்களது கலீபாக்களில் ஒருவரான

**மௌலானா மௌலவி S.M.H. முஹம்மது அலி சைபுத்தீன் ஆலிம் பாகவி காதிரி ஸூபி** அவர்களை தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அந்த அளவுக்கு சுன்னத் வல்ஜமாஅத்தினர் மத்தியில் எழுச்சியினை ஏற்படுத்தி சாதனை புரிந்த மேதையரான எங்கள் ஷெய்குனா அவர்களின் நினைவில் முகிழ்த்த இம்மலர், வாழ்க்கைச் சுருக்கம், அன்னார் எழுதிய ஞானத் தபால்கள், ஆற்றிய பேருரைகள் என மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

ஷெய்குனா அவர்கள் வாழ்ந்த காலத்தில் எண்ணற்ற கராமத்துக்களை நிகழ்த்தினர் அவர்களது மறைவுக்குப் பின்னரும் அவை தொடர்கிறது.அவற்றைத் தொகுத்தால் அதுவே தனியொரு நூலாக அமையும் எனவே அவற்றை விடுத்து வாழ்க்கை சுருக்கத்தின் பிறப்பு, கல்விஇ பணி போன்ற சில முக்கிய கட்டங்களை மட்டும் தந்துள்ளோம்.

ஞானத் தபால்கள் பகுதியில், அன்னார் தம் முரீதுப் பிள்ளைகளுக்கு அவ்வப்போது எழுதிய ஞான விளக்கங்கள், அறிவுரைகள் நிரம்பிய முக்கியமான சில கடிதங்களை பொறுக்கியெடுத்து இணைத்துள்ளோம்.

பேருரைகள் பகுதியில், அவர்கள் ஆற்றிய பேருரைகளில் காஸெட்டுகளில் பதியப்பட்டு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள சில அரிய உரைகளை இடம் பெறச் செய்துள்ளோம்.

ஞானப் போதனையிலும், கொள்கை விளக்கத்திலும் தன்னிகரற்று விளங்கிய ஷெய்குனா அவர்களின் நினைவில் மலர்ந்த இம்மலர், அறிவு ஜீவிகளுக்கும், ஆன்ம விசாரணையில் ஈடுபடுவோருக்கும் அரியதொரு பொக்கிஷமாகும். இத்தோடு அவர்கள் எழுதிய நூற்களையும் அவர்களால் உருவாக்கித் தரப்பட்ட ஹிஸ்புல்லாஹ் ஸபை மூலமாக வெளியிட்டு வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்!

எங்கள் குருநாதரின் குரலை ஒலிக்க செய்கின்ற வகையில் எங்களது இப்பணி அமையுமானால் அதுவே எங்களுக்கு மனநிறைவைத் தரப்போதுமானது!

வல்லான் அல்லாஹ் தன் நேசராம் எங்கள் குருநாதர் பொருட்டினால் எங்கள் பணியினை பொருத்திக் கொள்வானாக! ஆமீன்

இவண்

**ஹிஸ்புல்லாஹ் ஸபையினர்**

(ஸூபி மன்ஸில்)

காயல்பட்டணம்.

**ஷெய்குனா ஸூபி ஹலரத் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் வரலாற்றுச் சுருக்கம்.**

*அல்ஆரிபுல்லாஹ் அல்முஹிப்புர்ரஸூல் அஷ்ஷெய்குல் காமில் அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹலரத் பாழில் நூரி ஸித்தீகி காதிரி கத்தஸல்லாஹுஸிர்ரஹுல் அஸீஸ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கம்.*

பூவுலக மக்கள் புண்ணிய வாழ்க்கைக்கு வழிகாட்டி, அவர்களை நெறிபடுத்தி நல்வாழ்வு வாழ வகை செய்திட வல்லான் அல்லாஹ் தன் வளமார்கருணையின் பொருட்டினால் நபிமார்களை வையகத்திற்கு அருளாய்த் தந்தான்.பேரருளாய்ப் பிறந்த பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்களுடைய வருகையோடு நபிமார்கள் என்ற தொடர் முற்றுப் பெறவும் .......

தொடர்ந்து அவர்களின் வழிகாட்டுதலை அப்படியே ஏற்றுக் கொண்டு ஆன்மீகத்தையும், ஏகத்துவத்தையும், எழிலார் இஸ்லாத்தின் இனிய நற்கருத்துக்களையும் அவனி மக்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் நெறி தவறிப்போகாமல் நல்வழிப்படுத்தவும், நீதமான வாழ்க்கை முறைகளை மேற்கொள்ளவும் செய்திட இறை நேயப் பெருமக்களை அன்பளிப்பாக வழங்கினான் இறைவன்!

**இறைநேசர்கள்:**

அல்லாஹ்வின் ஆணைகளையும், ரசூலுல்லாஹ்வின் போதனைகளையும் சிரமேற் கொண்டு சன்மார்க்க நெறி தவறாது ஷரீஅத் - தரீகத் - ஹகீகத் ஆகிய படித்தரங்களைக் கடந்து இறுதிக் கட்டமாக மஃரிபத் எனும் ஞானப் பேரமுதை மாந்தி மகிழ்ந்தவர்கள் தாம் இறைநேசப் பெருமக்கள்.

உயர் மர்தபாவின் உச்சாணிக் கொம்பிலே கொலுவீற்றிருக்கும் இறை நேசர்களைக் குறித்து 'இறைவனுக்கு உவப்பானவர்கள் இவர்கள்! அந்தரங்க –பகிரங்க விஷயங்களைத் தெரிந்தவர்கள் இவர்கள் இறைவனது கண்ணாடிகள்.ஒவ்வொரு ஒலியும் நூஹ் நபியவர்களுடைய கப்பல் என அறிந்து கொள்க! இவர்களை உவந்து போற்றினால் நாசமெனும் ஜலப் பிரளயத்திலிருந்து நீ தப்பி விடுவாய்!' என்று மத்னவீ மணி மாலையில் ஞான மகான் அல்லாமா ஜலாலுத்தீன் ரூமி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்.

பாரில் பல பொருட்கள் ஒன்று மற்றொன்றைச் சார்ந்து அதன் உதவியைக் கொண்டு வாழ வேண்டிய கட்டாயத்தில் ஒட்டி உறவாடி நிற்பதைக் காணலாம். வெப்பமும் தண்ணீரும் பூமிக்குத் தேவை. இவற்றினால்தான் பூமி செழிப்புடன் பூக்கிறது. காய்க்கிறது!

மண்ணின் பசுமைக்கு வெயிலும், மழையும் தேவைப்படுவது போன்றே உலக மக்கள் நேர்வழி சென்றுய்ய நபிமார்களுடையவும், பின்னர் இறைநேசர்களுடையவும் தேவையினை எதிர் நோக்கி உள்ளனர்.

அருளை வழங்குபவன் அல்லாஹ். ஆனால் அதனைப் படைப்பினங்களுக்குப் பங்கு வைத்து தருபவர் அண்ணல் நபியுல்லாஹ் அவர்களே! பின்னர் இப்பணி ஒலிமார்களிடம் ஒப்படைக்கப்பட்டது. எனவே தான் 'எனது உம்மத்துகளில் நாற்பது நபர்கள் நபி இப்ராஹிம் அலைஹி வஸல்லம் அவர்களின் இதயத்தை உடையவர்களாக என்றும் இருந்து வருவர்.இறைவன் அவர்களைக் கொண்டு மக்களின் பிணிகளைப் போக்குவான். மழை பொழிவிப்பான். அவர்களைக் கொண்டு தான் உலகோர்க்கு உதவிகள் புரியப்படும்' (நூல் : தப்ரானி) என நாயகமவர்கள் அறிவித்தனர்.

நபி பெருமானுடைய நுபுவ்வத் எனும் பேரொளிப் பிழம்பை ஸஹாபாக்கள் நேரடியாக பெற்றார்கள். பின்னால் வந்த இறைநேசர்கள் நபிதோழர்களிடமிருந்து அந்த பேரொளியை பெற்றனர். நாம் ஒலிமார்களிடமிருந்து அதனைப் பெறுகின்றோம்.

ஏனெனில் இறைத்தோழர்கள் நுபுவத்தின் ஜோதியினைப் பிரதிபலித்துக் காட்டுகின்ற கண்ணாடிகள். அதனற்றான் இறைக்காதலர்களது புனிதக் கரம் பற்றி பைஅத்து பெறுகின்ற பொதுமக்கள் அதனைப் பின்பற்றி தம் வாழ்க்கை முறைகளையும், வழிமுறைகளையும் அமைத்துக் கொண்டு அமல் செய்கின்ற போது நுபுவ்வத்தின் ஜோதியினைப் பெறுகின்றனர்.

ஈமான், இஸ்லாம் பற்றி விளக்கம் தந்து நல்வழி காட்டுவோர் ஆலிம்கள். ஆலிம்களால் தெளிவாக்கம் செய்யப்பட்ட ஈமானைப் பாதுகாத்து இறையச்சமுடையோராய் வாழ்வதற்கு பாதையமைத்துத் தருவோர் அவ்லியாக்கள்தான்!

தொழுகையில் உடல் சுத்தம், இடம் சுத்தம், கிப்லாவை முன்னோக்குதல் ஈறாக இன்னபிற ஷர்த்துக்களையும், பர்ழுகளையும், சுன்னத்துகளையும் கற்றுத் தருகின்றனர் ஆலிம்கள்!

ஆனால் தொழுகையின் போது உளத் தூய்மையாக இருக்க வேண்டுவது குறித்துக் கற்றுத் தருவோர் இறைநேசர்களன்றோ? கற்றுத் தருவதோட அதற்கான பக்குவ நிலையை ஊட்டுபவர்களும் அவர்களே!

துரு ஏறிவிட்டஇரும்பை நெருப்பு உலையில்வைத்து துருவை அகற்றலாம். ஆனால் இருளால் சூழ்ந்து அக அறிவை இழந்துவிட்ட இதயத்தை என்ன செய்வது? அக்காரிருளை அகற்றிட இறைநேசர்தம் தோழமை அவசியம்.

இறைநேயப் பெருமக்களின் சகவாசமும் அவர்களது அருட்நிறை பார்வையும் கண நேரத்தில் மனித மனங்களின் மருவினைப் போக்கி அகத்தெளிவினை அள்ளி வழங்கிய வரலாறுகள் ஏராளம்!

**ஷெய்குனா ஹலரத்**

இப்படி இறைவனால் மனுக்குலத்திற்கு கருணையாய் வழங்கப்பட்ட இறைநேச பெருமக்களுள் பல நூற்றுக்கணக்கானோர் பிறந்த – வளர்ந்த வாழ்ந்த பேரூர் காயல்பட்டணம்.

www.sufimanzil.org

பண்டைய காலம் முதற் கொண்டு வகையான வரலாற்றுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக விளங்கி வரும் காயல்பட்டணத்தில் தோன்றி மறைந்த இறைநேசர்களது பட்டியலைத் தயாரிப்பது என்றால் அதுவே மகத்தானதோர் பணியாக அமையும்.

இப்பட்டியலில் சிறப்பானதோர் இடத்தினைப் பெற்று நிறைவானதோர் வாழ்வினை மேற்கொண்ட பெருந்தகைதான் நம் கண்ணியத்திற்குரிய அல் ஆரிபுபில்லாஹ் அல்முஹிப்பர்ரஸூல் அல்லாமா அஷ்ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஸூபி ஹலரத் கத்தஸ்ல்லாஹுஸிர்ரஹுல் அஸீஸ் அவர்கள்!

தமிழகம், கேரளம் மட்டுமின்றி ஈழத் திருநாட்டில் மற்றும் அன்னாரைத் தெரிந்தோரெல்லாம் கண்ணியத்தொடு – அன்பொடு '**ஸூபி ஹலரத்**' என்று அழைக்கப்பட்ட இப்பெருமகனார் - காயல்பட்டணத்தின் பெருமைக்குரிய கம்பெனியார் குடும்பத்தில் ஹிஜ்ரி 1322 ம் ஆண்டு C.A.K..அகமது முஹ்யித்தீன் - முஹம்மது இபுராஹீம் நாச்சி தம்பதியருக்கு கடைசிக் குழந்தையாகப் பிறந்தார்கள்.

**ஷெய்குனா அவர்களின் வம்சப் பரம்பரை** :

வள்ளல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வகையானவாழ்வில் ஒன்றாக இணைந்து அவர்களின் சுக துக்கங்களில் தோளோடு தோள் நின்ற, இஸ்லாமிய வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் போற்றிப் புகழப்படுகின்ற பெருமகனார் செய்யிதினா அபூபக்கர் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களின் 39 வது தலைமுறையில் பூவுலகம் பெற்றெடுத்த புனிதப் பெருமகனார் எங்கள் ஷெய்குனா அவர்கள.; அகத்துறை வென்ற அந்த ஆன்மீகப் பெருவள்ளலது வமிசப் பரம்பரைப் பட்டியல் இதோ :

1.செய்யிதினா அபுபக்கர் 2.அப்துல்லாஹ் 3.ஸாஈது 4. ஸஃது 5.இஸ்மாயீல் 6.ஈஸா 7.இல்யாஸ் 8.அப்துல் கரீம் 9.இப்ராஹீம் 10.ஹுசைன் 11.ஜாபிர் 12.அஹ்மது 13.ஸாலிம் 14.ஸாலிஹ் 15.ஜகரிய்யா 16.அப்துல் கரீம் 17.மகுதூம் 18.ஹாஷிம் என்ற பெயரில் பிரபலமான உமர் 19.ஸுபைர் 20.ஹுஸைன் அப்துல்லாஹ் 21.முஹம்மது 22.ஷெய்கு மகுதூம் 23.முஹம்மது கில்ஜீ மிஸ்ரி காஹிரி 24.ஹிழ்று 25.ஷிஹாபுத்தீன் 26.அல்ஹாஜ்ஜுல் ஹரமைன் அஹ்மது 27.முஹம்மது 28.அஹ்மது 29.முகம்மது 30.மகுதூம் 31.அப்துல் காதிர் 32.அஹ்மது மீரான் சாஹிபு 33.மீரான் லெப்பை 34.அஹ்மது தம்பி 35.மணிப்பாட்டு மரைக்காயர் என்று அறியப்பட்ட முஹம்மது இஸ்மாயீல் மரைக்காயர் 36.மகுதூம் முகம்மது 37.முஹம்மது இஸ்மாயீல் 38.சின்ன அஹமது முஹ்யித்தீன் 39.ஷெய்குனா ஷெய்குல் காமில் ஷெய்கு அப்துல் காதிர் காதிரி காஹிரி.

**ஷெய்குனா அவர்களின் கல்வி**:

ஷெய்குனா அவர்களை சிறப்பானதொரு ஹாபிழாக்கிப் பார்க்க வேண்டுமென்பது அன்னாரது பெற்றோர்களின் வேணவா. எனவே அவர்களுக்கு ஆரம்பக் கல்வியை உள்ளூர் உலமாப்

பெருமக்களிடம் கற்றுக் கொடுத்த பின்னர், காயல்பட்டணத்திலேயே ஹிப்ழு மதரசாவில் அவர்கள் சேர்க்கப்பட்டனர்.

ஆனால் ஷெய்குனா அவர்களின் அவா வேறு விதமாக அமைந்திருந்தது. ஊரில் ஹாபிள்களை விட ஆலிம்களுக்கே அதிக மதிப்பு இருப்பதை கவனித்து வந்த ஹலரத் அவர்களது இளம் மனது தாமும் ஒரு ஆலிமாகிpட வேண்டும் என்பதிலேயே இலயித்திருந்ததால் ஹிப்ளில் அவர்களது முழுக் கவனமும் செல்லவில்லை.

ஷெய்குனா அவர்களுடைய விருப்பத்தைப் புரிந்துக் கொண்ட தந்தையார் அவர்களை ஓத வைக்க இணக்கம் தெரிவித்தார் ஆயினும் மகனார் வெளியூர் சென்று கல்வி கற்பதை ஏற்றுக் கொள்ளவில்லை.

உள்ளூரில் இருக்கின்ற தரமிக்க ஆலிம்களிடம் கல்வி பயிலலாமெனக் கூறினர்.மட்டுமின்றி அந்நேரத்தில் இல்மு காயல்பட்டணத்தில் தான் இருக்கிறது மற்ற இடங்களில் இல்லை என்ற கருத்தும் நிலவி வந்தது. ஆனால் எக்காரணத்தைக் கூறினாலும் ஷெய்குனா அவர்கள் தாம் வெளியூர் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் சற்றும் பின் வாங்கவில்லை. இக்காரணங்களால் அவர்களது ஹிப்ளு 8 ஜுஸ்வுகளுடன் நின்று போயிற்று!

அந்நேரத்தில் காதிரிய்யா தரீகாவின் பிரபலமான ஷெய்காக விளங்கிய கண்ணியமிகு லியாவுல் ஹக் ஸூபி நாயகம் அவர்கள் ஹைதராபாத்திலிருந்து காயல்பட்டணம் வருகை தந்தனர். செய்யிது குடும்பத்தவரான அவர்கள் மகோன்னதம் மிக்க ஒரு இறைநேசர்.

மக்கள் பலரும் தம் உள்ளக்கிடக்கைகளை அவர்களிடம் எடுத்துரைத்து நிவர்த்தி பெற்றுப் போவதைக் கவனித்து வந்த நம் ஷெய்குனா அவர்களும் தமது விருப்பத்தினை – வெளியூர் சென்று கல்வி கற்றிட கொண்டுள்ள அவாவினை அன்னாரிடம் கூறியபோது ஷெய்குனா அவர்களது கல்வித் தாகத்தினைப் புரிந்துக் கொண்ட அன்னார் உளம் பூரித்து ஷெய்குனா அவர்களது பெற்றோரிடமும் உறவினரிடமும் தாமே நிலைமையை எடுத்துரைத்து அவர்களின் ஒருங்கிணைந்த சம்மதத்தைப் பெற்றுத் தந்ததோடு ஊர் எல்லை வரை வந்து அன்போடு ஷெய்குனா அவர்களை உச்சி முகர்ந்து வழியனுப்பி வைத்தனர்.

இதற்கு மத்தியில் இளைஞர் முதல் முதியோர்வரை பலதரப்பட்டோர் லியாவுல் ஹக் ஸூபி நாயகத்திடம் ஞான தீட்சை – பைஅத் பெற்றுச் செல்வதைக் கண்ட இளவல் ஷெய்குனா தமக்கும் பைஅத் தருமாறு வேண்டி நிற்க, அவர்கள் சொன்னார்கள் '**என்னை விட மகத்தான வேறொருவர் தங்களுக்கு அப்பெரும் பாக்கியத்தினை தந்தருள் புரிவார்கள். காலம் வரும் காத்திருங்கள்**!'

பிற்காலத்தில் ஹைதராபாத் வழங்கிய ஞானப் பெருவள்ளலிடம் ஷெய்குனா பைஅத்தும் கிலாபத்தும் பெறவிருக்கிறார்கள் என்பதை இப்படிச் சுட்டிக் காட்டினார்கள் லியாவுல் ஹக் ஸூபி நாயகமவர்கள்!

தம் தோழராம் ஹஸன் மௌலானா என்பாருடன் கல்வி கற்றிடப் புறப்பட்டுச் சென்ற ஷெய்குனா சென்னை வந்து ஜமாலிய்யா அரபிக் கல்லூhயிpல் சேர்ந்தார்கள். கண்ணியமிகு மதார் சாகிபு ஆலிம் அவர்கள் அப்போது அங்கே முதல்வராகப் பணியாற்றி வந்தார்கள்.

ஷெய்குனா அவர்களது கல்வித் தாகம் மென்மேலும் அதிகரிக்கவே அங்கிருந்து பொதக்குடி வந்து அந்நூருல் முஹம்மதிய்யி அரபிக் கல்லூரியில் சேர்ந்தார்கள். ஆஷிகுர் ரசூல், கன்சுத்தகாயிகு, **ஷெய்குல் காமில் அப்துல் கரீம்** குத்திஸ ஸிர்ருஹுஅவர்கள் அங்கே முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள்.

ஷெய்குனா அப்துல் கரீம் ஹலரத் அவர்களின் தனியன்புக்குப் பாத்திரமான மாணவராகத் திகழ்ந்தார்கள். கல்வி கற்கின்ற காலத்திலேயே அவர்கள் மிக்கத் திறமையும், ஒழுக்கமும், பெற்றவர்களாகவும், நற்குணமும், நல்லியல்புகளும் கைவரப் பெற்றவர்களாகவும் விளங்கி வந்ததோடு ஒவ்வொரு ஆண்டும் வகுப்பிலேயே முதல் மாணவராகவும் தேறினார்கள்.

அக்காலத்தில் பொதக்குடி மதரசாவில் தஹ்ஸீல் வகுப்பில் தேறிய மாணவர்களுக்கு ஸனது வழங்கும் வழக்கமில்லை. ஆயினும் ஹிஜ்ரி 1345ல் அப்துல் கரீம் ஹலரத் திடீரென இறையடி சேர்ந்த பின்னர் ஸனது வழங்குதல் ஏற்படுத்தப்பட்டது.

அதன்படி கல்லூரியின் பழைய மாணவரான ஷெய்குனா அவர்களுக்கு 1349ல் அப்போதைய கல்லூரி முதல்வர் முஹம்மது அப்துர்ரஹ்மான் இப்னு முஹம்மது ரஜப் ஆலிம் அவர்களால் மௌலவி ஆலிம் பாஸில் நூரி ஸனது வழங்கப்பட்டது.

**அஹ்மது மீரான் ஸூபி வெள்ளி ஆலிம் அவர்கள்:**

இலங்கை காத்தான் குடியில் முகம்மது தம்பி ஆலிம் ஹாஜியார் - மரியம் உம்மா ஆகியோரின் செல்வப் புதல்வராம் அகமது மீரான் ஸூபி வெள்ளி ஆலிம் அவர்கள் நம் ஷெய்குனா பொதக்குடி மதரசாவில் கல்வி பயிலச் சேர்ந்த மறு ஆண்டு பொதக்குடி வந்தார்கள். இருவரும் உற்ற தோழராயினர். ஷெய்குனாவை விட மூத்தவராக இருந்தாலும் இருவரும் ஒத்த மனமுடையோராக – கல்வி ஆர்வம் மிக்கோராக – ஞானத்தை தேடும் ஆர்வலர்களாக – உற்ற நண்பர்களாக – சகோதரர்களாக வாழ்ந்தனர்.

மேன்மக்களை மேன்மக்களே நன்கறிவர்! ஒரு இறைநேசப் பெருமகனாரை மற்றொரு இறைநேசரே நன்கறிவார் அகமியத்தைப் புரிந்துக் கொள்வார்!

இருவரும் பிற்காலத்தில் ஒன்றாக சம்சியாபாத் சென்று ஞானப் பெருவேந்தர் முகம்மது அப்துல் காதிர் குத்திஸ ஸிர்ருஹுஅவர்களிடம் கிலாபத் பெற இருந்த காரணத்தினால் அல்லாஹ் இவ்விருவாதம் தம் மனதையும் ஒரே நோக்கில் செல்லக் கூடியதாக ஆக்கி வைத்தான் போலும்!

அகமது மீரான் ஸூபி அவர்கள் 1930 ல் அருட்கவி அப்துர் ரஹ்மான் ஆலிம் அவர்களுடைய மகளார் செய்னம்பு உம்மா என்பாரை மணமுடித்து நல்லற வாழ்வு வாழ்ந்து

1952 அக்டோபர் 2ம் நாள் ஞாயிறு இசாவுக்குப் பின் இறையடி சேர்ந்தார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்) அவர்களது பொன்னுடலம் அவர்களது இல்லத்திலேயே நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஷெய்குனா பொதக்குடி மதராசாவில் ஓதி முடித்தாகிவிட்டது. தோழர் அகமது மீரான் ஸூபியவர்கள் ஓதி முடிக்க ஓராண்டு பாக்கி இருந்தது. தோழரை விட்டுப் பிரிய மனமில்லாததோடு காமில் வலி அப்துல் கரீம் ஹலரத் அவர்களிடம் தங்கி இருந்து வேண்டிய பணிவிடைகள் செய்து பாக்கியம் பெற்றிட வேண்டுமென்ற ஆசையும் நெஞ்சம் நிறைய இருந்தது. அத்தோட முஹ்யித்தீன் இப்னு அரபி (ரலியல்லாஹுஅன்ஹு) அவர்களுடைய ஞான விளக்கப் பெருநூல் புஸூஸுல் ஹிகமை அப்துல் கரீம் ஹலரத்திடமே ஓதிட வேண்டுமென்ற எண்ணமும் கொண்டிருந்தார்கள் ஷெய்குனா அவர்கள்!

ஒரு ஞானவானின் நெஞ்சத்து எழுத்தை மற்றொரு ஞானவானால் படித்திடவா முடியாது? ஷெய்குனா அவர்களின் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட அப்துல் கரீம் ஹலரத் ஷெய்குனாவை தமது உதவியாளராக நியமித்துக் கொண்டு மதராசாவில் தாம் இல்லாத வேளைகளில் தமது பாடங்களை நடத்த அனுமதி கொடுத்து தமது அறையிலேயே அவர்களைத் தங்க வைத்துக் கொண்டார்கள். காமில் வலியின் அருகிலிருக்கும் பாக்கியத்தைப் பெரும் எபேறாகக் கருதி அவர்களுக்கு ஊழியம் புரிவதிலும் அவர்களிடமிருந்து ஞான அமுதைப் பருகுவதிலும் பேரின்பம் கண்டார்கள் ஷெய்குனா.

**ஹைதராபாத் ஸூபி ஹலரத் அவர்கள்:**

ஷெய்குனா அப்துல் கரீம் ஹலரத் அவர்களின் ஊழியத்தில் இருக்கின்ற சந்தர்ப்பத்தில்தான் அப்துல் கரீம் ஹலரத்தின் உஸ்தாது சென்னை ஜமாலிய்யா அரபிக் கல்லூரி முதல்வர் முஹம்மது மதார் சாகிபு ஸூபி திடீரென இறைவனடி சேர்ந்து விட்ட செய்தியை அறிகின்ற அப்துல் கரீம் ஹலரத் ஷெய்குனாவுடன் சென்னை சென்று மதார் சாகிபு ஸூபியவர்களை ஸியாரத் செய்து விட்டு சென்னையில் தங்கி இருந்த இமாமுல் ஆரிபீன் ஸுல்தானுல் வாயிழீன் பஹ்ருல் ஹகாயிகு வத்தகாயிகு ரயீசுல் மஜாதீப் ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் குத்திஸ ஸிர்ருஹு அவர்களை கண்டு தமது மதரசாவிற்கு வருகை தந்திட அழைப்பு விடுத்தனர். இவ்வழைப்பினை ஏற்றுக்கொண்ட அப்பெரு மகனார் பொதக்குடிக்கு வருகை தந்திட இசைந்தனர்.

ஹைதராபாத் ஞானப் பெருமகான் ஷாஹ் வலியுல்லாஹ் திஹ்லவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களுடைய நான்காவது கலீபா மட்டுமின்றி தமிழ் கூறும் நல்லுலகின் தலை சிறந்த பல பெரியார்களுக்கு பைஅத்து வழங்கி உள்ளனர். அன்னாரிடம் பைஅத்துப் பெற்று பாக்கியம் பெற்ற சில குறிபிடத்தக்கவர்கள்:

சென்னை ஜமாலிய்யா அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வர் மௌலானா மௌலவி மதார் சாகிபு ஆலிம் அவர்கள்

வேலூர் பாக்கியாத் அரபிக் கல்லூரி முன்னாள் முதல்வர் மௌலானா மௌலவி அப்துல் ஜப்பார் ஆலிம் அவர்கள்

இந்திய யுனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகம்மது இஸ்மாயீல் சாகிப்

திண்டுக்கல் மௌலானா மௌலவி அமீர் பாட்சா ஆலிம் அவர்கள்

தென்னிந்திய இஷாஅத்துல் இஸ்லாம் சபை ஸ்தாபகர் தென்காசி மேடை முதலாளி அப்துர் ரஹ்மான் சாகிப்

தஞ்சை மாவட்டம் கொடிக்கால் பாளையம் அ.த.அப்துல் மஜீது ஸூபி அவர்கள்

அல்லாமா அப்துல் ஜப்பார் ஆலிமவர்கள் பெரிய ஷெய்குனா அவர்களால் கேள்வி – பதில் வடிவில் எழுதப்பட்ட '**அல்ஹக்'**என்ற உர்து நூலை அரபியில் மொழியாக்கம் செய்ததோடு அன்னாரைப் போற்றிப் புகழ்ந்து

'அலா அய்யுஹ்ஷ் ஷெய்குல் வலீ.........' என்று தொடங்கும் அரபு கஸீதா ஒன்றினை இயற்றினார்கள். அந்த கஸீதாவில் ஹைதராபாத் மெஞ்ஞானப் பெருவேந்தரைக் குறித்து –

மேன்மைமிக்க ஷெய்கு வலியுல்லாஹ் அவர்களே! இக்கால மார்க்க அறிஞருள் நிகரற்ற சம்பூரண பிரகாசமுடைய சூரியனாகத் தாங்கள் இலங்குகின்றீர்கள். அகமியங்களுடைய ஞானப் பெருமான் தாங்கள். வலிமை நிறைந்த ரப்புடைய மழ்ஹர் தாங்கள்!

ஷெய்குனா அப்துல் காதிர் ஜீலானி அவர்களுடைய திருப்பெயர் தாங்கி இருக்கிறீர்கள். எந்த அரசனும் பெரிய மனிதனும் சீமானும் தர இயலாத மாபெரும் பேரின்பப் பாக்கியங்களை எங்களுக்கு வழங்கி உள்ளீர்கள்.

உங்களிடத்தில் ஔலியாக்களுடைய ரூஹ்களெல்லாம் வருகின்றன! எனப் போற்றிப் பாடுகிறார்கள், அப்துல் ஜப்பார் ஹலரத்!

ஷெய்கு படே சாகிபு எனும் குத்பு ஷைய்கு அஹ்மது பதுருத்தீன் அவர்கள் நமது ஞானப் பெரு வள்ளலுக்கு தமது சென்னை இல்லத்தில் ராஜோபசார விருந்தொன்று அளித்த போது தரையில் அன்னார் நடந்து வருவதற்காக விலை மிகுந்த துணி விரித்து வரவேற்பு நல்கியதோடு அவர்களை ஆரத்தழுவி, 'உங்களை கௌதாக்கி விட்டான்! உங்களை கௌதாக்கி விட்டான்!' என பரவேசத்தோடு கூறினார்கள்.

**பைஅத்தும் கிலாபத்தும்**

'**தற்காலத்தின் ஜுனைதுல் பக்தாதி**!' என்று புகழப்பட்ட ஞான மகானைப் பற்றி கேள்வியுற்றிருந்த நம் ஷெய்குனா அவர்களைக் கண்ணாரக் கண்டு பைஅத்து பெற்றிட வேண்டுமென பேரார்வம் கொண்டிருந்தனர்.

அவர்கள் பொதக்குடிக்கு வருகை தந்தபோது அன்னாரது வருகை குறித்து படே சாகிபு ஹலரத் அப்துல் கரீம் ஹலரத்தவர்களுக்கு முஹ்யித்தீன் வருகிறார். பலனடைந்து கொள்வீர்களாக! ஏன்று தகவல் கொடுத்தார்கள்.

பொதக்குடி மதரசாவிற்கு வருகை தந்த அன்னாரை கண்ணியத்தோடு வரவேற்ற அப்துல் கரீம் ஹலரத் மாணவர்களுக்கு விடுமுறையளித்து மாணவர்களை அப்பேரின்ப ஞானப் பெரு வள்ளலிடம் முஸாபஹா செய்திடப் பணித்தனர்.

ஆனால் அம்மகான் தாமே முன்வந்து ஒவ்வொரு மாணவரிடமாக சென்று நம் ஷெய்குனாவிடம் வந்த போது உர்துவில் 'நீங்கள் ஹைதராபாத் வாருங்கள்'; என்று கூப்பிட்டார்கள். அகமது மீரான் ஸூபி வெள்ளி ஆலிமவர்களுக்கு உர்து தெரியாதென்பதை தமது ஞானப் பார்வையால் புரிந்துக் கொண்டு 'அதுரீதுல் மஜீஅ இலா ஹைதராபாத்!' எனக் கேட்கின்றனர். உளம் பூரித்த தோழர்கள் முழுமனதுடன் அவ்வழைப்பினை ஏற்றுக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை நினைவு கூறுகின்ற ஷெய்குனா நான் அப்பெருமகனாரிடம் தனியாக உரையாட வேண்டுமென நினைத்திருந்தேன். அந்த எண்ணத்துடனேயே முஸாபஹா செய்தேன் அன்னாரும் என்னை ஹைதராபாத்திற்கு வரும்படிச் சொன்னார்கள் என்பார்கள்.

அவர்கள் ஹைதராபாத் சென்ற சிறிது காலத்திற்குப் பின்னர் ஷெய்குனா அவர்களும் தோழர் வெள்ளி ஆலிமவர்களுமாக 'நாங்கள் எப்போது தங்களின் --சன்னிதானத்திற்கு வர வேண்டு'மெனக் கேட்டுக் கடிதம் எழுதினர். **'இந்தக் கதவு எப்பொழுதும் திறந்தே இருக்கும் எப்போது வேண்டுமானாலும் வரலாம்';** என்று பதில் வந்தது.

இருவரும் ஹைதராபாத் புறப்பட்டுச் சென்றனர். முன்பின் அறிமுகமில்லாத ஊரில் இருவரும் ரயிலை விட்டிறங்கி அங்கே நின்ற போலீஸ் ஒருவரிடம் ஹலரத் அவர்களது முகவரியைக் காட்டி வழிகேட்டனர். அவர்களை அவரே அழைத்துச் சென்றார்.

ஹலரத் அவர்களின் இல்லத்தின் முன்னே நின்று குரல் கொடுத்தனர். அன்னார் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து 'கை கழுகி உள்ளே வாருங்கள்' என கூறி சென்றனர். இருவரும் கை கழுகி உள்ளே சென்றனர். அங்கோர் இன்ப அதிர்ச்சி!

மூவருக்கு உணவு பரிமாறி வைக்கப்பட்டிருந்தது இரண்டு தட்டில் சோறு. ஒரு தட்டில் ரொட்டி. ஹைதராபாத் ஞான வள்ளல் ரொட்டிதான் உண்பார்கள். மூவரும் பசியாறினர்.

அங்கே ஆறு மாதங்கள் வரை இருவரும் தங்கி இருந்து ஞான வாரிதியாய் விளங்கிய அந்த மெஞ்ஞான போதகரிடமிருந்து அள்ளக் குறையா ஞானப் பேரமுதை அருந்தி அருந்தி மகிழ்வுற்றனர்.

விடை பெறும் காலம் வந்தது ஹலரத் அவர்கள் இருவருக்கும் பைஅத் கொடுத்ததோடு தமது கலீபாக்களாக இருவரையும் ஆசீர்வதித்து தொழில் வர்த்தகம் ஆகியவற்றைவிட இந்த ஞானப் பெருவழியை தேர்ந்தெடுத்து செயலாற்றுமாறு உபதேசித்து வழி அனுப்பி வைத்தனர்.

நமது ஷெய்குனா அவர்களுக்கு ஹைதராபாத் ஹலரத் அவர்கள் காதிரிய்யா, நக்ஷபந்திய்யா, ரிபாஇய்யா, ஜிஷ்திய்யா, முஜத்திய்யா ஆகிய தரீகுகளின் ஜதுபுசுலூக்கு வழிகளில் பைஅத்தும் கிலாபத்தும் வழங்கி உள்ளனர்.

காதரிpய்யாத் தரீகாவின் ஷெய்குமார்களில் பெருமானார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களிலிருந்து 40-வது தலைமுறையிலும்,

காதிரிய்யா அக்பரிய்யாவின் ஷெய்குமார்களில் நாயகமவர்களிடமிருந்து 35-வது தலைமுறையிலும்,

நக்ஷபக்திய்யா ஊலாவின் ஷெய்குமார்களில் நாயகமவர்களிடமிருந்து 33 –வது தலைமுறையிலும்,

நக்ஷபக்திய்யா தானியாவின் ஷெய்குமார்களில் நாயகமவர்களிடமிருந்து 33– வது தலைமுறையிலும் நமது ஷெய்குனா அவர்கள் வருகிறார்கள்.

**திருமணம்:**

ஹிஜ்ரி 1349 ஜமாதுல் அவ்வல் பிறை 22 புதன் கிழமை (15-10-1930) அன்று ஷெய்குனா அவர்கள் தோல்சாப்பு முகம்மது அப்துல்லா நாச்சி என்ற பெண்ணரசியை மணம் புரிந்தனர். இம்மண விழா நிகழ்ச்சியில் ஷெய்குனா அவர்களின் ஞானத் தந்தை ஷெய்குனா ஹைதராபாத் ஸூபி ஹலரத் அவர்களும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். அப்போது அவர்கள் ஷெய்குனா அவர்களிடம் உங்களுக்கு இன்னொரு மாலை காத்திருக்கிறது என்றனர்.

ஷெய்குனா அவர்களும் பெண்ணரசி அப்துல்லா நாச்சியவர்களும் கொண்ட இனிய இல்லற வாழ்வில் ஆண் மகவொன்றினைப் பெற்றெடுத்தனர். அவருக்குத் தம் தந்தையாரின் பெயரான அகமது முஹ்யித்தீன் என்ற பெயரினை இட்டு மகிழ்ந்தார்கள் ஷெய்குனா அவர்கள்!

1932ல் முதல் மனைவி இறையடி சேர்ந்துவிடவே தமது குருநாதருடைய முன்னறிவிப்பின்படி இரண்டாவதாக தோல்சாப்பு மகுதூம் பாத்திமா எனும் மாதர்கரசியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு முகம்மது அப்துல்லா நாச்சி முகம்மது இப்ராஹீம் நாச்சி முகம்மது பாத்திமா என்று மூன்று பெண் மக்கள் பிறந்தனர். இவர்களை முறையே கத்தீபு M.S. அகமது முஹ்யித்தீன் மௌலவி M.M.செய்யிது முஹம்மது ஆலிம் பாகவி O.V..முஹயித்தீன் தம்பி ஆகியோர் மணம் முடித்துள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் இருந்துக் கொண்டு ஷெய்குனா அவர்கள் விட்டுச் சென்ற பணியினை சிறப்புற ஆற்றிவரும் அன்னாரின் கலீபாக்களுள் ஒருவராகத் திகழுகின்றார்கள். ஷெய்குனா அவர்களின் இரண்டாவது மருகர் மௌலவி எம்.எம்.செய்யிது முஹம்மது ஆலிம் பாகவி அவர்கள்!

(ஷெய்குனா அவர்களின் ஏகப் புதல்வர் அஹ்மது முஹியித்தீன் அவர்கள் 24-2-1983 வியாழக்கிழமை இரவு திடீரென தாறுல் பகாவின் சுந்தர வாழ்வினை ஏற்றனர். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன் அல்லாஹ் அவரது பிழைகள் பொறுத்து சுவனப் பெருவாழ்வினைத் தந்தருள் புரிவானாக! ஆமீன்)

**கல்வத்:**

ஷெய்குனா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வியாபாரங்கள் செய்தனர். ஆரம்பத்தில் அவை மிக நன்றாக செழிப்போடு நடந்து வரும். ஆனால் சீக்கிரமே அவை பயனளிக்காமல் போய்விடும். இச்சூழ்நிலையில் அவர்களுடைய இரண்டாவது திருமணமும் முடிகிறது.

வியாபாரங்களில் தொடர்ந்து நஷ்டமும் அதனால் மன நிம்மதியும் இழக்கவே வியாபாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு தமது ஆசானின் உபதேசப்படி ஞாலமக்களுக்கு ஞானம் பயிறு;றுவிக்க அந்த ஞானப்பிதா தன் பேரொளிப் பார்வையினைத் திருப்பியது. அகத்துறை துலக்கும் இந்த ஆன்மீகப் பணியிலேயே அவர்கள் தம் வாழ்வு முழுவதையும் செலவிட்டனர்.

அதற்கு முன்னோடியாக கல்வத்-தனித்திருந்து இறையோனை திக்று செய்வதற்காகவும் தன் ஆன்மீகச் சகோதரர் இலங்கை அட்டாளச்சேனை அகமது மீரான் ஸூபி அவர்களைச் சந்திப்பதற்காகவும் 1946ம் ஆண்டு இலங்கை சென்றார்கள். அப்போது அகமது மீரான் ஸூபியவர்கள் கிராங்குளம் எனுமிடத்திலுள்ள தோட்டத்தில் கல்வத் இருப்பதையறிந்து தாமும் அங்கு சென்று இருவருமாக ஒன்றரை மாதங்கள் வரை கல்வத்தில் இருந்தனர். பின் காத்தான்குடி, ஏறாவூர், கொழும்பு முதலிய இடங்களுக்குச் சென்று விட்டு காயல்பட்டினம் வந்தனர்.

பேரின்பத்தைத் தேடி அலைகின்ற உள்ளத்திற்கு உலகத்துச் சிற்றின்பங்கள் எம்மாத்திரம்? ஷெய்குனா இறைதியானத்திலேயே தம் முழுநேரத்தையும் செலவிட்டனர். ஊரில் அவர்களுக்கு முழுநேரமும் தம்மை மறந்த நிலையில் தானெனும் அன்னியத்தை விட்டொழித்த நிலையில் ஹக்கைத் தேடுகின்ற பரமானத்த நிலையில் மூழ்கிப் போக சந்தர்ப்பம் சரியாக வாய்க்காததால் ஊராரிடமோ குடும்பத்தாரிடமோ ஏதும் சொல்லிக் கொள்ளாமல் தனிவழி புறப்பட்டுப் போயினர்.

தன்னந்தனியராகப் புறப்பட்டுச் சென்ற அத்தகமையாளர் தஞ்சை மாவட்டம் கொடிக்கால்பாளையத்தில் இருந்த தமது ஆத்மீகச் சகோதரர் அ.த.அப்துல் மஜீது

ஸூபியவர்களிடம் வந்து சேர்ந்து அவர்களுடைய தோட்டத்திலேயே சில காலம் கல்வத்தில் இருந்தார்கள்.

பின்னர் மாதிஹுர் ரஸூல் ஷெய்கு சதகக்கதுல்லாஹ் அப்பா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹலரத் மீக்காயீல் அலைஹிவஸல்லம் அவர்களை நேரில் சந்தித்து உரையாடியதும் கல்லும் கசிந்துருக உரையாற்றியதுமான காயல்பட்டணம் இரட்டைக்குளம் பள்ளிவாசலில் ஓராண்டு காலம் கல்வத் இருந்தார்கள்.

1949ல் மீண்டும் ஷெய்குனா அவர்கள் இலங்கை சென்று சம்மாங்கோட்டுப் பள்ளிவாசலில் சில மாதங்கள் இமாமத் பணியினை ஏற்று செவ்வனே செயலாற்றி வந்தனர். ஆயினும் சுதந்திரமாக இறைவனைத் தியானிப்பதற்கும் மக்களுக்கு ஞானபோத விளக்கம் செய்வதற்கும் இப்பணி தடையாக இருப்பதாகத் தோன்றவே அப்பணியிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மெஞ்ஞானப் போதங்களை அள்ளி வழங்கி மாசு படிந்த உள்ளங்களை சுத்தப்படுத்தி ஆன்மீக ஒளியேற்றி வைத்தார்கள்.

**முராகபா பற்றிய விளக்கம்:**

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து இயற்றும் தவநிலையான முராகபா மூலம் பதவி - இறை சன்னிதானத்தில் உயர் மர்தபாவினை ஆன்றோர்கள் பெற்றனர். உயர்வுக்குரிய – உயர்வைப் பெற்றுத் தருகிற இந்த முராகபாவை எப்படிச் செய்ய வேண்டும்? என்பது பற்றி ஷெய்குனா அவர்கள் தமது ஸில்ஸிலாவில் முராகபா என்ற பகுதியில் மிகத் தெளிவாக கீழ்கண்டவாறு சொல்லித் தருகிறார்கள்.

தாலிபு அதிகபசி தாகம் இல்லாமலும் வயிறு நிரம்பாலும் இருக்கும் போது ஓசைகளற்ற தனித்த இடத்தில் அமர்ந்து (இரவின் மூன்றில் இரு பகுதி கழிந்த பின் ஓசைகள் அடங்கிவிடும். எனவே இந்த நேரத்தைப் பயன்படுத்துவது சிறப்பு) கண்ணைப் பொத்தி இடது மார்புக்குக் கீழே இருக்கிற இதயக் கமலத்தை மனக்கண்ணால் கூர்ந்து நோக்கி அல்லாஹ் அல்லாஹ் என மனதால் சொல்ல வேண்டும். தூக்கம் வருமாயின் வாயாலும் கூறலாம்.

அல்லாஹ் என்ற வார்த்தை, மூச்சு வருவது போவது எத்தனை தடவைகள் என்பவற்றில் சிந்தனையை செலுத்தக் கூடாது.

இவ்வாறு முழு வைராக்கியத்துடன் செய்யச் செய்ய தன்னை மறந்து உணர்வற்று ஸ்தம்பித்துப் போகும். இந்நிலைதான் முராகபா – சமாதி நிலை!

இந்நிலைக்குப் பின்னர் தான் முஷாஹதா – காட்சி ஏற்படும். முஷாஹதா பெரும் முயற்சிக்குப் பின்னர் தான் ஏற்படும். முயற்சி இல்லாமல் காட்சி நிலை ஏற்படாது. முடிந்தவரை அதிக நேரத்தை திக்றில் செலவழிக்க வேண்டும். குறைந்தது 15 நிமிட நேரமாவது திக்றுச் செய்ய வேண்டும்.

இரண்டாவது தன்னை மறப்பது, இதற்கு தனது எல்லா நிலைகளிலும் உட்காரும்போதும், நிற்கும்போதும்இ தூங்கும்போதும், குடிக்கும்போதும், புசிக்கும் போதும் மற்ற வேலைகளை செய்யும் போதும் தன் இயக்கத்தை தியானத்தின்பால் திருப்பிவிட வேண்டும்.

தான் செய்யும் வேலைகளில் மனதை முழுமூச்சாக செலுத்தி விட்டால் பின்னர் தனித்திருந்து திக்று செய்கின்றபோது சிந்தனை அந்த வேலைகளிலேயே இழுபட்டுவிடும்.

உலக சம்பந்தமான எத்தொழிலில் ஈடுபட்டாலும் இறைவனின் எண்ணத்திலேயே இருக்கிற மகான்களைக் குறித்து 'வியாபாரமும் கொடுக்கல் வாங்கலும் அவர்களை அல்லாஹ்வின் நினைப்பை விட்டு பராக்காக்காது' என்று இறைவன் புகழுகின்றான். முராகபவின் நிலைபற்றி மிகச் சுருக்கமாகவும், தெளிவாகவும் ஷெய்குனா அவர்கள் தருகிற விளக்கமிது!

1963- ம் ஆண்டு ஷெய்குனா அவர்கள் இஸ்லாத்தின் இறுதிக் கடமையாக ஹஜ்ஜினை காயல்பட்டணத்திலிருந்து சென்று மிகச் சிறப்புடன் நிறைவேற்றி வந்தார்கள்.

**ஞான வாரிதி தந்த ஆன்மராக நூல்கள்:**

ஷெய்குனா அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டுவது போன்று மனிதன் ஒரு கண்ணாடியைப் போன்றவன். கண்ணாடியில் அழுக்கு படிந்து விட்டால் பார்ப்பவரின் உருவத்தை அதில் காண இயலாது. கண்ணாடியில் அழுக்கு இல்லாமல் கண்ணாடி என்ற கோலமும் மறைய வேண்டும். கோலம் மறைகிற போது கோலத்தை மறக்கின்றபோது உருவம் தெளிவாகத் தெரியும்.

அதுபோன்று மனிதனுடைய மனதில் தான் என்ற அழுக்கு அகம்பாவ எண்ணம் வேரூன்றி நிற்பது வரை – தான் என்ற நினைப்பு நிறைந்திருப்பது வரை இறைவன் அந்த இதயத்தில் வெயிப்பட மாட்டான். ஆதம் நபியை கலீபாவாக தேர்ந்தெடுத்த இறைவன் அவர்களில் தன் அஸ்மாக்களை வெளிப்படுத்தியது போன்று அதற்கான அருகதையோடு மக்களைப் படைத்துள்ளான். உள்ளே இருக்கின்ற இத்தன்மைகள் வெளியே வந்து விடுமானால் அதுதான் முக்தி – சம்பூரணம்.

தான் என்ற எண்ணம் இல்லாமல் போய் விடுகின்ற போது இறைவன்பால் இவன் நெருங்கிவிட்டான் எனப் பொருள். அல்லாஹ்வின் சமூகத்தில் சென்றான் என்பது அவனது அஸ்மாக்கள் அவனிடத்தில் வெளியாக இவன் லாயக்கானவன் ஆகிவிட்டான் என்று பொருள். இப்போது இவர் முக்தி பெற்றார்.

இப்படி தத்துவ முத்துக்களை பாமரர்களும் புரிந்து கொள்ளத்தக்க விதத்தில் தெளிவாக வாரித் தந்த ஷெய்குனா அவர்கள் ஞானப் பேரமுதை அருந்தி மகிழ அற்புதமான ஞான நூற்கள் பலவற்றை எழுதியுள்ளார்கள். ஷெய்குனா அவர்கள் எழுதிய ஆன்ம நூற்கள் அக இருள் போக்கி அறிவொளி நல்கும் அற்புதமான நூற்களாகும். அவைகளாவன:

1. அத்துஹ்பத்துல் முர்ஸலா 2. அஸ்ஸுலூக்

3. ஞான தீபம் 4. அல்நக் 5.அத்தகாயிகு

6. அஸ்ராருல் கல்வத் - கல்வத்தின் ரகசியங்கள்

7. அகமியக்கண்ணாடி 8. கலிமத்துல் ஹக் 9. அல்ஹக் (கேள்வி-பதில்)

ஷெய்குனா அவர்கள் தம்மிடம் பைஅத்துப் பெறுவோருக்கு சில உபதேசங்கள் செய்வார்கள். அந்த உபதேச ரத்தினங்கள் அவர்களால் வழங்கப் பெறுகின்ற அஸ்ஸில்ஸிலத்துல் அலிய்யதுல் காதிரிய்யா வெனும் ஸில்ஸிலா கிதாபிலும் காணக் கிடைக்கிறது. அவை:

1. அல்லாஹ்வை அஞ்சி நடக்க வேண்டும்.

2. ஷரீத்தின் கட்டளைக்கு முற்றிலும் கட்டுபட வேண்டும்

3. தரீகத்தினுடைய ஒழுக்கங்களைப் பேண வேண்டும்

4. சுன்னத் ஜமாஅத்தின் கொள்கைகளுக்கு மாறுபட்ட கொள்கைகளை விட்டு விடுவதோடு, ஜனங்கள்பால் கெட்ட எண்ணம், கபடம், பொறாமை முதலிய தீய குணங்களைவிட்டு மனத்தூய்மையாக இருக்க வேண்டும்.

5. எல்லோரையும் விட தன்னைத் தாழ்வாகக் கருத வேண்டும்.

6. ஈகை பரோபகாரத்தைக் கடை பிடிக்க வேண்டும்.

'நான் அல்லாஹ்வின்பால் இரவில் தொழுததாலும், பகலில் நோன்பு வைத்ததாலும், கல்வியைக் கற்று கொடுத்ததாலும் சேர்ந்து விடவில்லை. எனினும் ஈகையும் தாழ்மையும் மனத் தூய்மையும் தான் என்னை இறைவன்பால் இணைத்தது' என்று ஷெய்குனா அப்துல் காதிர் ஜீலானி ரஹிமஹுல்லாஹ் கூறுகின்றனர்.

7. பித்அத்காரர்கள், அவ்லியாக்களை தரீக்காக்களைப் பற்றி குறைவாகப் பேசுபவர்கள், கெட்டகுணங்களை உடையோர் ஆகியவரோடு வெளிரங்கத்தில் கூட நட்புக் கொள்ளக் கூடாது

8. ஷெய்கின் பேரிலுண்டான முஹப்பத்தில் மூழ்க வேண்டும். முரீது ஜெயம் பெறுவதற்கு அடையாளம் மற்றவர்களைவிட தன் ஷெய்கைத் தெரிந்து அவரை நேசிப்பதும் அவர் கூறுவதை மனமுவந்து கேட்டு நடப்பதும் அவருடன் அவரது எல்லாக் காரியங்களிலும் இணக்கமாக இருப்பதும் வேண்டும்.

9. நற்குணங்களைக் கொண்டு பயன் பெறுவதற்காக கல்பைச் சுத்தமாக்க முயற்சிக்க வேண்டும். எல்லா சகோதரர்கள் பேரிலும் பொதுவாகவும் நமது தரீகா சகோதரர்களின் பேரில் குறிப்பாகவும் நேசம் வைக்க வேண்டும்.

**ஷெய்குனா அவர்களின் கொள்கைப் போர்:**

ஷெய்குனா அவர்கள் தமது குருநாதரின் வழியைப் பின்பற்றி வழிகேடார்களுக்கும் குழப்பக் கொள்கை படைத்தோருக்கும் ஒரு பெரும் சவாலாகவே எப்போதும் விளங்கி வந்துள்ளார்கள். தீனை விற்றுப் பிழைக்கும் வகையற்றோரின் முகமூடி கிழித்துக் கொள்ளச் செய்வதில் அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலம் அவர்கள் செய்த பணி மகத்தானது! மறுக்க முடியாதது!

ஸூபி ஹலரத் என்ற பெயரைக் கேட்டதும் தமிழகத்திலும் சரி. ஈழத்திலும் சரி. வஹ்ஹாபிகள், ஜமாஅத்தே இஸ்லாமிகள் தப்லீகர்கள், போன்ற இன்ன பிற கொள்கைக்காரர்கள் நடுங்கி வாய் பொத்திய வரலாறுகள் ஏராளம் உண்டு!

கபட வேட தாரிகளின் கூடாரங்களை கதிகலங்கச் செய்த ஷெய்குனா அவர்கள் மீது காழ்ப்பு கொண்ட குறைமதியாளர்கள் அவ்வப்போது ஏவிய கேள்விக் கணைகள் சொல்லம்புகள் ஆகியவற்றை முனை மழுங்கச் செய்ததோடு சில அறைகுறை மேதாவிகள் சொரிந்த இழிமொழிகளையும் தாங்கிக் கொண்டு தம் கருமத்தில் கண்ணாயிருந்தார்கள் எங்கள் கண்ணியத்திற்குரிய ஷெய்குனா அவர்கள்!

இப்பணிக்காகவும், இறை தியானத்திற்காகவும், இலங்கையின் பல்வேறு இடங்களிலும் காயல்பட்டிணம், தூத்துக்குடி, மேலப்பாளையம,; கேரளத்தின் பீமாபள்ளி மற்றும் பல பகுதிகளிலும் ஹிஸ்புல்லாஹ் ஸபை ஸூபி மன்ஸில் என்ற பெயரில் ஒரு அமைப்பினை ஏற்படுத்தி சிறப்பாக செயல்படவைத்தர்கள்.

தமிழ் கூறும் தீன்குலப் பெருமக்கள் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கைகளையும், மாற்றாரின் குழப்ப வாதங்களையும் தெளிவாகத் தெரிந்துக் கொண்டு செயல்பட – அதள் மூலமாக ஈருலக நல்வாழ்வினையும் பெற்றிட வேண்டுமென்ற நல்லெண்ணத்தில் பல கொள்கை விளக்க நூற்களையும் ஷெய்குனா எழுதினார்கள். அவற்றுள் குறிப்பிடத் தக்க நூற்கள்:

1. இன்ஹாருல் ஹக் - சத்தியப் பிரகடனம்

2. உலமாக்களின் உண்மை பத்வா

3. அறிவாளர்களே ஆராய்ந்து பாருங்கள்

4. காதியானி – தேவ்பந்த் சம்பாசனை

5. தப்லீக் ஜமாஅத்தில் வஹ்ஹாபியத்தின் விஷக்கிருமிகள்

6. சுவர்க்க நகைகளா? அல்ல! அது நரக விலங்குகள்

7. தன்னறிவில்லா தக்க பதிலுக்கு தகுந்த விதமாக தலையில்தட்டு

8. மவ்தூதி சாகிபும் அவரது ஜமாஅத்தே அஸ்லாமி இயக்கமும்

9. அல்முஹன்னதின் அண்டப் புழுகு

10. தப்லீக் என்றால் என்ன? 11. புலியைக் கண்டு ஓட்டம்

(மேற்கண்ட ஞான விளக்க கொள்கை விளக்க நூற்களில் பல வெளிவந்து விட்டன. சில இன்ஷா அல்லாஹ் விரைவில் வெளிவர உள்ளன. நூற்கள் தேவைப்படுவோர் ஹிஸ்புல்லாஹ் ஸபை - ஸூபி மன்ஸில் குத்துக்கல் தெரு, காயல்பட்டணம். என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.)

**மறைவு:**

இறுதி வரை எந்தவொரு தனிமனிதனுக்கும் சரி, சக்திக்கும் சரி பணியாமல் எதிர்ப்பைக் கண்டு அஞ்சவோ அல்லது பின் வாங்கவோ செய்யாமல் இழி மொழிகளை – சுடுசொற்களை கேட்டு முகம் சுளிக்காமல் சுன்னத் வல் ஜமாஅத் இமாம்களால் வகுத்துத் தரப்பட்ட நேர்வழியில் தீரத்தோடு சென்ற – வீரத்தோடு போதித்த கொள்கை முரசம் குணங்குன்று எங்கள் நேசத்திற்கும் மதிப்பிற்குமுரிய அல்லாமா ஷெய்குல் காமில் ஷெய்குனா ஹலரத் ஹிஜ்ரி 1402 புனித ரமாலான் பிறை 24 வெள்ளிக்கிழமை சுப்ஹுக்கு சற்று முன்னர் 16-7-1982 அன்று உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அந்த நேரத்திலும்கூட நேசமிக்க முரீதீன்கள் பலர் கேட்டுக் கொண்ட போதும் அன்னார் ஒத்துக் கொள்ளாமல் தொடர்ந்து நோன்பு வைத்து வந்த நிலையிலேயே எல்லாம் வல்லவனாம் ஏக இறையோன் அல்லாஹுவின் அன்பழைப்பினை ஏற்று இம்மை வாழ்வினை முடித்துக்கொண்டு மறுஉலகப் பெரு வாழ்வினைத் தொடங்கினார்கள். (இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்)

வழிகேடர்களுக்கு சிம்ம சொப்பமாக விளங்கிய ஷெய்குனா அவர்கள் எண்பது ஆண்டு காலமாக பாரில் வாழ்ந்திருந்து தீன் சேவையாற்றினார்கள்.

ஒரு பெரும் குழுவினர் செய்ய வேண்டிய மாபெரும் சேவையினை தனியொரு மனிதராக நின்று அவர்கள் ஆற்றினார்கள். அப்பெருமகனாரின் தீரமிகு சேவை மகத்தானது மட்டுமல்ல! வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதுமாகும்.

தள்ளாத வயதிலும் தளராத மனத் துணிவோடு புனித இஸ்லாத்தின் நேரான பாதையை சீராக போதித்த ஷெய்குனா அவர்களது பொன்னுடலத்தை தாங்கி நிற்கும் பாக்கியத்தை **கொழும்பு குப்பியாவத்தை மையவாடி** பெற்றுள்ளது. அன்றாடம் அந்த புனித மிகு அடக்கவிடத்தினில் கூடுகின்ற ஜனத்திரள் அவர்களது ஆன்மீக வித்தையின் அற்புதத்தினை படம் பிடித்து காட்டுகிறது!

**எளிய வாழ்வு வாழ்ந்த எங்கள் ஷெய்குனா:**

நாடறிந்த ஞான மகானாக வாழ்ந்த ஷெய்குனா அவர்களிடம் ஒரு போதினிலும் சிறிதளவு கூட படாடோபம் இருந்ததில்லை. பெருமையை, விளம்பரத்தை அவர்கள் விரும்பியதுமில்லை.வெள்ளை அல்லது வெள்ளையில் கோடுபோட்ட கைலி ஒரு பனியன,; மேலே ஒரு ஜிப்பா, ஒரு துருக்கித் தொப்பி, அதே நிறத்தில் ஒரு சால்வை! இவைகள் தான் அவர்களுடைய உடைகள். எங்கும் எந்த சந்தர்ப்பத்திலும் இந்த உடைகளுடனும், புன்னகை அரும்பி சாந்த ஒளி முகத்துடனும் தான் மகோன்னதமிக்க அம்மனிதருள் மாணிக்கத்தை கொஞ்சம் கூட அகந்தையோ, ஆணவமோ அற்ற ஞான வள்ளலை இனிய குணங்களில் இமயமாய் உயர்ந்து நின்ற எங்கள் ஷெய்குனா அவர்களை காணலாம்.

ஒரு பெரும் மகானை சந்திக்கச் செல்கின்றோம் என்ற எதிர்பார்ப்புகளுடன் ஷெய்குனா அவர்களைச் சந்திக்க வருவோர் அன்னாரின் எளிமைத் தோற்றத்தையும் வயது வித்தியாசங்களையோ ஏழை பணக்காரன் என்ற பாகுபாட்டையோ பாராமல் எல்லோருடனும் கனிவு ததும்ப இனிமை நிறைய உரையாடுகின்ற, போதனை புரிகின்ற பாங்கை மன விசாலத்தைக் கண்டு அதிசயத்துப் போய் விடுவார்!

கொழும்பில் அவர்கள் தங்குமிடத்திற்குச் சென்றால் மிகத் தெளிவாக அன்னாரது எளிய வாழ்வு தெரிய வரும். ஒரு சிறிய அறை! அதனுள் ஒரு மூலையில் இரண்டொரு கைலிகள் ஜிப்பாக்கள் கயிற்றில் தொங்கும். சில பாய்கள் விரிக்கப்பட்டு ஒரு ஓரத்தில் இரண்டு சிறு தலையணைகள் அறையின் ஒரு புறத்தில் ஏராளமான கிதாபுகள்! இவைதான் அவர்களுடைய சொத்து!

எப்போதும் கிதாபு பார்த்துக் கொண்டிருப்பார்கள் அல்லது வருகை தருவோருக்கு ஞான விளக்கங்கள், கொள்கை விளக்கங்களைப் போதிப்பதும் அவர்களுடைய சந்தேகங்களுக்கு அறிவுப் பூர்வமான – ஆதாரங்களைத் தருவதுமாகவே அவர்களைக் காணலாம்.

**இலங்கை ஏட்டின் புகழாரம்:**

இலங்கையின் புகழ் பெற்ற தமிழ் நாளேடான தினகரன் '**ஆலமுல் இஸ்லாம்**' பகுதியில் ஷெய்குனா அவர்கள் மறைந்த நாற்பதாம் நாள் கத்முல் குர்ஆன் விழாவினையொட்டி சிறப்புக் கட்டுரை ஒன்று வெளியிட்டது.அக்கட்டுரையில் ஈழத்தில் ஷெய்குனா அவர்கள் ஆற்றிய அரும் பணி பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த கட்டுரையின் சுருக்கம்இதோ:

'பஸ்அலூ அஹ்லத் திக்ரி இன்குன்தும் லா தஃலமூன்' என்ற இறை வசனம் நீங்கள் அறியாதவராக இருந்தால் இறைதியான சிந்தையுடைய அறிஞர்களிடம் கேட்டுத் தெரிந்துக் கொள்வீர்களாக! என்ற பொருள் தருவதை உணர்ந்த எண்ணற்ற முஸ்லிம்களால் '**ஷெய்க்**' என்றும் '**ஸூபி ஹலரத்**' என்றும் அழைக்கப்பட்ட பெரியார் மௌலானா மௌலவி அல் ஆலிமுல் பாஜில் அல்ஹாஜ் ஷெய்க் அப்துல் காதிர் ஸூபி ஸித்தீகி காதிரி காஹிரி நக்ஷபந்தி அவர்கள்!

தமிழகத்திலிருந்து ஈழத்திற்கு முன்னைய காலங்களில் சன்மார்க்க விஜயம் செய்து இஸ்லாமிய சமயப் பணியாற்றி இந்த நாட்டில் இஸ்லாமிய உணர்வு தழைத்தோங்க வழிகோலிய மாhக்க உலமாக்களை நாம் மறக்க முடியாது. அத்தகைய சாலிஹான சமயப் பெரியார்களில் காயல்பட்டணத்தைச் சேர்ந்த இந்த ஸூபி ஹஸரத் குறிப்பிடத் தகுந்த ஒருவராவார்.

தற்காலத்தில் நம்மவர் நடுவே இஸ்லாமிய சமயப் பணியாற்றி மெஞ்ஞான வழியின்பால் இஸ்லாமிய இதயங்களை ஈர்த்து சமய உணர்வு பேரின்பமாகப் பெருகியோட வழி சமைத்து நம்மவர் நடுவே வாழ்ந்து மறைந்தவர் இந்த ஸூபி ஹஸரத்தாகும்.

நம் நாட்டு அரசியலில் பங்கேற்றுள்ள சகல கட்சிகளையும் சார்ந்த முஸ்லிம் தலைவர்கள் உட்பட நம் இலங்கை சமுதாயத்தின் சகல துறைகளையும் சேர்ந்த பல முக்கியஸ்தர்கள் சாதாரணமானவர்கள் என்று பலர் இப்பெரியாரின் மார்க்க உபன்னியாச பயானில் ஈர்க்கப்பட்டு இந்த ஷெய்கிடம் முரீது பெற்று ஞான சிஷ்யர்களாகத் திகழ்வதை மறுக்க முடியாது. மேமன்பாய் சமூகத்து சகோதரர்கள் இப்பெரியாரை '**பீர் பாபா**' என்று பேருவகையுடன் அழைக்குமளவிற்கு அவர்களிடம் இப்பெரியாருக்கு பெரு மதிப்பு இருந்தது

தப்லீக் என்றால் என்ன? தப்லீகின் தாத்பரியம் யாது? அதன் ஸ்தாபகர் யார்? ஸ்தாபகரின் கொள்கை யாது? நபி நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் செய்த தப்லீக் யாது? அதற்கும் இதற்குமுள்ள வேறுபாடுகள் யாவை? என்பன போன்ற வினாக்களுக்கு மிகத் துணிவாகவும் ஆதாரப்பூர்வமான நிறுவுதல்களுடனும் விளக்கம் தந்த ஒரே பெரியார் இந்த ஸூபி ஹஸ்ரத்தான் என்றால் அதை விருப்பு வெறுப்பற்ற விஷயம் தெரிந்தவர்கள் மறுக்க மாட்டார்கள்.

இவர் தன் முரீதுகளுக்கு வழங்கி வந்த ஞானப் பயிற்சி சொல்லுந்தரமன்று. வாராவாரம் ஹிஸ்புல்லாஹ் ஸபையினர் நாடெங்குமுள்ள ஸூபி மன்ஸில்களில் நடத்தி வரும் ராத்திபு – திக்று மஜ்லிஸ்கள் பல நூறு இதயங்களை ஞான வழியின்பால் ஈர்த்து முரீதீன்களாக்கி வருவது குறிப்பிடத் தக்க அம்சமேயாகும்!

ஷெய்குனா அவர்களைக் குறித்து இலங்கை ஏடு சூட்டியுள்ள புகழாரம் இது!

உண்மையாம் மார்க்கத்தின் தூய கொள்கையெனும் வித்துக்களை சமுதாய மக்கள் தம் உள்ளப் பரப்பில் விதைத்து செழித்து வளர வைத்து உயரிய வாழ்வு ஈருலகிலும் பெறத்தக்க வழி சமைத்துத் தந்த – மாறுபட்ட கொள்கைகளில் வேறுபட்டவர்களின் தவறான வழிகாட்டுதல்களை மக்களுக்கு சுட்டிக் காட்டி – அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் அழகிய பாதையினை சிறப்பாக விளக்கித் தந்த எங்கள் ஷெய்குனா

சத்தியத்தின் பேரொளியாய் நின்றுலவி

சகலோர்க்கும் நல்வழி புகட்டிய

சத்தான சன்மார்க்க சீலர்

ஷரகின் வழி நின்ற தீரர்.

இன்று புற வாழ்வில் நம்முடன் இல்லை! ஆயினும் மகோன்னதம் மிக்க அந்த மாமேதை அவர்களால் வகுத்துத் தரப்பட்ட நெறி முறைகள் நம் முன் இருக்கின்றன!

பூ ரத மனதில் புகழ் இறை

பொங்கிய அருட் சுனையை

நா ரதம் ஏந்தி

நயமுடன் தந்தவரே!

சாந்தமும் சத்திய வேத நன்னூலின்

சாறும் கலந்ததனை

எமக்கீந்தவரே!

எம் இனிய ஷெய்குனா! நுங்கள் வழியில் அயராது நாங்கள் உழைத்துய்ய எல்லா அருளும் பெற்றிட வல்லான் இறையிடம் உங்களை வஸீலாவாக்கி வேண்டுகிறோம்!

அருளாளன் அல்லாஹ் ஷெய்குனா அவர்களின் பொருட்டினால் நம் பிழைகள் பொறுத்து வகையான வாழ்வினை ஈருலகிலும் ஈந்தருள் புரிவானாக! ஆமீன்.

ஞானப் பெருவள்ளலாக – கொள்கைப் பேரிகையாக வாழ்ந்த ஷெய்குனா அவர்களிடம் அவ்வப்போது தமக்கேற்படும் ஐயங்களுக்கு விளக்கமெழுதக் கேட்பதுண்டு முரீதீன்கள் பலர்! அவ்வாறு கேட்கப்பட்ட கேள்விகள் பலவற்றுக்கு அருமையான விளக்கங்களை ஷெய்குனா அவர்கள் எழுதியுள்ளார்கள் அப்படி பல்வேறு முரீதீன்களுக்கு பல சந்தர்ப்பங்களில் ஷெய்குனா அவர்கள் எழுதிய

## ஞானத் தபால்கள்.

### தபால் 1.

அரபியில் பாடலாக எழுதப்பட்ட கடிதத்தின் தமிழாக்கம்

முஹ்யித்தீன் ஆண்டகையின் தரீகாவை – வழியை நமக்குக் காட்டித் தந்த இறைவனை எப்பொழுதும் புகழ்கிறேன். நமது உள்ளத்தின் அடித்தளத்தில் குடி கொண்டிருக்கும் நம்பிக்கை நாணயமான நபி பேரில் சாந்தியோடு கூடிய கருணை உண்டாவதாக!

அவர்களது குடும்பத்தவர் மீதும், சங்கைமிகு தோழர்கள் மீதும் இறுதி நாள் வரை அன்னாரைப் பின் தொடர்ந்தவர்கள் மீதும் உண்டாவதாக!

சங்கையான கண்ணியமான பிள்ளையே! உனக்கு எனது ஸலாம்! உனது கடிதத்தினை தபால்காரன் தர படித்ததும் எனது கவலை நீங்கிற்று. தாதா பீர் அவர்கள் கந்தூரி (காயலபட்டணம் ஸூபி மன்ஸிலில்) முன் எப்போதையும் விட சிறப்பாக நடந்தது அறிந்து மிக்க மகிழ்வு கொண்டேன்! கல்வியைக் கொண்டு உமது நெஞ்சத்தை அல்லாஹ் விரிவடையச் செய்வானாக!

சபிக்கப்பட்ட ஷெய்த்தானின் தீங்குகளை களைவானாக! ஒவ்வொரு பொழுதும் நேரமும் மன உருகுதலோடும் நொந்த உள்ளத்துடனும் முராகபா செய்க! எனது சலாம் உனக்கும் நம் சகோதரர்களுக்கும் உண்டாவதாக!அவர்கள் அல்லாஹ்வின் கோஷ்டியினராவர்.

**தபால் 2.**

அரபியில் பாடலாக எழுதப்பட்ட கடிதத்தின் தமிழாக்கம்.

கண்ணியமான பிள்ளைக்கு......

நம் புகழ் நம் இரட்சகனுக்கே! அவனது கருணையும் ஈடேற்றமும் முஸ்தபா நபிக்கே! உமது கடிதம் வந்தது. முத்தினேன். அதன் கருத்தும் வார்த்தையும் எனக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

கற்பித்தல் எவருக்கு உண்டோ அவர் கல்வியை அதிகரித்துக் கொள்வார். எழுதுவது எவருக்கு உண்டோ அவர் எளிதாக (எழுதுவதை) வழக்கமாக்கிக் கொள்வார்!

மதிப்பிற்குரியவனே! எவர்களுடைய கல்பு அல்லாஹ்வை திக்று செய்துக் கொண்டிருக்கிறதோ அவர்களுடன் நீயும் சேர்ந்திரு! மறதியை விட்டுவிடு! நீ பார்ப்பது, கேட்பது, தொடுவது, நுகர்வது, சுவைப்பது, விளங்குவது, யூகிப்பது போன்ற எல்லா நிலைமையிலும் நான் உனக்கு வழிகாட்டி தந்ததுபோல் அல்லாஹ்வை தியானம் செய்! ஹிஸ்புல்லாஹ் சபையினர் அனைவருக்கும் திக்றைப் பற்றி ஆசை மூட்டி வா! ஸூபி மன்ஸிலில் நேமமாக மனமுருக ராத்திபு செய். கவலையான மனதோடு இறைவனிடம் துஆ கேள்! இக்கட்டானவனின் துஆவை (வெறுமனே) அவன் விட்டுவிடமாட்டான். அவன் தேர்ந்தெடுத்தவற்றில் பிணை ஏற்றுக் கொள்ளவான். நீ தேர்ந்தெடுத்த காலத்தில் அல்ல!

மேலுலகத்திற்கு மேலுலகம் இல்லாதவற்றிற்கு உன்னை உயர்த்தும் பாக்கியத்தை தந்தருள்வானாக! அங்கு இந்த வானமோ பூமியோ கிடையாது. அது மலகூத்து ஜபரூத்தாகும். விஞ்ஞானி ஏறிப் போவது நாஸூத்து – சட உலகுத்தான் .அவன் தனது விஞ்ஞானத்தினால் எவ்வளவு ஏறினாலும் ஐம்புலனு;க்குட்பட்ட உலகிற்குத்தான்! நாம் சொல்லுகிற அவ்வுலக ஐம்புலன்கள் எட்டிக் கொள்ளாத உலகம்! எனது சலாமை நான் குறிப்பிட்டுள்ள அன்பர்களுக்குத் தெரிவிப்பதோடு எவர்களது

சலாமை நீ எனக்கு எட்டி வைத்தாயோ அவர்களுக்கும் எனது சலாமை கூறு. குறிப்பாக உனக்கும் உன் தந்தைக்கும் சலாம் சொல்கிறேன்

பரேபாகாரத்தையும் ஆரோக்கியத்தையும் நம்மனைவருக்கும் இறைவனிடம் கேட்கிறேன்.

**தபால் 3.**

அரபிக் கடிதத்தின் தமிழாக்கம்.

கண்ணியமான பிள்ளைக்கு......

உன் புறத்திலிருந்து கடிதம் வந்தது. உனது நினைப்பை எனக்கு சமீபமாக்கி வைத்தது.

விஞ்ஞானிகள் சந்திரனில் இறங்கி அங்கிருந்து கல்லும் மண்ணும் கொண்டு வந்திருப்பதில் மக்கள் மத்தியில் பெரும் அபிப்ராய பேதங்கள் எழுந்திருப்பதாகவும் இது மார்க்கத்திற்கு நேர்பட்டதா? அல்லது வேறுபட்டதா? என்றும், குர்ஆன் ஆயத்துகளுக்கும், ஹதீதுகளுக்கும் தம் யோசனைப்படி வியாக்கியானம் செய்வதாகவும் தெளிவான விளக்கத்தைத் தர ஆதரவு வைப்பதாகவும் எழுதியிருந்தாய்.

இதில் அபிப்ராயப் பேதப்பட இடமேயில்லை. இதை மறுப்பது மார்க்கக் காரியங்களில் நின்றுள்ளதல்ல. இச்சம்பவத்தை அப்படியே உண்மைப்படுத்துவது அல்லது பொய்யாக்கி வைப்பது நம் மீது கடமையுமல்ல.

குர்ஆனும் ஹதீதும் வானத்தளவில் செல்வத்தையும் சந்திரன் மற்றவைகளில் இறங்குவதையும் அவைகளில் கல் மண் இருப்பதையும் மறுக்கவில்லை.

ஜின், மனுக்கள் தங்கள் வல்லமையைக் கொண்டு வானங்கள் பூமியின் கோணங்களை விட்டு வெளியே போவதைத்தான் குர்ஆன் மறுக்கிறது. அதற்குரிய சக்தி அவர்களுக்கு இல்லை. ஆனாலும்,

அவர்கள் அவர்களது இயற்கை அமைப்பை விட்டு அப்பாற்பட்டதொரு சக்தியினைக் கொண்டு வெளியே போக முடியுமென்பதை காட்டுகிறது 'யா மஃஷரல் ஜின்னி வல்இன்ஸி' என்ற ஆயத்தில் இருப்பது போன்று!

விஞ்ஞானி பூமியின் ஈர்ப்பு சக்தியின் வட்டத்திலிருந்து வானத்தின் ஈர்ப்பு சக்தியின் கோணத்திற்கு போவது. ஒரு சக்தி அதாவது ஆட்டோபாம் மூலம்

போகிறான். அதேபோல் வானத்தின் ஈர்ப்பு சக்தியிலிருந்து பூமியின் ஈர்ப்பு சக்திக்கு இறங்குவதும் அதே சக்தியைக் கொண்டுதான்.

விஞ்ஞானி தனது விஞ்ஞானத்தின் துணைகொண்டு எப்படி ஏறினாலும் ஆலமுல் நாஸூத்தை – சட உலகத்தை விட்டு மற்றொரு சட உலகிற்குப் போகிறான். ஒரு வானிலிருந்து

மற்றொரு வானுக்குச் செல்கிறான். எல்லா வானங்களும், பூமியும் அவற்றிலுள்ளவைகளும் ஆலமுன் நாஸூத்தாகும். வெளிப்புலன்களால் உணரப்படும் மூலங்களான உலகமாகும்.

விஞ்ஞானி ஆலமுல் மலக்கூத்திற்கும் அதற்கும் மேலாக இருக்கும் உலகத்திற்கும் போக மாட்டான்.

அவ்வுலகிற்கு ஏறிப் போகிறவன் தனது ஆன்மாவைப் பரிசுத்தமாக்கி முஸ்தபா நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களது நேர்வழி எனும் சுர்மாவைக் கொண்டு தனது கண்ணிற்கு சுர்மா இட்டவன் (மெஞ்ஞானி) தான் போவான்.

மெஞ்ஞானி நாஸூத்திலிருந்து ஆலமுல் மலகூத், ஜபரூத் லாஹூத்திற்கு தனது உள்ளத்தில் இறைவனிடமிருந்து கிடைக்கும் ரப்பானிய்யான சக்தியைக் கொண்டு போவான்.

எனது இத்தபாலை நம் தரீகத் சகோதரர்களிடம் காட்டுவது அவசிமாகும். ஈடேற்றமே நல்முடிவாகும் உங்களுக்கும் சகோதர சகோதரிகளுக்கும் ஈடேற்றமும் கிருபையும் பரக்கத்தும் உண்டாவதாக!

**தபால் 4.**

அரபிக் கடிதத்தின் தமிழாக்கம்.

சாலிஹான பிள்ளைக்கு......

உமது இரு கடிதங்களும் கிடைத்தன. ஒரு வாரமாக சளி காய்ச்சல் தலைபாரத்தினால் பீடிக்கப்பட்டு தற்போது இறையருளால் நல்லஆரோக்கியத்துடன் இருக்கிறேன். அத்தோடு எழுதும் விஷயத்தில் எனக்கு இயற்கையான சோம்பல் உண்டு. இவற்றால் பதில் எழுத சுணங்கி விட்டது. திக்று மஜ்லிசுக்கு சென்று வருவதுபற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.

எந்தக் கனவு கண்டாலும் காலையின் வெண்மை போன்று தத்ரூபமாகக் காண்பதாக எழுதி இருந்தாய.; இது வெற்றியின் சின்னத்தில் நின்றுமுள்ளது. அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்து. திக்றிலும் முராகபாவிலும் பிரயாசை எடுத்துக் கொள். அசல் நோக்கம் உன் முன்னால் இருக்கிறது.

இறைவழிபாட்டையில் நடப்பவன் தனது ஊக்கத்தை; அவனுக்கு கஷ்பு- இறைவெளிப்பாடு வெளியாகும்போது நிறுத்த நாடினால் 'நீ தேடும் அசல் நோக்கம் உனக்கு முன்னால் இருக்கிறது' என ஹகீகத்துடைய அசரீரி அவனை அழைத்துச் சொல்லும்.

சிருஷ்டிகளின் வெளிப்பாடுகள் அவனுக்கு வெளியானால் அவைகளது ஹகீகத்துகள் 'நாங்கள் பித்னா – குழப்பக்காரர்கள் நீ காபிர் ஆகி விடாதே'என்று அழைக்கும்.

எனவே நீ பூரணமான பிரயாசை தெண்டிப்பு செய். உனது இரட்சகனின் பெயரை தியானம் செய்! அவனளவில் (மக்களைவிட்டு) முழுமையாக நீங்கிப் போ! அவனல்லாதவற்றின்பால் பார்வையைத் திருப்பாதே! 'தவ்ஹீது' எனும் கடலில் மூழ்கி விடு! நீ அச்சமற்றவனாவாய்!

'லாயிலாஹ இல்லல்லாஹ் என்பது எனது கோட்டை எனது கோட்டையில் புகுந்தவன் எனது வேதனையை விட்டு நிர்பயமாவான். உனது(நினைப்பு எனும்) ஆடையை கழற்றி விடு அதில் நீ என்பதை விட்டு விட்டு மூழ்கிவிடு.நீந்தி(தப்பித்துக் கொள்ளப்) போவதையும் விட்டுவிடு! (தவ்ஹீது எனும் கடலில்) நீந்துவது பெருமை இல்லை (முற்றிலும் மூழ்கி விடுவதே பெருமை)நீ மரணித்து விடு. அல்லாஹ்வின் (தவ்ஹீது எனும்) கடலில் மரணித்தவர்கள் பெரும் இன்பத்தில் இருப்பார்கள். இவனது ஜீவியம் அல்லாஹ்வுடைய ஜீவயத்தைக் கொண்டு பரிபாலிக்கப்படுகிறது' - இது ஒரு கவிதையுடைய பொருள்.

எனவே நீயும் அல்லாஹ்வுடைய ஜீவியத்தை கொண்டு ஜீவித்திருப்பாய்! அல்லாஹ்வுடைய நிரந்தரத் தன்மையை எல்லா பொருட்களிலும் முன் மாதிரியாய் காண்பாய் 'லிமனில் முல்கு யவ்ம - இன்று அரசாட்சி யாருக்கு'? என்பதை உனது கல்பின் காது கொண்டு கேட்பாய் 'லில்லாஹில் வாஹிதில் கஹ்ஹார் - அடக்கி ஆளும் ஒருவனான அல்லாஹ்வுக்கே!' என உனது கல்பின் நாவு கொண்டு பதில் சொல்வாய்! அவனன்றி வேறு எதுவுமில்லை. உசுப்புபவனும், உசுப்பாதவனும் அவனன்றி வேறு யாருமில்லை. வானங்கள் பூமிகளிலுள்ளவை அனைத்தும் அவனுக்கே சொந்தம். எல்லாம் அவனுக்கே பணிகின்றன. முன்னும் பின்னும் அவனுக்கே புகழ்!

எனவே அவனது களா கத்றுக்கு – கற்பனைக்கு நீ வழிப்பட்டவனாவாயாக! 'வலா தமூதுன்ன இல்லா வ அன்தும் முஸ்லிமூன் - நீங்கள் வழிப்பட்டவர்களாக அன்றி மரணிக்காதீர்கள்' என இறைவன் சொல்கிறான் எங்களுக்கும் உங்களுக்கும் இந்த உயர்வான நெருக்கமான அந்தஸ்த்தைத் தந்தருள்வானாக!

**தபால் 5.**

அரபிக் கடிதத்தின் தமிழாக்கம்

சாலிஹான பிள்ளைக்கு......

அஸ்ஸலாமு அலைக்கும். உமது இரண்டு தபால்களும் வந்தன.எனது ஜவாபு பிந்தியதில் வெட்கப்படுகிறேன். எழுதும் விஷயத்தில் நான் அதிகமான சோம்பகாரனென்பது உமக்குத் தெரியும்தானே! அத்தோடு பல பக்கத்திலிருந்து தபால் வராத நாட்களும் மிகக் குறைவு நானும் ஸூபி மன்ஸிலில் உள்ளோரும் இறையுதவியால் ஆரோக்கியத்துடன் உள்ளோம்.

நான் உம்மை மறந்த விட்டதாக எண்ண வேண்டாம். உமக்கு விரைவில் பதில் எழுதாவிட்டாலும் நீ எனது கண்காணிப்பிலேயே இருக்கிறாய். உமது கேள்விக்கான பதில் இதோ:

1. குற்றவாளிகள் அவர்களது பாவங்களுக்குத் தக்கவாறு கடுமையாகவோ, எளிதாகவோ கொஞ்ச நாட்கள் அல்லது நீண்ட காலம் நரகத்தில் வேதனையைச் சுவைத்தப்பின் வேதனை போய் விடும். அழிந்து விடும்.

ஈமானில் நின்றும் அணுப் பிரமாணம் கூட எவனது உள்ளத்தில் இருக்கிறதோ அவன் நரகை விட்டு வெளியாகி விடுவான். ஈமானில் நின்றும் அணுப் பிரமாணம் எவனது கல்பில் இல்லையோ அவன் ஊழியூழி காலம் நரகில் தரிபட்டு இருப்பான்.

சொர்க்கவாதிகளின் இன்பங்கள் அழியாது. அவனுடைய உணவுகள் நிரந்தரமானது. அதில் ஏதேனும் உண்டு அழிந்து விட்டால் அதற்குப் பகரமானதைக் கொண்டு வரப்பட்டுக் கொண்டே இருக்கும். இது ஒரு வினாடி ஹலாக் - அழிவதற்கு முரண்பாடில்லை. 'ஹலாக்' என்பது 'பனா' – முற்றிலுமாக அழிந்து விடுவதை அவசியமாக்கத் தேடாது.

அகாயிதுன்னஸபிய்யாவில் சொல்கிறார்கள்:- அவை இரண்டும் (சுவர்க்கமும் நரகமும் இப்பொழுதா) படைக்கப்பட்டுள்ளன. உளதானவை, தரிபாடானவை 'பனா' – அழிந்தொழியாதவை, அதையுடையோரும் அழிந்தொழிய மாட்டார்கள். அதாவது அவர்கள் மீது நிரந்தரமான இல்லாமை ஏற்படாது. ஏன் இரு வகுப்பினர் விஷயமாக இறைவன்,'காலிதீன பீஹா அபதா' – அதில் நிரந்தரமாக எப்போதும் தரிப்பட்டிருப்பார்கள்' எனச் சொல்லி இருக்கிறான்.

'குல்லு ஷையின் ஹாலிகுன இல்லா வஜ்ஹஹு- எல்லாப் பொருட்களும் அழிந்து விடும், அவனது திருமுகத்தைத் தவிர!' என்ற இறைவனது சொல்லை நிச்சயப்படுத்துவதற்காக சுவனமும் நரகமும் ஒரு வினாடியாவது அழிய வேண்டுமே என நீ கேட்டால், அது இக்கருத்தில் அதாவது ஒரு வினாடி அழிவது என்ற கருத்தில் 'பகா'– நிலையாக இருத்தல் என்பதற்கு முரண்பாடில்லை. அகாயிது கிதாபுகளில் இதன் விளக்கத்தைப் பார்த்துக் கொள்!

*2ம் கேள்விக்கான பதில்:*

இமாம் கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் இஹ்யா, கீமியே ஸஆதத் ஆகிய நூற்களில் இரண்டாம் பாகத்திலும் ஸுஹ்ரவர்தி இமாம் அவாரிபுல் மஆரிபுவிலும் பாபுஸ்ஸமா ஃ வல்வஜ்து - இசைகள் கேட்பதும் அவற்றால் ஈர்க்கப்படுவதும் என தனியானதொரு பாடமே அமைத்துள்ளார்கள.;

அதன் சுருக்கம் : இசை இராகம் அல்லது வசனமான இனிமையான குரல்களெல்லாம் அவை இசை, இராகம் இனிமைஇ கவி என்பதாக இருக்கின்ற விதத்தில் ஹராமல்ல. ஹலால்தான். இவைகளுக்கும் (உலோகத்தால் செய்யப்பட்ட) கருவிகள், கற்கள் பிராணிகளின் வாயிலிருந்து வரும் ஓசைகளுக்கும் மத்தியில் எவ்வித பாகுபாடுமில்லை.

ஷரீஅத்தில் விலக்கப்பட்ட கருவிகள் மூலம் அவைகள் வருவதால்தான் அவைகளுக்கு ஹராம் என்பது ஏற்படுகிறது. அவை இன்பத்தைத் தருகின்றன என்பதற்காகவும் ஹராமல்ல. அவ்வாறு இன்பத்தைத் தருகின்றன என்பதற்காக விலக்கப்பட்டதானால் இன்பம் தருபவையனைத்தும் ஹரமாக்கப்பட்டிருக்க வேண்டுமே!

ஆயினும் கள் குடிக்கும் போது உபயோகிக்கப்படுகின்ற, அல்லது கள் குடிக்கத் தூண்டுகின்ற, அல்லது அதன் ஞாபகத்தை ஊட்டுகின்ற கருவிகள் மூலம் வரும் இசை, இராகம், ஓசைகள் தான் தடுக்கப்பட்டுள்ளன. இதர இசை, இராகங்கள் அகுமானவை தான்!

இடையர்கள்இ ஒட்டக ஓட்டிகள், தபால்காரர்கள் எழுப்பும் ஓசைகள் கள் குடிப்புக்குச் சம்பந்தமில்லாத இதர கருவிகள் மூலம் வரும் இனிமையான ஓசைகளைல்லாம் அசல் ஹலால் என்பதன் மீதே இருந்து வரும். ஏன்? இவற்றை பறவைகள் மற்றும் பொருட்களில் இருந்து எழும் ஓசைகள் மீது ஒழுங்குபடுத்தியதால்!

இசைகள் இதயத்தில் ஒரு குணபாட்டை உண்டாக்குற கவனிப்பில் பொதுவாக ஹலால் என்றோ பொதுவாக ஹறாம் என்றோ தீர்ப்பு கூறுவது சரியல்ல. நிலைமையைப் பொறுத்தும் ஆளைப் பொறுத்தும் இசை வரும் வழிகள் மாறுதல்களைப் பொறுத்தும் ஹலால், ஹராம் என்று சொல்லலாம்.

ஏனெனில் அனேகமான வாலிபர்களின் உள்ளங்களில் துன்யாவின் சிற்றின்பங்கள் நிறைந்துள்ளது. அதனால் இசைகள் பாடல்கள்(கேட்கின்ற போது) உள்ளத்தில் மறைந்து கிடக்கும் துன்யாவின் ஆசைகளைத் தூண்டிவிடும். (கெட்டுப் போவதற்கு இது வழியாகும்) அதனால் அவர்களுக்கு ஹராம். இதைப் போலவே அன்னியப் பெண்ணின் குரலை அவள் அசிங்கமான தோற்றத்தில் இருந்தாலுங்கூட கேட்பது இவர்களுக்கு ஹராம்.

இதுபோன்று ஷரீஅத்தில் தடுக்கப்பட்ட இசைக்கருவிகள் மூலம் கேட்பதும் ஹராம். இதையே தனது பொழுதைப்போக்க வீணாக கேட்டுக் கொண்டிருப்பவனுக்கு மக்ரூஹ். நல்ல இனிமையான குரலைக் கேட்டு இன்பம் பெறுதல், மனம் ஆறுதல் பெறுதல் என்று மட்டும் இருப்பவனுக்கு இது முபாஹ்.

இறைவனது உகப்பு கல்பில் நிறைந்திருப்பவனுக்கு இது அவனது உள்ளத்தில் இருக்கும் உவப்பை வெளிப்படுத்துவதாகவும், நற்பண்புகளை உசுப்பி விடுவதாகவும் இருப்பதால் இது முஸ்தஹப்பு. இஹ்யா மற்றும் கிரந்தங்களின் சுருக்கம் இவை!

இசை கேட்பவன் தீமையை நாடாமலும் ஷரீஅத்தில் விலக்கானதைக் கேட்காமலும் மனம் போன போக்கில் போகாமலுமிருந்தால் மொத்தத்தில் அவனுக்கு ஹலால் என்பதாக ரிஸாலத்துல் குஷைரிய்யாவில் காணப்படுகிறது.

'அறிந்து கொள்! இசை என்பது அழகான சப்தங்களும் மனதை உற்சாகமூட்டுகிற இராகங்களும் தான். அவை பாடல்களைப் போல பொருள் விளங்குபவைகளாக அல்லது பறவைகளின் இனிமையான ஓசைகளைப் போல பொருள் விளங்காதவைகளாக இரு வகைப்படும்.

இவற்றை ஹராமென எப்படிச் சொல்ல முடியும்? ஷரீஅத் எதனை ஹராமெனக் கூறுகிதோ அவை மட்டுமே ஹராம்'; என்று ஹல்லுர்ருமுஸ் எனும் நூலில் அல்லாமா அப்துல்கனி நாபிழிஸி ரஹிமஹுல்லாஹ் சொல்கிறார்கள்.

**தபால் 6.**

எனது அன்பிற்குரிய அருமைப் பிள்ளைக்கு

அல்லாஹ் நல்லருள் புரிவானாக!

உங்களுடைய கடிதத்தில் மிஃராஜைப் பற்றிய விளக்கம் கேட்டிருந்தீர்கள். இத்துடன் ஒரு தாளில் வரைந்து வைத்துள்ளேன். ஹழரத்துல் ஹக்கு - ஹக்கு த ஆலாவின் சமூகமான தாளின் வெள்ளைப் பகுதியாகிறது அதற்கு ஒரு வகையிலும் எல்லை இல்லாமலிருப்பதோடு அது இப்பூமி வரையிலும் சகலத்திலும் ஊடுருவி இருக்கிறது. சகலமும் அவனிலிருந்து அவனிலேயே தோன்றியிருக்கிறது. சகலமும் அவனிலிருந்து அவனில் கற்பனையாக தோன்றியிருக்கிறது. அவைகளின் உஜூது – உற்பத்தியும் நிலையாகும். ஹக்கினாலேயே ஹக்கை கொண்டே இருக்கிறது. சகலத்திற்கும் நிலைகளும் ஹக்கின் சமூகமேயாகும்.

அர்ஷாகிய 9வது வானத்திற்குள்ளால் உள்ளவைகள்தான் ஸ்தூல உலகம். இதில்தான் காலமும், தலமும். இதற்கப்பால் ஆன்ம சூக்கும உலகில் இடமில்லை, காலமில்லை.

மிஃராஜ் என்றால் ஹக்குடைய சமூகத்திற்கு போவதாகும். ஹக்குடைய சமூகம் ஒவ்வொரு அணு அணுவுக்கள்ளும் இருக்கிறது. தலம் காலமெல்லாம் அவனில் வெளியானதும் அவனுடைய படைப்புமாகும். அவன் எல்லா கோலத்திலும் காட்சி அளித்தாலும் அவனுக்கு ஒரு கோலமுமில்லை ஒன்றிலும் கட்டுபட்டவனுமில்லை.

மூஸா நபிக்கு தூர்ஸீனா மலையிலும், இப்ராஹீம் நபிக்கு நம்ரூதின் நெருப்பிலும், யூனுஸ் நபிக்கு மீனின் வயிற்றிலும் மிஃராஜ் கொடுத்தான்.

நமது நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களுக்கு பலவிதமான மிஃராஜையும் கொடுத்ததுபோல், அர்ஷுக்கு மேலாலும் மிஃராஜை - காட்சியைக் கொடுத்தான்.

அல்லாஹ் தன் அன்பர்களான அவ்லியாக்களுக்கும் பல வகையாகவும் காட்சியை அளிக்கிறான்.

கிருபையுள்ள நாயன் நம் எல்லோருக்கும் அவனின் காட்சியைத் தந்து மன சந்தோஷமடையச் செய்வானாக! ஆமீன்.

1.பூமி 2.தண்ணீர் 3.காற்று 4.நெருப்பு 5.முதல் வானம் 6.இரண்டாவது வானம் 7.மூன்றாவது வானம் 8.நான்காவது வானம் 9.ஐந்தாவது வானம் 10.ஆறாவது வானம் 11.ஏழாவது வானம் 12.எட்டாவது வானம் (குர்ஸி) 13.ஒன்பதாவது வானம்(அர்ஷ்) 14.சூக்கும உலகம் 15.ஆன்ம உலகம் 16.ஜபரூத் 17.லாஹூத், ஹளரத்துல் ஹக்கு.

**தபால் 7.**

அன்பிற்குரிய அருமைப் பிள்ளைக்கு

அல்லாஹ் நல்லருள் புரிவானாக!

பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களை மண்ணைக் கொண்டு அல்லாஹ் படைத்தான் என்பதைக் கொண்டு அல்லாஹ் மண்ணளவில் தேவையானான் என்று கருத்து கொள்ளக் கூடாது. அல்லாஹ் காரண காரியமாகவே படைக்கிறான்.

மண்ணாகிய காரணத்தைப் படைத்து அதன் பின்னால் காரியமாகிய ஆதமை அதன் வழியாக படைத்தான.; மண் ஆதமைப் படைக்கவில்லை. மண்ணையும் அதன் வழியாக ஆதமையும் அல்லாஹ்தான் படைத்தான். இது அவன் செய்து கொண்ட வழக்கம். இந்த கருத்துப்படிதான் மண்ணால் படைத்தானன்றி அவன் மண்ணளவில் தேவையாகவில்லை.

**தபால் 8.**

அன்பிற்குரிய அருமைப் பிள்ளைக்கு

அல்லாஹ் நல்லருள் புரிவானாக!

தாது என்பது லட்சணம். பண்புகளாகிய ஆதேயப் பொருட்கள் அண்டி நிற்கக் கூடிய ஆதாரப் பொருளாகும். உவமையில் வெளிச்சம் கொடுத்தல், சுடுதல, கரித்தல், அரைத்தல,; வெட்டுதல் போன்ற பண்புகள் அண்டி நிற்கக் கூடிய 'கரண்டை' போல கரண்டை தாது – ஆதாரப் பொருளென்றும், அதை அண்டி நிற்கும் பண்பு லட்சணங்களை ஸிபது – ஆதேயப் பொருள் என்றும் சொல்லப்படும்.

உஜூது – உளது, ஹக்கு – தரிபாடானது. இவைகள் அதம் - இலது. பாதில் - தரிபாடில்லாததுக்கு எதிராகும். உவமையில் வெயில் வெப்பத்தில் தோன்றக்கூடிய கானல் நீரைப்போல். வெப்பம்தான் நிலைத்திருக்கும். அதில் தோன்றக்கூடிய நீர் பாதில் - தரிபாடில்லாததாகும்.

ஹக்கு தஆலாவுக்கு உஜூது, மவ்ஜூது என்று சொல்லப்படும். உஜூது என்றால் உளதாகுதல்,உண்டாகுதல், கிட்டுதல் என்ற பொருளல்ல. மவ்ஜூது என்றால் உஜூதை உடையது என்று பொருளல்ல. உஜூது, மவ்ஜூது என பதம்தான் இரண்டு. கருத்து இரண்டுக்கும் ஒன்றேதான். அதாவது ஆக்குபவன் கொண்டில்லாது தன்னாலேயே உண்டாகி, ஆதாரத்தைக் கொண்டில்லாமல் தன்னைக் கொண்டே நிலைத்து எல்லையில்லாமல் பரந்து சதோதயமாக இருக்கும்படியானதும் அதற்கு அன்னியமான ஒன்றல்லாததுமான ஏகபராபரமான மெய்ப்பொருள்.

ஜகமாதி சிருஷ்டிகளெல்லாம் அந்த மெய்ப்பொருளில் தோன்றுகிறது. சில தோற்றங்களை மறைத்துவிடுகிறான். அது ஆலமுல் அஜ்ஸாம்இ ஆலமுந் நாஸூத்து சட

www.sufimanzil.org

உலகம். இதற்கு ஆலமுல் கல்கு எனவும் சொல்வதுண்டு. இன்னும் சில தோற்றங்களை அது அவனிலிருந்தே தோன்றியதாக இருந்தாலும் அதை மறைக்காது வைத்துக் கொண்டிருப்பான். அது ஆலமுல் அர்வாஹூ.ஆலமுல் மலகூத்து ஆகும.; ரூஹூடைய ஆலமாகும். இதற்கு ஆலமுல் அம்று எனவும் சொல்வதுண்டு. ஆலமுல் அம்றும் ஆலமுல் கல்கும் அவனுக்குரியதேயாகும.; எல்லாம் அவனில் தோன்றியதுவேயாகும்.

**தபால் 9.**

அரபிக் கடிதத்தின் தமிழாக்கம்

சாலிஹான பிள்ளைக்கு......

ஈகையாளனான அல்லாஹ் அளவில் ஆசையால் நிரம்பியதும் நேர்வழி நடந்தவர்களைக் கொண்டு நல்லெண்ணம் கொண்டுள்ளதுமான உமது தபால் வந்தது. நானும் அனைத்து சகோதரர்களும் சந்தோஷமானோம். அவர்களுக்கு உமது சலாத்தை எட்டி வைத்தேன். அவர்களும் உமக்கு சலாம் சொன்னார்கள். கல்வியிலும் அமலிலும் சரக்கு குறைந்த சின்ன மனிதன் நான்.

எனினும் அல்லாஹுத் தஆலா என்னையும் உங்களையும் உங்களது நல்லெண்ணத்தின்படியும், அழகிய தேட்டத்தின்படியும் நல்லோர்கள், சான்றோர்களிடம் நடப்பது போல நடப்பானாக! ஈடேற்றம் வெற்றியின் பாதையில் நேர்வழி காட்டுவானாக! இது அல்லாஹ்வுக்கு பெரிய காரியமல்ல!

அல்லாஹ் திருக்குர்ஆனில் 'அல்ஹம்துலில்லாஹ்' என ஆரம்பித்திருப்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஒவ்வொரு புகழிலும் எதார்த்தத்தில் அவனே புகழப் பட்டவன்;; வேறு எவருமில்லை என்பதை அதைக் கொண்டு நாடியுமுள்ளான். எந்தப் பொருளும் அதன் அழகு, எழிலைக் கொண்டே தவிர புகழப்படுவதில்லை. எல்லாப் பொருட்களும் அவனது அழகு வெளியாகும் ஸ்தலமாகவும் கண்ணாடியாகவும் இருக்கிறது. அழகு இறைவனின் நூர்! 'வானங்கள் பூமியின் பிரகாசமாக அல்லாஹ் இருக்கிறான்' என்று திருமறையில் கூறுகின்றான்.

'அய்னமா துவல்லூ பதம்ம வஜ்ஹுல்லாஹ் - எங்கு திரும்பினாலும் அங்கு இறைவனின் திருமுகம் இருக்கிறது எனக் கூறப்பட்டதிலிருந்து நாடப்பட்டதும் இதுதான்.

எந்தப் பொருளையும் ஏதாவதொரு அழகை விட்டு நீங்கியதாக காணமுடியாது. அழகு என்பது எதார்த்தமானது. அசிங்கமென்பது கவனிப்பான சேர்மானமானது. அழகின் ஹகீகத் - உண்மையான தன்மை வாஜிபுல் உஜூது - இருப்பு அவசியமான எல்லாவற்றையும் சூழ்ந்தறிந்த இறைவனாகும். எந்தப் பொருளையும் வாஜிபுல் உஜூதானவனைப் பார்த்தே தவிர நீ பார்க்க மாட்டாய். எனினும் இதை நீ உணருவதில்லை. இதை உணர்ந்தவர்கள் 'நான் எப்பொருளையும் பார்ப்பதில்லை. அதைப் பார்க்கு முன் இறைவனைப் பார்த்தே தவிர' என்பர்.

இந்த விளக்கத்தின் மூலம் 'அல்ஹம்துலில்லாஹ்' 'அல்லாஹுநூருஸ் ஸமாவாத்தி வல்அர்ழி' 'வகுவ மஅகும் அய்னமா குன்தும்' என்ற மூன்று ஆயத்துக்களின் கருத்துக்களும் ஒன்றே என்பது தரிபட்டு விட்டது. 'அலா இன்னஹு பிகுல்லி ஷெய்இன் முஹீத்' – அறிந்து கொள்! நிச்சயமாக அவன் சகல பொருட்களையும் சூழ்ந்திருக்கிறான் என்ற ஆயத்தின் கருத்தும் ஒன்றேதான்.

**உங்களுடைய முதற் கடமை:**

மறதியோடு எப்பொருளையும் பார்க்காதீர்கள். எப்போதும் எந்த வினாடியும் விழிப்போடும் அகப் பார்வையோடுமிருங்கள். உங்களது உள் வெளிப் புறங்களின் ஒவ்வொரு பகுதியும் அல்லாஹ்விலே மூழ்கிப் போக வேண்டும். கேட்கப்படுகிற,பார்க்கப்படுகிற, சுவைக்கப்படுகிற, தொடப்படுகிற நுகரப்படுகிற, அறியப்படுகிற யூகிக்கப்படுகிற எல்லாவற்றிலும் அவனை (இறைவனை) காட்சியாகக் காண வேண்டும்.

உங்களது வெளி, உட்புலன்களில் ஒவ்வொன்றும் இறைவனில் மூழ்கியதாக ஆகட்டும். ஏனெனில் வெளிரங்கமான, உள்ரங்கமான உலகங்களின் ஒவ்வொரு அணுவிலும் அவனது அழகு உண்டாயிருக்கிறது. அதுவே வாஜிபுல் உஜூதாகும்.

**இரண்டாவது கடமை:**

நான் உங்களுக்கு விளக்கித் தந்ததுபோல் மார்புக்கு இரண்டு விரல் அகலத்திற்கு கீழ் இடது புறத்திலமைந்திருக்கும் இதயக் கமலத்தில் உங்கள் உள்ரங்கமான, வெளிரங்கமான புலன்கள் எல்லாவற்றையும் கொண்டும் முழு ஊக்கத்தை கொண்டும் முன்னோக்க வேண்டும். அங்கு இறைவன் தோற்றமாகி இருக்கிறான் என்று உறுதியாக நம்ப வேண்டும்.

'எனக்கு எனது பூமியும் விசாலமாகவில்லை, எனது வானமும் விசாலமாகவில்லை எனினும் பக்திமானான முஃமினின் இதயம் விசாலமானது' என அறிவுறுத்துவது போல!

அனைத்து உலகமும் கண்ணைப் பொத்திய பின் கல்பில் தோற்றமாகி இருக்கும் அந்த தாத்து எனும் கடலில் விழ்ந்து விட்டான. கடலில் உப்பு கரைந்தது போல் கரைந்து விட்டன. கடலைத் தவிர! அதாவது மெய்ப் பொருளான வாஜிபான அவனது தாத்தைத் தவிர வேறு எதுவும் எஞ்சவில்லை.

உங்களுடைய தூக்கமும் இப்படியே ஆகட்டும். அதாவது நீங்கள் தூங்கினாலும் இதே முறையில் தூங்குங்கள். கல்புக் கண்ணை கடலின் காட்சியில் அதாவது வாஜிபான தாத்தின் காட்சியில் பெரிய கியாமத் நாள் ஏற்படும் வரை பிரிந்ததாக்குங்கள். 'லிமனில் முல்குல் யவ்ம - இன்று அரசாட்சி யாருக்கு?' என்பதை அகக் காது கொண்டு கேட்பீர்கள.;

உங்களுக்கும் அனைத்து முரீதீன்களுக்கும் அனுமதி வழங்கி விட்டேன். என்னிடம் நீங்கள் பைஅத் செய்யும்போது நான் உங்களுக்கு விளக்கித் தந்தேனே அதுவே இந்த முராக்பா. அதன்படி செய்து வாருங்கள். இறைவனது நிரந்தரத் தன்மையினை எல்லா பொருட்களிலும்

முன் மாதிரியாக கண்காட்சியாகப் பெற்றுக் கொள்வீர்கள். மஹப்பத்தென்னும் கட்டுக் கோப்பைக் கொண்டு என்னளவில் நீங்கள் முன்னோக்கினால் ஒவ்வொரு நேரமும் அல்லாஹ்வின் வரிசையைக் கொண்டு என்னைக் காண்பீர்கள்.

காதிரிய்யா தரீக்காவின் ஒழுக்கங்களில் முக்கியமானவை:

1. ஷரீஅத் சட்டங்களைப் பேணி நடப்பது

2. தரீக்காவின் ஒழுக்கங்களை பேணிக் காப்பது

3. ஷெய்கின் உகப்பில் மூழ்கி விடுவது அல்லாஹ்வின் பக்கம்

போவது. அவரிலேயே மட்டாக்குவது. எல்லாவற்றிலும் மிகமுக்கியமானது ஷெய்கில் பனாவாகி அழிந்து விடுவது. அவரிலேயே மரணித்து விடுவது.

நமக்கும் நமது அன்பர்களுக்கும் இப்பாதையில் நடப்பதற்கு இறைவன் அருள் புரிவானாக! ஷெய்கின் உகப்பிலேயே எப்போதும் நிலைபாடாக இருத்தாட்டுவானாக!

இறைவா! ஷெய்கு அப்துல் காதிர் ஜீலானி அவர்களுடைய உகப்பில் எங்களை வாழச் செய்வாயாக அதிலேயே எங்களை மரணிக்கச் செய்து மறுமையில் எழுப்புவாயாக! அவர்களைத் தேடியவர்கள், ஆசித்தவர்களின் வகுப்பிலேயே எங்களை இம்மை மறுமையில் ஆக்குவாயாக! நிச்சயமாக நீயே கேட்பவனும் அறிபவனுமாவாய். எங்கள் தலைவர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அன்னார் குடும்பத்தினர், தோழர்கள் மீதும் உனது கருணையையும் ஈடேற்றத்தையும் சொரிவாயாக!

**தபால் 10.**

அன்பிற்குரிய அருமைப் பிள்ளைக்கு,

முராக்கபாவில் இருக்கும் போது சில நேரங்களில் காட்சிகள் தென்படுவதும் சில பெரியார்கள் வந்து உரையாடுவது போலவும் சில பெரியார்கள் முகங்கள் வந்து மறைவதுமாக இருக்கிறது. இவை அசலான காட்சிகளா? எனக் கேட்டிருந்தீர்கள்.

நம்முடைய உணர்வு மாறிய பிறகு வந்தால் தான் அது காட்சியாகும். நம்முடைய உணர்வு, சிந்தனை இருக்கும்போது வந்தால் அது நமது கற்பனையில் உள்ளதாகும்.

முராக்கபாவில் நம்முடைய அன்னிய்யத்தை – தானென்ற உணர்வை இல்லாதொழிக்க வேண்டும். நாம் என்ற உணர்வின் கோலத்திலும் அவன் வெளியாகி இருக்கிறான். அதில் வெளியானாவன் அல்லாஹ் என்று சொல்லும் போது அந்த நான் எனும் கோலம் மறைந்து இல்லாமலாகி விடும். அதில் வெளியானது அல்லாஹ் என்று ஓயாது அவனளவில் சேர்த்துக் கொண்டும், நான் என்பதை அறிந்து கொண்டும் இருப்பதானது அல்லாஹ்வின் அருள் கிருபை வருவதற்கு ஆயத்தமாகிறதாகும். அருள் வந்ததும் நானென்பதை முற்றாக இல்லாமலாக்கி



www.sufimanzil.org

விடும். பின்னர் நம்மை நமக்குக் காட்டுவான். நாம் நம்மை புலனின் உதவியில்லாமல் நாமே நம்மைப் பார்ப்போம்.

நீங்கள் கனவில் உங்களை எங்கும் நிறைந்து அந்தரத்தில் நிற்பது போல பார்த்தது போல! இதுதான் தவ்ஹீது. இது ஒளியான அந்தரங்கத்திற்கு வேறானதல்ல அதுவே தான்! அந்தப்படி ஒளிதான் இப்படி வெளியானது. இது அதனால் வெளியானதால் கதீமாக – பூர்வீகமாக இல்லாது போனாலும் இது சதாவும் பாகியாக – தரிபாடாகவே இருக்கும். இப்படி இறைவனது அருட்கிருபையினால் தன்னைத்தான் பார்த்தபின் தான் தவ்ஹீது வெளியாயிற்று. இதுவே ஐனுல் யகீன். ஹக்குல் யகீனாகும்.

இப்படி நம்முடைய ஹகீகத்து இருப்பது போலவே சகல வஸ்துக்களுடைய ஹகீகத்தும். இப்படியே சகலமும் அந்த மெய்ப் பொருளான ஒளியினால் வந்ததாகையால் பூர்வீகமானது கதீமாக இல்லாது போனால் சதாவுமிருக்கும். எல்லாம் அவனுடைய சிருஷ்டிகளே! அவனுடைய மள்ஹர்களேயாகும.; அவனுக்கு வேறானதாக இல்லை. ரப்புடைய ருபூபிய்யத்தான சிபத்துகள் - தெய்வீக இலட்சணங்கள் மஹ்பூபு சிருஷ்டியான மள்ஹர்களில் வெளியாகும் போது மள்ஹர்கள் அந்த இலட்சணங்களின் குணப்பாட்டை ஏற்றுக் கொள்கிறதற்குத் தான் இபாதத், தஸ்பீஹ் என்று சொல்லப்படும்.

சகல வஸ்துக்களுடையவும் முன்னெற்றி ரோமத்தையும் வளைத்து பிடித்துக் கொண்டு அவன் தன்னுடைய அஸ்மா ஸிபாத்து லட்சணங்களின் தேட்டங்களை வெளிப்படுத்துகிற நேரான வழியிலேயே இருக்கிறான்.

'வ மா மின் தாப்பதின் இல்லாஹுவ ஆகிதுன் பிநாஸியதிஹா இன்ன ரப்பீ அலா ஸிராத்திம் முஸ்தகீம்'

பின்னர் அல்லாஹ் நம்மை நம்முடைய புலனுக்கு தள்ளி விட்டு விட்டால் நாம் நம்மை தனித்து நிற்கக்கூடிய பொருளென உணர்கிறோம். அல்லாஹ்வுடன் இன்னுமொரு பொருள் இருப்பதாக உணர்வது ஷிர்க்காகும். அவனோடு கூட்டாகுவதாகும் அல்லாஹ்வின் அருள் வந்து நம்மை பிடித்திழுக்குமுன் - நம்மை நாம் காணுமுன் - நமக்கு தவ்ஹீது வெளியாகுமுன் சகலமும் ஹக்குக்கு வேறல்ல. எல்லாம் அவனேதான் என்று நம்பி இருந்ததற்கு இல்முல் யகீன் என்று சொல்லப்படும்.

நம்முடைய உணர்வுகளையும் இன்னும் புலனாதி தொழில்களையும் இல்லாதொழிப்பதற்காக நாம் நம்முடைய உஜுதையும் நாட்டம் மற்றும் புலனாதி தொழில்களையும் நம்மோடு சேர்த்துக் கொண்டிருந்தாலும் ஹக்குடைய அருட்கிருபை நம்மைப் பிடித்திழுக்காத வரையிலும் நம்முடையஅன்னியத்து அழியாது. ஷிர்க் நீங்காது.

அப்போது பகைவனுக்கு பயந்து ஒழிந்து கிடந்தவனை பகைவன் தேடிப்போகும் போது 'நான் இந்த இடத்தில் இல்லை' என சொன்னவனைப் போல் தானேயாகும். நாம் நம்மை உணாந்திருக்கும் வரையிலும் நாம் அல்லாஹுக்கு இபாதத்து செய்யத்தான் வேண்டும்.

வாயால் மனதால் நாம் அவன்தான்! அவன் நாம் தான் என்று சொல்வதாலோ திடனாக இல்முல் யகீனாக நம்புவதாலோ ஷரீஅத்தீன் வரம்பை விட்டும் தாண்ட முடியாது.

நாம் முராகபாவை இக்லாசாக நேமமாக செய்து கொண்டே இருந்தால் ஹக்கு தஆலாவின் அருட்கிருபை நமக்கு தெளஹீதை காட்டித் தந்து நாம் எப்போதும் நித்திய ஆனந்தத்தில் இருக்கலாம். அல்லாஹ் எல்லோருக்கும் அருள் புரிவானாக!

**தபால் 11.**

அன்பிற்குரிய அருமைப் பிள்ளைக்கு

மலக்குகளுக்கு அல்லாஹ் அக்லைக் கொடுத்திருக்கிறான். நான் பூமியில்கலீபாவைப் படைக்கப் போகிறேன் என்று அல்லாஹ் சொன்னதும், இறைவன் பூதங்களைக் கொண்டு படைக்கப் போகிறான். பூதங்கள் ஒன்றுக்கொன்று சத்ருவானது. அதைக் கொண்டு படைக்கப்பட்டவரும் ஒன்றோடொன்று பஸாது செய்வார்களென்று அவர்கள் புத்தியைக் கொண்டு கியாஸ் செய்து 'காலூ அதஜ்அலு பீஹா மன் யுப்ஸிது பீஹா' என்று கேட்டார்கள். இப்படிச் சொன்னது அவர்கள் கியாஸ் - கணிப்பேயல்லாது இது பாவமல்ல! மலக்குகள் பாவம் செய்யமாட்டார்கள். அவர்களுக்கு ஆசையும் கோபமுமில்லை.

பாவா ஆதம் நபியவர்களை மண்ணால் படைத்ததை வைத்து அல்லாஹ் மண்ணளவில் தேவையானான் என்று பொருளல்ல. இறைவன் காரண காரியமாகவே படைக்கிறான். மண்ணாகிய காரணத்தைப் படைத்து பின்னால் காரியமாகிய ஆதமை அதன் வழியாக படைத்தான். மண் ஆதமைப் படைக்கவில்லை. இது அவன் செய்து கொண்ட வழக்கம். இக்கருத்துப்படி மண்ணால் படைத்தான். அவன் மண்ணளவில் தேவையாகவில்லை.

திக்ராகிறது ரஹ்மானைப் பொருத்தமாக்கும். ஷெய்த்தானை வருத்தமாக்கும். ஷெய்தானுடைய கோட்டைகளை உடைத்து அவனது பட்டாளங்களை முறியடித்து விரட்டும். மனக்கவலையைப் போக்கி சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் கொடுக்கும். உடலையும் மனதையும் உறுதியாக்கும். அகத்தையும் முகத்தையும் பிரகாசமாக்கும். திக்று செய்பவனைக் காண்பவர்கள் அஞ்சக் கூடிய விதத்தில் அவன் முகத்தில் கம்பீரத் தோற்றத்தைக் கொடுக்கும். இரணத்தை அதிகப்படுத்தும் திக்றுச் செய்பவனோடு மருகுதலாக இருப்பவன் சீதேவியாவான். அவனோடிருப்பவன் மூதேவியாகான். அழுது சஞ்சலத்துடன் செய்கிற திக்று கியாமத் நாளில் அர்ஷுடைய நிழலில் அமரும் பாக்கியத்தை பெற்றுத் தரும். திக்ராகிறது அதில் ஈடுபட்டவனுக்கு விலாயத் கிடைக்குமென்பதற்கு அடையாளமாகும்.

**ஷெய்குனா ஹலரத் (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களின் பேருரைகள்.**

21-12-1975ல் நடைபெற்ற காயல்பட்டினம் ஸூபி மன்ஸில் திறப்பு விழாவின் போது ஆற்றிய பேருரை.

ஹம்து ஸலவாத்திற்குப் பின்னால் நாம் இங்கு ஸூபி மன்ஸிலின் திறப்பு விழா நிகழ்ச்சிக்காக கூடியிருக்கிறோம். 'திறப்பு' என்ற சொல் அரபியில் 'பத்ஹ்' என்றும் 'பலாஹ்' என்றும் சொல்லப்படும். அதாவது முக்தி வெற்றி என்று இதை பொருள் கொள்ளலாம். இவை ஒன்றுக்கொன்று தொடர்பான கருத்தக்களாகும். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா நம் இதயங்களைத் திறப்பதற்கு ஒரு வழியாக – உதவியாகத்தான் நாமிங்கு கூடியுள்ளோம். இதயத்தில் போடப்பட்டுள்ள பூட்டை அழுக்கை – திரையை அகற்றுவதுதான் இதயத்தை திறப்பதாக ஆகும்.

அல்லாஹுத் தஆலா 'வஷ்ஷம்ஸி' சூறாவில் சூரியனைக் கொண்டும், சந்திரனைக் கொண்டும் சத்தியம் செய்து இறுதியில் 'வ நப்ஸின் வமா ஹவ்வாஹா' என்கிறான். மனிதனுடைய ஆன்மாவின் மீதும் அதை எப்படிப் பக்குவப்படுத்தி எந்த நிலையில் வைத்துக் கொள்கிறானோ அதன்மீதும் சத்தியமாக! என்று சொல்லி மனிதனுக்கு அவனுடைய ஆன்மா முக்தியாகக் கூடிய வழியை உரித்தாக்கிக் கொடுத்ததோடு அதை பரிசுத்தமாக்கும் முறையையும் அறிவித்துக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறான். ஆகையால் எவன் அந்த ஆன்மாவை பரிசுத்தப்படுத்துகிறானோ அவன் முக்தி (ஜெயம்) பெற்றவனாகின்றான்! எவன் அதைப் பாழ்படுத்தினானோ அவன் நஷ்டமடைந்தவனாகின்றான்.

அப்படி அந்த இதயத்தைப் பாழ்படுத்தக் கூடியது என்ன? அல்லாஹ்வே கூறுகிறான், 'ஈமான் கொண்டவர்களே! உங்களை உங்களுடைய பொருளும், பிள்ளைகளும் அல்லாஹ்வின் ஞாபகத்தை விட்டு பராக்காக்க வேண்டாம்!

எவராவது இப்படிச் செய்வாரேயாகில் (அதாவது பிள்ளையைக் கொண்டும் பொருளைக் கொண்டும் அல்லாஹ்வின் எண்ணத்தை மறந்திருப்பாரேயாகில்)அவர்கள்தான் நஷ்டவாளிகள்.

மேலும் அல்லாஹ் மனிதனுடைய பிணி என்பது என்ன? என்றும் கூறுகிறான். அது இம்மை மீதுள்ள ஆசைதான். அந்த இகலோக(துன்யா) ஆசைதான் இதயத்தில் திரையாக ஆகி யதார்த்தத்தில் இருக்கும் மெய்பொருளைக் கண்டுக் கொள்ள முடியாமல் அழுக்காக அமைந்துள்ளது. அந்த ஆழுக்கானது திரையாக இருப்பதை பூட்டு என்றும் சொல்லலாம். அல்லது கெட்டியான ஒரு 'துரு' என்றும் சொல்லலாம். இந்த துருவானது அவரவர்களின் நிலைக்கு தகுந்தபடியுள்ளது. அல்லாஹுத் தஆலா கூறுகிறான் 'அவர்களுடைய மனங்களில் அவர்கள் செய்த வேலையானது அழுக்காக –துருவாக ஆகிவிட்டது' என்று!

நாம் எந்த வேலையைச் செய்கிறோமோ அந்த வேலையின் குணபாடு கல்பிலே தெரியும். நல்ல வேலையைச் செய்தோமானால் நல்ல குணபாடு தெரியும். கெட்ட வேலையைச்

செய்தோமானால் கெட்ட குணபாடு தெரியும். செய்கின்ற வேலையின் மூலம் ஒரு ப்ராக்டீஸ்(அனுபவம்) குலுக் கிடைக்கும்.

குலுக் என்றால் நற்குணம் என்று பொருள். அதனால்தான் ரசூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் சொல்கின்றார்கள் 'அல்லாஹுவின் நற்குணங்களை எடுத்துக் கொள்ளுங்கள்' என்று. மேலும், 'என்னை நபியாக அனுப்பப்பட்டது உங்களின் நற்குணங்களையெல்லாம் சம்பூரணமாக்குவதற்குத் தான்' எனவும் ரசூலுல்லாஹ் கூறுகிறார்கள்.

மனிதர்களுடைய இதயங்களிலிருக்கும் பிணிகளை (அழுக்குகளை – திரையை – துருவை)யெல்லாம் போக்கி அவர்களைப் பரிசுத்தமாக்குவதற்காக அல்லாஹ் தனது தீர்க்கதரிசிகளை அவ்வப்போது அனுப்பி வைத்தான். அவர்கள் வந்து மக்களுக்குப் போதனைகள் புரிந்து மக்களுடைய இதயங்களை சுத்தமாக்கி இதயங்களிலுள்ள அழுக்கை நீக்கி தெளிவாக்கி அங்கு போடப்பட்டிருந்த திரையைக் கிழித்தெறிவதற்கான பணிகளைச் செய்தனர். இவ்வாறு எல்லா நபிமார்களையும் அனுப்பி இறுதியாக, நமக்கு அல்லாஹுத் தஆலா ஒரு மாபெரும் பாக்கியமாக அனைத்து உலகிற்கும் காரணமான நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லமவர்களைத் தந்தான்.

நாயகமவர்கள்கூறுகிறார்கள் 'நான் அல்லாஹ்வின் நூரிலிருந்து வந்தேன்.சகல பொருட்களும் என்னுடைய நூரிலிருந்து வந்தன' 'அல்லாஹ் எல்லா பொருட்களையும் கொடுக்கிறான். நான் தான் அதைப் பங்கு வைக்கிறேன்.

இந்த இரண்டு ஹதீதுகளையும் நாம் எண்ணிப் பார்க்கிற போது உலகத்திலுள்ள எந்த சிருஷ்டியாயினும் சரி ரசூலுல்லாஹ்வுடைய கொடையைக் கொண்டல்லாது வெளிவரவில்லை என்பது அறிய வரும்.

சகல சிருஷ்டிகளுக்கும் இரண்டு நிஃமத்து;கள் அவசியம் தேவை. அதாவது அந்தகாரத்தில் கிடந்த சிருஷ்டிகளானது (இல்லாமையிலிருந்து) உஜூதுக்கு வந்தன. அவைகளை மனிதர்களாக – பொருட்களாக வெளியில் கொண்டு வந்தது ஒரு நிஃமத். (இப்படி இல்லாமையிலிருந்து உஜூதுக்குக் கொண்டு வந்த) பிறகு அவைகள் நிலை பெறுவதற்காக வேண்டி அவைகளுக்கு உணவளிக்கப்பட வேண்டும். இவ்வாறு உணவளித்து (குறிபிட்ட காலம்) நிலைபெறச் செய்வது இரண்டாவது நிஃமத். இந்த இரண்டு நிஃமத்துகளை விட்டும் உலகத்தில் எந்தவொரு பொருளும் விலக்காகாது. இதில் முதலாவதை 'உஜூது' எனவும் இரண்டாவதை 'கியாம்'; எனவும் சொல்கிறோம். இந்த இரண்டு நிஃமத்துக்கும் காரணமானவர்கள் ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள்தான்!

அல்லாஹ் முதலாவதாகப் படைத்தது ரஸூலுல்லாஹ்வுடைய நூரைத்தான்! இந்த நூருடைய வழியாகவே சகல சிருஷ்டிகளும் வெளிவந்தன. 'ஆண்டவனே! இவைகளை உஜூதுக்குக் கொண்டுவா! இல்லாமையில் இருப்பதை வெளியில் கொண்டு வா!' என்ற நபிகள் நாயகமவர்களுடைய சிபாரிசின்படி அல்லாஹ் சகலவற்றையும் வெளியில் கொண்டு வந்தான். பிறகு அவைகள் 'யா அல்லாஹ் எங்களுக்கு ரிஸ்கைக் கொடு! எங்களைக் காப்பாற்று!

எங்களை நிலைக்க வை' என அதன்தன் பாஷையில் கேட்டுக் கொண்டிருந்தன. அப்படிக் கேட்டபோது அவைகளுக்கு ரிஸ்கை நேரடியாகக் கொடுத்திடவில்லை. ரிஸ்கை ரசூலுல்லாஹ்வின் கைகளில் கொடுத்தான். ரசூலுல்லாஹ்தான் அவைகளுக்கு (அல்லாஹ் கொடுத்த ரிஸ்கை பங்கு வைத்தார்கள். இதையே 'அல்லாஹ் கொடுக்கிறான், நான்தான் (அவைகளை அவரவர்களுக்கு) பங்கு வைக்கிறேன்' எனச் சொன்னார்கள் நாயகமவர்கள். இப்படி சகல வஸ்துக்களும் வந்ததும், நிலைத்து நிற்பதும் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டினால்தான்.ஆகவே எந்தப் பொருளும் ரசூலுல்லாஹ் அவர்களுக்குத் தெரியாமலிருக்க முடியாது. எதிலிருந்து எதற்காக எப்பொழுது எங்கெங்கு (அவைகள்) போகின்றன ஆகிய அனைத்தும் அவர்கள் அறிவார்கள்.

இவ்வுலத்திற்கு வந்த வஸ்துக்கள் அனைத்தும் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களால்தான் வந்தன. அவர்களின் பொருட்டினால்தான் ரிஸ்குகள் கிடைக்கின்றன். இப்பொழுது நாம் பேசிக் கொண்டிருப்பது கூட அவர்களுக்குத் தெரியும். ரிஸ்க் என்பது நாம் உண்ணும் உணவு மட்டுமல்ல. சுவாசித்தல்; மனித சக்தி அனைத்தும் ரிஸ்க்தான். ஒரு நிமிடமாயினும் சுவாசம் உள்ளே போய் வெளியே வரவில்லையென்றால் மனிதன் இறந்து விடுவான்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் அவதரிக்குமுன் நடந்த சரித்திர நிகழச்ச்pகளை அல்லாஹ் அவர்களுக்கு 'நினைத்துப் பாருங்கள் எனக் கூறி ஞாபக மூட்டுகிறான் என்றால் நாயகமவர்கள் அனைத்தையும் அறிந்திருப்பதால்தானே அவ்வாறு கூறுகிறான் இறைவன்!

இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு சமயம் கேட்டார்கள், 'ஆண்டவனே செத்துப் போன மிருகங்களை நீ எப்படி ஹயாத்தாக்குவாய்? என்பதை எனக்குக் காண்பித்துத் தா' என்று. அதற்கு அல்லாஹுத் தஆலா நான்கு பறவைகளைத் துண்டுதுண்டாக வெட்டிப் பின் ஒன்றாகச் சேர்த்து கூப்பிடுங்கள் எனச் சொன்னான். இதைக் காட்டி 'இதை நீங்கள் நினைத்துப் பாருங்கள்'; என நாயகமவர்களிடம் அல்லாஹ் கூறினான். இப்படி பல சரித்திரங்களைச் சொன்ன போதெல்லாம் 'இதை நினைத்துப் பாருங்கள்' எனச் சொன்னதினால் ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள் என யாரிடம் சொல்வார்கள்?எற்கனவே தெரிந்திருக்கும் ஒருவரிடமல்லாது தெரியாதவரிடம் சொல்வார்களா?இப்படி நினைத்துப் பாருங்கள் எனச் சொன்னதினால் நபிகள் நாயகமவர்களுக்கு அனைத்தும் தெரியும் என்பது புலனாகிறதல்லவா?

ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மலாயிக்கத்துமார்களை எல்லாம் சுஜூது செய்ய வைத்ததும் தெரியும். இப்லீஸ் சுஜூது செய்யாமல் ஓடியதும் தெரியும். இனி நடக்கக் கூடியதும் தெரியும்.

வஹ்ஹாபிகள் சொல்வார்கள் 'அல்லாஹ்வுக்கும் எல்லாம் தெரியும் ரசூலுல்லாவுக்கும் எல்லாம் தெரியும் எனக் கூறுவது மூலம் இருவரின் அறிவையும் சமமாக்கி விட்டாயே' என அவர்களின் புத்திக் குறைவினால் அப்படிக் கேட்பார்கள். அப்படியல்ல! ரசூலுல்லாஹ் எல்லாம்

அறிவார்கள் என்பது அல்லாஹ் அறிவித்துக் கொடுத்ததினால் அறிவார்கள். ஆனால் அல்லாஹ் அறிவது யாரும் அறிவித்துக் கொடுத்து அல்ல. சுயமாகவே அல்லாஹ் அறிவான்! இரண்டாவது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களின் அறிவு எவ்வளவு பரந்தும் விசாலமானதாயும் இருந்த போதிலும் அவர்கள் தாங்கள் ஒரு மஃலூக்காய் (படைக்கப் பட்டவர்களாய்) இருப்பதால் அவர்களின் அறிவு மஃலூக் (படைக்கப்பட்டது தான்) எல்லைக்குள் உட்பட்டதுதான். அல்லாஹ்வின் அறிவு இயல்பாக உள்ள எல்லைக்குள் அடங்காத அறிவாகும். அல்லாஹ்வின் அறிவு பூர்வீகமானது ரசூலுல்லாஹ்வின் அறிவு புதிதானது அல்லாஹ்வின் அறிவுக்கு ரசூலுல்லாஹ்வின் அறிவு சமமாகாது.

அனைத்துப் பொருட்களும் ரசூலுல்லாஹ்வுக்கு சொந்தம். அல்லாஹு கூறுகின்றான் 'நபியானவர்கள் மூஃமின்களுக்கு அவர்களின் நப்ஸைவிடவும் மிக முக்கியமானவர்கள்.'

ஒவ்வொரு மனிதனுக்கும் அவர்களின் அவரவர்களின் நஃப்ஸ்தான் பெரியது. அவர்களுடைய நப்ஸை விட முக்கியமானது சமீபத்திலிருப்பதும் அவர்களுக்கு ஒன்றுமில்லை. உதாரணமாக ஒரு தகப்பனிடத்தில் இஸ்ராயீல் வந்து ஒரு ஆளின் உயிரை நான் வாங்க வேண்டும். நீ வருகிறாயா? உன் மகனை எடுத்துக் கொண்டு போகட்டுமா? என்று கேட்டால் என்னை எடுக்காதீர்கள். என் மகனை வேண்டுமானால் எடுத்துக் கொண்டு போங்கள்' என்று தானே சொல்வான். மனிதன் எந்த விஷயத்திலும் தன்னைத்தான் பெரிதாய் நினைப்பவன் தான் தான் முக்கியம். அதன் பிறகுதான் பிள்ளைக் குட்டிகள் மற்றவைகள் எல்லாம் என்று நினைக்கக் கூடியவன்தானே மனிதன்? ஆனால் ரசூல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர் நப்ஸைவிடவும் முக்கியமானவர்கள் என்றல்லவா அல்லாஹ் கூறுகிறான். உங்கள் நஃப்ஸை நீங்கள் நேசிப்பதாக இருந்தால் அதைவிடவும் ரசூலுல்லாஹ்வை நீங்கள் நேசித்துத்தான் ஆக வேண்டும் ஏன்? நிழலை உவக்கின்றவன் உண்மையிலேயே மரத்தை நேசிக்கத்தானே வேண்டும்?

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த நாயகம் அவர்கள் அல்லாஹ்வுடைய ஹபீபாக விளங்குகிறார்கள். வேறெந்த நபிக்கும் 'ஹபீபுல்லாஹ்' என்ற பட்டம் கொடுக்கப்படவில்லை. இபுராஹீம் அலைஹிஸ்ஸலாம் கலீலுல்லாஹ் என்றழைக்கப்பட்டார்கள். மூஸா அலைஹிஸ்ஸலாம் கலீமுல்லாஹ் என்றழைக்கப்பட்டார்கள்.

சகலவற்றிற்கும் காரணமாக தனது ஹபீபை அல்லாஹ் நமது இதயங்களைச் சுத்தப்படுத்துவதற்காக, நமக்கு நேர்வழி காட்டுவதற்காக, நம்மை முக்தி வழிக்குக் கொண்டு செல்வதற்காக அனுப்பி வைத்தான். இதையே அல்லாஹ்தான் மூஃமினானவர்களுக்கு அவர்கள் இனத்திலிருந்தே ஒரு நபியை அனுப்பி பெரிய உபகாரம் செய்ததாகக் கூறுகின்றான்.

மனிதன் பிறந்ததிலிருந்து கப்ருக்குப் போகும் வரை – அவனது உச்சி முதல் உள்ளங்கால் வரை கப்றுக்குப் போன பிறகு கூட அல்லாஹ்வின் நிஃமத் ஒரு மனிதனுக்கு கிடைத்துக் கொண்டே இருக்கின்றன. அப்படி தனது நிஃமத்தை பரந்த அளவில் அல்லாஹ் மக்களுக்கு கொடுத்திருந்தும் 'நான் உனக்கு கண்ணைத் தந்து உபகாரம் செய்தேனே காலைத் தந்து

உபகாரம் செய்தேனே பிள்ளைகளைத் தந்து உபகாரம் செய்தேனே' என்றெல்லாம் கூறவில்லை. ஆனால் தான் உபகாரம் செய்ததாகக் கூறிக் காட்டுவது 'முஃமினானவர்களுக்கு அவர்கள் இனத்திலிருந்து ஒரு நபியை அனுப்பி பெரிய உபகாரம் செய்த'தாகச் சொல்லுகிறான்.

அல்லாஹ் தனது ஹபீபை நமக்குத் தந்திருப்பது கிடைத்தற்குரிய ஒரு அபூர்வமான பாக்கியம் தான்! அப்படி இறைவன் தனது ஹபீபைத் தந்ததற்கு நமது உச்சி முதல் உள்ளங்கால் வரையுள்ள ரோமக்கால்கள் எவ்வளவோ அதைவிட அதிகமாக நன்றி செலுத்தினாலும் நாயகமவர்களை நமக்கு அல்லாஹ் தந்த பாக்கித்திற்கு ஈடாகாது.

நமக்கு நிஃமத்தாக வந்த நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் வேதத்தை மக்களிடையே ஓதிக் காட்டி ஹிக்மத்தைக் கற்றுக் கொடுத்தார்கள்;. அவர்களை நாம் கண்ணியப்படுத்த வேண்டும். உதாரணமாக ஒரு அரசாங்கத்திலிருந்து ஒரு தூதர் இன்னொரு நாட்டுக்குச் செல்வாரேயானால் அந்தத் தூதுவரைக் கண்ணியப்படுத்துவது அவர்சென்ற நாட்டு மக்களுடைய கடமை. அவரைக் கண்ணியப்படுத்துவது அவர் சார்ந்துள்ள நாட்டைக் கண்ணியப் படுத்துவதாகும். அந்தத் தூதர் வீட்டிலுள்ள ஒரு நாயை மரியாதைக் குறைவு செய்தாலுங்கூட அது அவர் சார்ந்துள்ள அரசாங்கத்தையே மரியாதை குறைவு செய்ததாக ஆகும்.

ஒரு நாட்டின் தூதரை கண்ணியப்படுத்துவது அந்த நாட்டையே கண்ணியப்படுத்துவதாக ஆகுமென்றால், இறைவனால் அனுப்பப்பட்ட தூதரை நாம் எவ்வளவு கண்ணியப்படுத்த வேண்டுமென்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா? இறைவன் கூறுகிறான் 'நாம் உங்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர்களாகவும், நன்மாராயம் சொல்லக் கூடியவர்களாகவும்

அனுப்பினோம்'. ஏன் அனுப்பினோம்? 'உம்மத்துக்களே நீங்கள் அல்லாஹ்வை நம்புவதற்காகவும், அவனது ரஸூலைக் கொண்டு ஈமான் கொள்வதற்காகவும் அந்த ரஸூலை நீங்கள் கண்ணியப்படுத்துவதற்காகவும் மரியாதை செய்வதற்காகவும் அல்லாஹ்வை காலையிலும் மாலையிலும் தஸ்பீஹ் செய்வதற்காகவும் அனுப்பினோம். நாயகத்தை மூன்று விஷயங்களுக்காக அனுப்பியதாக அல்லாஹ் கூறுகிறான். இந்த மூன்று விஷயங்களில் ரசூலை கண்ணியப்படுத்துவதை சங்கை செய்வதை நடுவில் வைத்துச் சொல்லியுள்ளான். ரசூலை கண்ணியப்படுத்தாமல் இறைவனை ஒருவன் ஒப்புக் கொள்வானேயாகில் அவனுடைய ஈமான் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. ரசூலைக் கண்ணியப்படுத்தாது தவ்ஹீதை மட்டுமே வைத்துக் கொண்டானேயானால் அவனுடைய ஈமான் சரியாகாது. ரசூலை ஏற்றுக் கொள்ளாமல் - கண்ணியப்படுத்தாமல் எத்தனை இபாதத்துகள் செய்துக் கொண்டிருந்தாலும் பிரயோஜனப்படாது. ரசூலைக் கண்ணியப்படுத்தி தவ்ஹீது செய்தால், அந்த தவ்ஹீதை அல்லாஹ் ஏற்றுக் கொள்வான்.

இதற்காகத்தான் இறைவன் சொன்னான் 'குல்ஹுவல்லாஹுஅஹது.....என்ற சூரத்துல் இக்லாஸில் அல்லாஹ்வின் தவ்ஹீதைதான் கூறுகிறான். 'அல்லாஹ் ஒருவன் (ஒருவன் என்றால் உள்ளிலும், வெளியிலும் எந்த வகையிலும் கூட்டு இல்லை) அவன் யாரளவிலும் தேவையற்றவன். சகல பொருட்களுமே அவனளவில் தேவை உள்ளவைகளாக இருக்கிறது.

www.sufimanzil.org

அவன் யாரையும் பெறவுமில்லை. யாராலும் பெறப்படவுமில்லை. அவனுக்கு எந்த வஸ்துவும் நிகராகாது.' இந்த சூரத் முழுவதிலும் தவ்ஹீதைத்தான் இறைவன் சொல்கிறான். இதைச் சொல்கிறபோது ஆரம்பத்தில் 'குல்' நாயகமே அல்லாஹ்வின் தவ்ஹீதை நீங்கள் சொல்லுங்கள் என கூறுகிறான்.

அப்படியானால் ரசூலுல்லாஹ் சொன்ன தவ்ஹீதை எடுத்துக் கொள்ளாமல் அவர்களை ஒப்புக் கொள்ளாமல் 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று மட்டுமே கூறிக் கொண்டு ரசூலை நம்பவில்லையென்றால் நாயகமவர்களை ஏற்றுக் கொள்ளாமல் எந்த இபாதத்தும் செய்துக் கொண்டிருந்தால் (அப்படிப்பட்டவரின்) தவ்ஹீது ஏற்றுக் கொள்ளப்படாது. இறைவன் சொல்கிறான் 'காபிரீன்கள் செய்யக்கூடிய அமல்களை புழுதி மண்ணாக நாம் ஆக்கி விடுவோம்' என்று.

ஈமானில் பிரதானமான விஷயம் ரசூலை ஏற்றுக் கொண்டு மரியாதை செய்ய வேண்டும். என்பதாகும். ரசூல் சொன்னவைகள் அத்தனையையும் 'நீங்கள் சொன்னவை அனைத்தும் மெய்தான்' என ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி நம்புவதற்குப் பெயர்தான் ஈமான் என்பது.

ஒரு மனிதன் சொல்லும் வார்த்தையானது எதார்த்தத்திற்கு நேர்பட்டதாகவும் இருக்கலாம். எதார்த்தத்திற்கு நேர்படாததாகவுமிருக்கலாம். நாம் அந்த வார்த்தையை இது எதார்த்தத்திற்கு நேர்பட்டதுதான் என்று மனதில் நம்பினால் அதற்குப் பெயர் தான் ஈமான். அப்படியானால் அல்லாஹ்வை கொண்டு நம்புவது என்றால் என்ன அர்த்தம். அல்லாஹ் ஒருவன் அவனுக்கு இணை துணையில்லை அவனை யாரும் பெறவில்லை அவன் யாரையும் பெறவுமில்லை. அவனுக்கு சமமாக ஒருவருமில்லை.' என ரசூலுல்லாஹ் சொன்னார்களே அந்த வார்த்தை சரிதான். எதார்த்தத்திற்கு நேர்பட்டது தான் என நம்புவது தான் ஈமான். அல்லாஹ் ஒருவன் என நாயகம் கூறிய வார்த்தையை மெய் என நம்புவதே அல்லாஹுவைக் கொண்டு ஈமான் கொள்வது!

அப்படியானால் இறுதியில் எங்கு போய் முடிகிறது? ரசூலை கண்ணியப்படுத்துவதில்! அல்லாஹுத் தஆலா அவர்களை தூதரென அனுப்பி, இவர் தூதர்தான் எனக் காட்டுவதற்கு முஃஜிஸாத்துக்களை இறைவன்தான் காட்டுகிறான். குர்ஆனிலே 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹி – முஹம்மது அல்லாஹுவின் தூதர் எனச் சொல்லுகிறான். குல் 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்' என வந்தா இருக்கிறது குர்ஆனிலே? முஹம்மது அல்லாஹ்வுடைய தூதரென நாயகமே நீங்கள் சொல்லுங்கள் என இறைவன் கூறாமல் முஹம்மது அல்லாஹ்வின் தூதரென்றுதானே கூறுகிறான்?

'அல்லாஹு ஒருவன் அவனுக்கு இணை துணை இல்லை' எனக் கூறிய (ஆயத்)தில் 'குல்' சொல்லுங்கள் என்று கூறியுள்ளான் இறைவன் அப்படியானால் 'லாயிலாஹ இல்லல்லா' (நபியே) நீங்கள் சொல்லுங்கள். 'முஹம்மதுர்ரஸூலுல்லா' என்பதை நான் சொல்லுகிறேன். உலகத்தார்க் கெல்லாம் முஹம்மது இறைவனின் ரசூல் என நான் சொல்கிறேன்' என அல்லாஹ் சொல்கிறான். இப்படி அவனது தவ்ஹீதைப் பற்றி ரசூலைச் சொல்லச் சொல்கிறான்.

ரசூலுல்லாஹ்வின் ரிஸாலத்தை – தூதுவத்தை இறைவன் கூறுகிறான். ஆகவே ரசூலைக் கண்ணியப்படுத்தாவிட்டால் அது மனதில் (நி∴பாக்) நயவஞ்சகத்தை உண்டாக்கும்.

உள்ளத்தளவில் ரசூல் என ஏற்றுக் கொள்ளாமல் உதட்டளவில் ரசூல் எனச் சொல்வதினால் எந்தப் பலனுமில்லை. அல்லாஹுத் தஆலா நமது உள்ளங்களைப் பார்க்கிறான். ஆனால் முனா∴பிகீன்கள் ரசூலை நிராகரித்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் உதட்டளவிலே 'ரசூல்' என ஒப்புக் கொள்கிறவர்கள்.இப்படி உள்ளத்தளவில் அல்லாது உதட்டளவில் சொல்பவர்கள் மு∴மின்களல்ல என இறைவன் கூறுகிறான். இதன் காரணமாகவே ரசூலைக் கண்ணியப்படுத்துதை இறைவன் நடுவண் வைத்துக் கூறினான்.

ரஸூலைக் கண்ணியப்படுத்தாவிட்டால் தஸ்பீஹு உங்களிடத்தில் செல்லாது. ரஸூலைக் கண்ணியப்படுத்தாவிட்டால் தவ்ஹீது பிரயோஜனப் படாது. இதன் காரணமாகவே நாயகமவர்கள் 'உங்களிலொரு மனிதன் அவனுடைய பிள்ளையைவிட, தகப்பனைவிட, அவனுடைய நப்ஸைவிட நானவனிடத்தில் அதிக பிரியமாக்கப்பட்டவனாக ஆகிறவரை அவன் மு∴மினாக ஆக மாட்டான்' எனச் சொன்னார்கள்.

ரஸூலுடைய உகப்பு இருந்தால்தான் ஈமான் பூர்த்தியடையும் இஸ்லாமும் சுத்தமாகும். இஸ்லாமென்பது நடைமுறை. அதை ஒழுங்காக சம விருத்தி செய்து ஈமான், இக்லாசுடன் நடந்தால்தான் கல்பு சுத்தமாகும். அதாவது கல்பிலிருக்கக் கூடிய திரை நீங்கும் பூட்டு திறக்கும். இப்படித் திறப்பதற்கு திரையை விலக்குவதற்கு ரஸூலைக் கண்ணியப்படுத்த வேண்டும்.

நமது கண்ணியத்திற்குரிய ஸதக்கத்துல்லா அப்பா அவர்கள் 'மனிதனுடைய மனப்பிணி தீருவதற்கு மதீனா சர்க்காருக்குப் போக வேண்டும்' என்றார்கள்.மேலும் நாயகமவர்களே எங்களுடைய இருதயப் பிணியானது உங்களுடைய மருந்தைக் கொண்டல்லாது சுகப்படாது. உங்களின் உவப்பைக் கொண்டல்லாது ஈமான் சரியாகாது. உங்களை ஒரு மனிதன் உவக்கிறானென்றால் அவன் கொடுத்து வைத்த பாக்கியசாலி!

ஒருவன் கியாமத் நாளையில் நரகக் குழியிலே தடுமாறி விழப் போனாலும், நரகின் அதிபதிகள் இவன் ரஸூலை உகந்தான் எனக் கூறி அவனை நரகக் குழியின் அதாபை விட்டும் தவிர்த்து விடுவார்கள். ரஸூலை உகந்தவனுடைய முகத்தைப் பார்த்தே அதை அறிந்துக் கொள்வார்கள்.'

ரஸூலுடைய உகப்பு இருக்கும்போது நரகம் ஒன்றும் செய்யாது. எங்கே போனாலும் எப்படிப் போனாலும் ரசூலிடம் தான் போக வேண்டும். 'அந்த வாசல் ஈடேற்றமாக, சந்தோஷமாக, சுபிட்சமாக போகக் கூடிய வாசல். அந்த வாசல் வழி போகாமல் வேறு வாசல் வழியே போகாதீர்கள். அந்த வாசல் ரசூலுடைய வாசல் அதுவே நேர்வழி!'

பாவம் என்பது அல்லாஹ்வின் ஏவல்களுக்கு மாற்றம் செய்து அவனது விலக்கல்களை உதாசீனப்படுத்தி நடப்பதாகும். இதுவே ஷரீஅத்திற்கு எதிரானது எனவும் சொல்லப்படும்.

மு.்.மினானவன் ரஸூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியபடிக்கே தவ்ஹீதைக் கொண்டு ஈமான் கொண்டாக வேண்டும். தெரியாது பாவம் செய்தால் அதைத் தீர்ப்பதற்கு ரசூல்லாவிடம் போக வேண்டும்.

'அந்த ஜனங்கள் அநியாயம் செய்து விட்டு தவறு செய்து விட்டு உங்களிடத்திலே (ரசூலுல்லாஹ்விடத்தில்) வருவார்களேயானால் வந்து அல்லாஹுவிடத்தில் பிழை பொறுக்கத் தேடுவார்களேயானால், அல்லாஹுத்தஆலா (அனியாயம் செய்தவர்களின்) பிழைகளை பொறுத்து பொருந்திக் கொள்வான்' என அல்லாஹ் கூறுகிறான்.

இங்கு மூன்று விஷயங்களை அல்லாஹ் கூறுகிறான். பாவத்தை செய்கிறவர்கள் என்ன செய்ய வேண்டும்? ரசூலுல்லாஹ்வின் தர்பாரில் நின்று கொண்டு அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேட வேண்டும். பின்பு ரசூலுல்லாஹ் இவர்களுக்காக பிழை பொறுக்கத் தேடுவார்களேயானால் அப்பொழுது தான் அல்லாஹுத் தஆலா (அவர்களின்) பிழை பொறுத்து கிருபை செய்வான். இந்த மூன்றும் இருந்தால் அல்லாஹ் பாவங்களை மன்னிப்பான். இங்கு அவர்களிடமிருக்கும் ந.்.ப்ஸுக்கு அநியாயம் செய்தவர்கள் உங்களிடம் வருவர்களேயானால் மதீனாவுக்கு வருவார்களேயானால் என்று சொல்லவில்லை' ஏன்? மதீனாவுக்கு போகிறவர்கள் பணக்காரார்களாகத்தானே இருப்பார்?. அவர்களும் வருடத்திற்கு ஒருமுறை தான் ஹஜ்ஜுக்குப் போவார்கள்! ஒவ்வொருவரும் மதீனாவுக்குப் போகமுடியுமா? இயலாது அல்லவா?

ஆகவே தான் 'மதீனாவுக்கு வருவார்களேயானால்....' எனச் சொல்லாது 'உங்களிடத்திலே வருவார்களேயானால்' என்று கூறுகிறான். ரசூலுல்லாஹ்வின் காலத்திலேதான் அவர்கள் ஹயாத்தோடு இருக்கும்போதுதான் பாவம் செய்தவர்கள் ரசூலுல்லாஹ்விடம் போகவேண்டும் என்பதல்ல இந்த ஆயத்தினுடைய கருத்து. இவ்வாயத்து ரசூலுல்லாஹ்வுடைய காலத்தில் இறக்கப்பட்டது. ஸஹாபாக்கள் அப்போது இருந்தார்கள் அவர்களுக்கு மட்டுமா இவ்வாயத்து பொருந்தும்? இல்லை எல்வோருக்கும்தான் அல்லாஹ் கூறுகிறான். ரசூலு;லலாஹ் இப்போதும் ஹயாத்தாதுடன்தான் இருக்கிறார்கள். இது நம் கண்களுக்கு தெரியாது. ஜின்களெல்லாம் இருக்கின்றன. அவைகள் நம் கண்களுக்குத் தெரியவில்லை என்பதானாலேயே அந்த ஜின்களெல்லாம் இல்லாமல் போய்விட்டதா? அல்லது 'இல்லை' என்றுதான் சொல்ல முடியுமா? மலாயிக்கத்துமார்கள் நம் கண்களுக்குத் தெரியவில்லை என்பதினாலேயே அவர்கள் இல்லையெனச் சொல்ல முடியுமா? அதுபோல ரசூலுல்லாஹ் நமது கண்களுக்கு மறைந்திருக்கிறார்களே தவிர வபாத்தாகவில்லை வபாத்தாகி இருந்தால் நாம் எப்படி அவர்களிடம் போவோம்?

ரசூலுல்லாஹ் ஹயாத்தோடுதான் இருக்கிறார்கள். என்பது இதன் மூலம் விளங்குகிறது. எனவே நமது பிழைகள் பொறுக்கப்பட வேண்டுமானால் ரசூலுல்லாஹ்வின் தர்பாரிலே நின்றுக் கொண்டு அல்லாஹுவிடம் பிழை பொறுக்கத் தேட வேண்டும்.

நமது கண்கள் குருடாக இருக்கிற போது ரசூலுல்லாஹ்வை நாம் எப்படி காண்பது? அதற்கு அல்லாஹுத்தஆலா எளிதான வழிமுறையொன்றைக் காட்டுகிறான். ஜனங்களெல்லாம்

சொல்லுவதுபோல ரசூலுல்லாஹ் மதீனாவில் மட்டுமல்ல, எங்கும் (நிறைந்து) இருக்கிறார்கள். அவர்களை உகந்தவனுடைய கல்பில் இருக்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களிடம் ஒருமுறை சஹாபாக்கள் 'நாயகமே நாங்கள் ஒவ்வொருவரும் ஸலவாத்துச் சொல்கிறோமே அது எப்படி தங்களுக்கு வந்து சேருகிறது?' என்று கேட்டார்கள்.

நாயகமவர்கள் கூறினார்கள். 'அல்லாஹ் ஒரு மலக்கை நியமித்துள்ளான். அவர் என்னிடம் வந்து நீங்கள் சொல்லும் சலவாத்தைச் சொல்வார். அவர் ஒவ்வொரு நாளும் ஓயாமல் என்னிடம் வந்து சொல்லியவாறிருப்பார். இன்னின்னார் உங்களுக்கு சலவாத்துச் சொல்கிறார் என்று நித்தமும் என்னிடம் கூறிக் கொண்டே இருப்பாரவர். இதுவே அவரது வேலை. ஆனால் என்மீது ஆசை உள்ளவர் யாராவது சலவாத்துச் சொல்வாரேயானால் அந்த மலக்கு வந்து சொல்வதற்கு முன் நானே (என் மீது சலவாத்து சொன்னவரின்) அருகே போய் கேட்பேன்.

ரசூலுல்லாஹ் அவர்கள் மீது ஆசை உள்ளவரிடம், 'நானே போய் கேட்பேன்' என ரசூலுல்லாஹ் கூறுகிறார்களென்றால், அவர்களிடம் போக வழி என்னவென்றால் ரசூலுல்லாஹ் மீது உகப்பாக இருக்க வேண்டும். உகப்பாக சலவாத்து சொல்ல வேண்டும். அப்படியானால் அவர்கள் நம் பக்கத்திலேயே வந்து விடுவார்கள். ஆகவே சலவாத்து ஓதிவிட்டு அல்லாஹுவிடம் பிழை பொறுக்கத் தேடுங்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்படும். அவ்வேளையில் நீங்கள் ரசூலுல்லாஹ்வின் தர்பாரில் நின்று கொண்டு கேட்கிறீர்கள். எப்படிப் பார்த்தாலும் ரசூலுல்லாஹ்வின் வழியில் போகாதபடி – அவர்கள் சொன்னபடி நடக்காத முறையில் போனால் வெற்றி ஆகாது. ஆகவேதான் அல்லாஹுத் தஆலா ரசூலுல்லாஹ்வைக் கண்ணியப்படுத்துமாறு சொல்கிறான்.

'ஈமான் கொண்டவர்களே! உங்களின் குரலை ரசூலுல்லாஹ்வின் குரலுக்கு மேலாக உயர்த்தி சத்தம் போட்டு பேசாதீர்கள். உங்களுக்குள் ஒருவருக்கொருவர் கூப்பிட்டுக் கொள்வதுபோல வெடுக்கென்று கூப்பிடாதீர்கள். அப்படி (குரலை உயர்த்தியும், வெடுக்கென்றும் கூப்பிட்டுக் கொண்டிருந்தால் உங்கள் அமல்களெல்லாம் அழிந்து விடும்) உங்களுக்குத் தெரியாமல் நீங்கள் செய்த அமல்களெல்லாம் அழிந்து விடும்' என இறைவன் எச்சரிக்கிறான். ரசூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை நாம் ஒருவருக்கொருவர் உறைவின் முறை சொல்லி அழைப்பதுப்போல அண்ணன், மாமா என்றெல்லாம் அழைத்தல் கூடாது. மாறாக 'யா ரசூலுல்லாஹ்' 'யா ஹபீபல்லாஹ்' எனக் கூப்பிட வேண்டும். இப்படித்தான் சஹாபாக்களெல்லாம் கூப்பிட்டார்கள். செய்யிதுனா அபூபக்கர் சித்தீக் அவர்கள் ஒருமுறையேனும் நாயகமவர்களை 'மருமகனே' என்றழைக்கவில்லை. பாத்திமா நாயகி அவர்கள் ஒரு நாளெனும் 'என்னுடைய தகப்பனாரே' என்றழைக்கவில்லை. வேறு எப்படிக் கூப்பிட்டார்கள்? யா ரசூலுல்லாஹ், யா ஹபீபல்லாஹ் என்று அழைத்தார்கள். இப்படித்தான் நாமும் அழைக்க வேண்டும் அப்படி இல்லையெனில் ஈமான் குட்டிச் சுவராகி விடும்.

நல்ல சிறிய அமல் செய்வதால் பெரிய பாவம் அழிந்தா போகும்? அழியாது. யார் ஒரு அணு அளவேனும் நன்மையைச் செய்தானோ(அதற்கான நற்கூலியை)பெற்றுக் கொள்வான்.



www.sufimanzil.org

அணுவளவேனும் தீமையைச் செய்தாலும் அதற்குரிய தண்டனையைப் பெற்றுக் கொள்வான். ஆகவே ஒருவன் எவ்வளவு நன்மைகளைச் செய்திருந்தாலும் ரசூலைக் கொண்டு ஈமான் கொள்ளவில்லையானால் - ரசூலைக் கண்ணியப்படுத்தவில்லையானால் அவைகள் அனைத்தும் அழிந்து விடும். அழிந்து விடுமென்றால் பொருளென்ன? காபிராகிப் போவார்கள். காபிராகிப் போனால் தானே அமல்கள் எல்லாம் அழியும்? முஃமினாய் இருந்தால் அழியாது. அப்படியானால் ரசூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்களை சொஞ்சம் வருத்தப்படுத்தினாலும் நீங்கள் காபிர் ஆகிப் போவீர்களல்லவா?

'என்னுடைய ஒரு ரோமத்திற்கேனும் யாராகிலும் ஒருவன் அவமரியாதை செய்வானேயாகில் அவனுக்கு சொர்க்கம் ஹராமாக்கப்படும்' என்று ரசூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

ரசூலுல்லாஹ்வின் முடியை ஒருவன் அவமரியாதை செய்தால் அது (கூட) ரசூலுக்கு வருத்தத்தைக் கொடுக்கும். கொடும்பாவி கட்டி ரோட்டிலே இழுத்துச் செல்வதை பார்க்கிறோம். அக்கொடும்பாவி மீது அடிக்கும்போது துணியினால் செய்த அதன் மீது தான் அடிவிழுகிறது. ஆனால் அக்கொடும்பாவி யாருக்காக கட்டப்பட்டதோ அவருக்கு செய்வதாக அங்கு எண்ணப்படுகிறது. யாரை அவமரியாதை செய்ய நாடி அக்கொடும்பாவி இழுத்து செல்லப்படுகிறதோ அவருக்கு அவமரியாதை போய் சேருகிறதல்லவா? இதுபோல நாயகத்தின் ஒரு ரோமத்தை இழிவு செய்தாலும் அது ரசூலையே அவமதித்ததாகும்.

ரசூலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து பொருட்களுக்கும் நாம் மரியாதை செய்ய வேண்டும். இது தவிர ரசூலினுடையது என்று ஒருரோமத்தினைக் காட்டி ஜனங்கள் கூறினாலும் அதற்கு ஆதாரம் என்ன என்று தேடிக் கொண்டிருக்காமல் அதற்கும் மரியாதை செய்ய வேண்டும். சாட்சிகளும் ஆதாரங்களும் இங்கு தேவையில்லை. சாட்சிகள் ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு விதமாக இருக்கின்றன. விபச்சார குற்றத்தை நிரூபிக்க 4 சாட்சிகள் வேண்டும். அந்த 4 சாட்சிகளும் நாங்கள் கண்களால் கண்டோம் என சாட்சி கூற வேண்டும். திருட்டுக் குற்றத்தை நிரூபிக்க 4 சாட்சிகள் தேவையில்லை 2 சாட்சிகள் போதும். ஒருவன் அவனது பிள்ளைதான் என்று சொல்ல என்ன சாட்சி? இதற்கு சாட்சி தேவையில்லை. அதனால் ரசூலுடைய திருமுடி ரசூலைச் சேர்ந்தது என்று ஜனங்கள் சொன்னால் கண்டிப்பாய் அதை நாம் (ஏற்றுக் கொண்டு) மரியாதை செய்தல் வேண்டும்.

'பெரிய மனிதர்கள் அனைவரும் அல்லாஹ்வின் ஞாபச் சின்னங்கள்;' ஆகவே பெரிய மனிதாகளுக்கு நாம் மரியாதை செய்ய வேண்டும். அல்லாஹ் சங்கைப்படுத்திய எந்தவொரு வஸ்துவையும் மரியாதை செய்பவர்களை அல்லாஹ் புகழுகிறான். அது தவிர்த்து பெரியவர்களை அவமரியாதை செய்தால் இபாதத்தை(வணக்கத்தை) கைவிட்டால் என்ன தண்டனை கிடைக்குமோ அதை விட அதிகமான தண்டனை கிடைக்கும். பெரியவர்களை அவமரியாதை செய்தால் அது துன்பத்தில் கொண்டு போய் விட்டு விடும்.

ஈமான் என்பது 'லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்'; என்று மனதால் நிய்யத் செய்து வாயால் மொழிந்து அவர்களைக் கண்ணியப்படுத்த வேண்டும். நாயகமவர்கள் சொன்னதைப் போல தவ்ஹீதைக் கடைபிடிக்க வேண்டும். அது தவிர வேறு தவ்ஹீதுக்கு போய்விடக் கூடாது. கிறிஸ்தவர்கள் கூட தங்களை தவ்ஹீதுக் கொள்கையுடையவர்கள் எனச் சொல்லிக் கொள்கிறார்கள். அந்த ஏகதத்துவத்தை அல்லாஹு ஏற்றுக் கொள்ளமாட்டான். நாம் ரசூலுல்லாஹ் சொன்ன தவ்ஹீதுக்கு மாற்றம் செய்தால் அது பிரயோஜனப்படாது. அவர்கள் வேறெந்த உம்மத்துக்கும் கிடைக்காத நபியாகவும், நமக்கோர் அரும்பெரும் பொக்கிஷமாகவும் வந்துள்ளார்கள். அவர்களைப் பின்பற்றி நடப்பதன் மூலமாக அவர்களை நமக்கு அனுப்பி வைத்த அல்லாஹுவுக்கு நன்றி செய்தவர்களாவோம்.

நாயகமவர்களின் சொல்லை செயலுருவாக்கி காட்டியவர்கள் ஸஹாபாக்களாவர். மதீனாவில் 'அஹ்லுஸ்ஸுப்பா' எனும் ஒரு கூட்டத்தினர் இருந்தனர். அவர்கள் எந்நேரமும் நாயகமவர்களின் உகப்பிலேயே இருப்பார்கள். எந்நேரமும் நாயகமவர்களின் எண்ணத்திலும் இறை தியானத்திலும் இருந்துக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களின் ஒரு பெருங்கூட்டமே அன்று இருந்தது. அந்த அஸலுஸ்ஸுஃப்பாக்களின் ஞாபகார்த்தமாக நாம் இதை '**ஸூபி மன்ஸில்**' என்று பெயர் வைத்திருக்கிறோம்.

அந்த அஹலுஸ்ஸுஃப்பாக்கள் எப்படி நடந்தார்களோ அப்படியே நாமும் (இறைதியானத்திலும், நாயகமவர்களின் எண்ணத்திலும்) இருத்தல் வேண்டும். அவர்களின் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்காகத்தான் நாம் இந்த மாதிரி ஓர் அமைப்பை (ஸூபி மன்ஸில்) ஏற்படுத்தியுள்ளோம். இது ரசூலுல்லாஹ்வின் வழியை பின்பற்ற ஒரு காரணமாய் இருக்கிறது. அவர்களுடைய வழி முறைகளைப் பின்பற்றிப் போனால் நமது கல்பு பரிசுத்தமாகும். கல்பிலுள்ள பிணி நீங்கும்.

அல்லாஹுத் தஆலா மனிதனைப் படைத்ததே அவனை அறிவதற்காகதான். 'வமா கலக்துல் ஜின்ன வல் இன்ஸ இல்லா லியஃபுதூன்' - மனிதர்களையும், ஜின்வர்க்கத்தையும் என்னை வணங்குதற்கன்றி (பிறிதொன்றுக்கும்) படைக்கவில்லை என இறைவன் தனது திருமறையில் கூறுகிறான். இங்கு பிரதானமான விஷயம் அல்லாஹுவை வணங்குவது! இறைவனை அறிவதற்கு தடையாக – திரையாக இருப்பது பாவமாகும். இந்த பாவமென்னும் திரை ஒரு வீட்டைப் பூட்டியது போல இருக்கிறது. இந்தப் பூட்டை – திரையை நீக்குவதற்கு நல்ல அமல்கள் செய்திட வேண்டும். அப்படிச் செய்தால் நமது இதயப்பிணியும், திரையும் நீங்கி விடும். இப்படி நல்ல அமல்களைச் செய்வதற்காக ஏற்பட்ட இடம்தான் இந்த 'ஸூபி மன்ஸில்'. இந்த ஸூபி மன்ஸில் சிறந்த நல்லமல்கள் செய்வதற்குத்தான.; நல்லமல்களை நாம் செய்தால் இறைவன் நமது கல்பை இதயத்தைத் திறப்பான். நமது கல்பைத் திறப்பதற்கு வஸீலாவாக நாம் இந்த ஸூபி மன்ஸிலை திறந்து வைத்திருக்கிறோம். ஆகவே அல்லாஹுத்தஆலா நம்மனைவரின் இதயங்களைத் திறக்கச் செய்து நல்லருள் பாலிப்பானாக! ரசூலுலில்லாஹ் மீது நமது உகப்பை, பிரியத்தை –நேசத்தை அதிகப்படுத்துவனாக!

நாம் நாயகமவர்களின் காலடிச்சுவட்டைப் பின்பற்றி எந்நேரமும் அல்லாஹுவும், அவனுடைய ரஸூலும் சொல்லியபடி நடந்து நாம் வெற்றியடைய அல்லாஹ் அருள் புரிவானாக ஆமீன்.

**பேருரை : 2**

*மஹ்லராவில் விழா ஒன்றில் ஆற்றிய பேருரை*

ஹம்து ஸலவாத்திற்கு பின்னால்....

அல்லாஹ் சொல்கிறான் 'நாயகமே நீங்கள் நினைத்துப் பாருங்கள். அல்லாஹ் மலக்குகளிடம் சொன்னான், நான் பூமியில் எனது கலீபாவை – பிரதிநிதியை ஏற்படுத்தப் போகிறேன். உடனே மலக்குகள் பூமியில் பஸாது செய்பவர்களை, இரத்தம் சிந்தக் கூடியவர்களை உண்டாக்கப் போகிறாயா?

என்று கேட்டார்கள். அல்லாஹ் சொன்னான். உங்களுக்குத் தெரியாதவற்றை நான் தெரிந்துள்ளேன்' என கூறிவிட்டு ஆதம் (அலை) அவர்களைப் படைத்து, அவர்களுக்கு எல்லா அஸ்மாக்களையும் படித்துக் கொடுத்து விட்டு மலக்குகளிடம் சொன்னான், இவற்றின் பெயரைச் சொல்லுங்கள். மலக்குகள் சொன்னார்கள் 'நீ கற்று தந்த, படித்து தந்தவற்றைத் தவிர வேறொன்றும் எங்களுக்குத் தெரியாதே! நிச்சயமாக நீயே நன்கு செவியுறுவோனும், அறிவாளனுமாக இருக்கிறாய்.' பின்பு இறைவன் நபி ஆதமைப் பார்த்து, 'இவற்றின் பெயர்களை நீங்கள் சொல்லுங்கள்' என்று கூற எல்லாவற்றையும் ஆதம்(அலை) சொன்னார்கள்.

அல்லாஹ் மலக்குகளைப் பார்த்துச் சொன்னான். 'நான் உங்களிடம் கூறவில்லையா? வானங்கள், பூமியினுடைய இரகசியங்களை நான் அறிந்திருக்கிறேன். நீங்கள் வெளிரங்கமாக வைத்திருப்பவைகளையும், இரகசியங்களையும் நான் நன்கு அறிந்துள்ளேன் என்று கூறிவிட்டு ஆதமுக்கு நீங்கள் சுஜுதுச் செய்யுங்கள்' என்றும் சொன்னான்.

எல்லா மலக்குகளும் சுஜுது செய்தனர் இப்லீஸைத் தவிர. அவன் பெருமையடித்து விலகிக்கொண்டான். எனவே காபிராகிப் போனான். அல்லாஹ் ஆதமுக்கு அஸ்மாக்களை கற்பித்துக் கொடுத்து மலாயிக்கத்துகளை விட மேன்மையாக்கி அவர்களால் சுஜுது செய்யவும் வைத்தான்.

ஆனால் இப்லீஸோ பெருமையடித்து சுஜுது செய்யாததோடு 'நான் அவரைவிட விசேசமானவன். என்னை நெருப்பினால் - படைத்துள்ளாய். அவரை மண்ணினால் படைத்திருக்கின்றாய்' என்று சொல்லி கர்வம் கொண்டான். அல்லாஹ் ஆதம் நபிக்கு கொடுத்த சங்கையை மதிப்பை மறுத்தான், குறைத்துவிட்டான்இ தன்னைப் பெரிதாகக் கண்டான். ஆகவே அல்லாஹ்வின் நிஃமத்துக்கு மாறு செய்தான். காபிரானான்.

ஆதம் நபி அவர்கள் அனைத்து வஸ்த்துக்களைவிட மேலாக காரணம் அவர்களுக்கு அல்லாஹ் அஸ்மாக்களைக் கற்பித்துக் கொடுத்தது தான் காரணம். பின்னர் அவர்களுடைய

மக்களுக்கும் - சந்ததிகளுக்கும் அஸ்மாக்களை கற்பித்துக் கொடுக்க அவர்களில் வெளியாக ஏற்பாடு செய்தான்.

'ஆதம் நபிக்கு அஸ்மாக்களை கற்பித்தான்' என்பதற்கு கருத்து எல்லா அஸ்மாக்களும் அவர்களிடத்தில் வெளியானது. அல்லாஹ் சொல்கின்றான், 'சூரியன் சந்திரன் பூமி வானம் இரவு பகல் மனித ஆன்மா ஆகியவை மீது சத்தியமாக மனித ஆன்மாவை சுத்தப்படுத்தக் கூடிய அதற்கு நன்மை தரக்கூடியதையும் அதற்கு தரக்கூடியதையும் அந்த ஆன்மாவுக்குக் கற்பித்துக் கொடுத்தோம்.

ஆகவே யார் அந்த ஆன்மாவை சுத்தி பெறச் செய்தானோ அவன் வெற்றியடைந்தான். எவன் அழுக்கடையச் செய்தானோ அவன் கேடு கெட்டான். ஒரு வஸ்து சம்பூரணம் அடைகிறது என்று சொன்னால் அதில் என்னென்ன அமைக்கப்பட்டிருக்கிறதோ அவைகள் எல்லாம் வெளியே வருமானால் அது தான் சம்பூரணம் என்று சொல்லப்படும்.

ஆதமுடைய மக்களிடத்திலே அவனுடைய எல்லா அஸ்மாக்களும் வெளியே வருவதற்கான அமைப்பை ஏற்படுத்தி இருக்கிறான். இந்த அமைப்பு வெளியே வருமானால் அதுக்குப்பெயர் சம்பூரணம். அல்லாஹ்வுடைய அஸ்மாக்கள் மனிதனிடத்திலே வெளியாகும்போது மனிதன் முக்தி அடைந்தவனாகின்றான். எவன் அசுத்தப்படுத்துகிறானோ அவன் நஷ்டமடைந்தான் என்று சொல்வதானது சுத்தியாக்கக் கூடிய நிலையை சொல்லவில்லை.

இன்னொரு இடத்தில் 'கத் அப்லஹ மன் தஸக்கா...' எவன் தன் இதயத்தை அல்லாஹ்வுக்கு வழிப்படச் செய்து சுத்தப்படுத்தினானோ அவன் வெற்றியடைந்தான். எவன் அல்லாஹ்வை நினைக்காமல் உலக ஆசையில் கிடந்தானோ, உலகில் உழன்றானோ அவன் நஷ்டமடைந்தான். குர்ஆனில் மட்டுமல்ல எல்லா வேதங்களிலும் அல்லாஹ் சொல்கின்றான்.

ஆகவே மனிதன் தனது இதயத்தை சுத்தப்படுத்துகின்ற முறை அல்லாஹ்வை நினைந்து தொழ வேண்டும். அவனை நினைப்பதினாலும் தொழுவதினாலும் இதயம் சுத்தம் பெறும். இதயம் சுத்தியாகின்றபோது அல்லாஹ்வின் அஸ்மாக்கள் எல்லாம் அவனில் வெளியாகும். எப்போது அஸ்மாக்கள் வெளியாகின்றனவோ அப்போது மனிதன் சம்பூரணம் அடைந்தான். முக்தி பெற்றான்.

இப்படி அல்லாஹ்வின் அஸ்மாக்கள் வெளியாவதற்குத் தகுந்த அமைப்பில் மனிதனையும், ஜின் வர்க்கத்தையும் படைத்திருப்பதாக அல்லாஹ் கூறுகின்றான். 'என்னை வணங்குவதற்காக அல்லாமல் படைக்கவில்லை' என்பதற்கு 'இல்லாலியஃரிபூன்' என்னை அறிவதற்காகத் தவிர படைக்கவில்லை என்று வணக்கம் என்பதற்கு அறிதல் என்று தப்சீர் செய்கின்றார்கள்.

ஏனென்றால் அல்லாஹ்வை அறிவது தான் பிரதானமான காரியம். அந்த அறிவுக்கு பிரதானமாக அமைவது இபாதத் செய்தல். அவனை நினைப்பதாலே, வணங்குவதாலே அவனை

அறிய வேண்டி வரும். இது அவனை அறிய காரணமாக அமைகிறது. இந்த இடத்தில் அல்லாஹ் காரியத்தை சொல்லாமல் காரணத்தை சொல்கின்றான் என்று காட்டி 'இல்லா லியஃபூரின்' என தப்சீர் செய்கின்றனர்.

அவனை அறிவது தான் முக்தி அறிவது என்றால் அல்லாஹ்வுடைய அஸ்மாக்கள் மனிதனிலே வெளியாகிறது என்று பொருள். இது தான் மனிதப் படைப்பின் நோக்கம். மனிதர்கள் தங்கள் தந்தை பாவா ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய வாரிசுகள். அனந்தரத்தை எடுப்பதுதான் வாரிசுதாரர்களின் நோக்கம். அதற்காகவே மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

'யார் தான் படித்ததை வைத்து அமல் செய்கின்றாரோ அவருக்கு அல்லாஹ் தான் படிக்காத, தெரியாதவற்றை அனந்தரமாகக் கொடுக்கிறான்'. என்பது நபி அவர்களுடைய ஹதீது. நாம் படிப்பவைகள் எல்லாம் அல்லாஹ்வை வணங்குவதற்கான முறை. இந்த முறைகளை வைத்து நாம் அமல் செய்வோமானால் முக்தி பெறலாம்.

அல்லாஹ் தந்த இல்மு, அறிவு நமது புத்தியைக் கொண்டோ, புலன்களைக் கொண்டோ பெறுவது அல்ல. இறைவன் நமது தகப்பனார் ஆதம் அவர்களிடமிருந்து தருகின்ற அனந்தரம். அந்த அனந்தரம் தான் அல்லாஹ் ஆதமுக்குக் கொடுத்த கிலாபத்.

அல்லாஹ் ஆதம் நபிக்கு கொடுத்த இல்மைக் கொண்டு தான் அவர்கள் எல்லோருக்கும் மேலானவராக ஆனது மட்டுமின்றி எல்லோரையும் அவர்களுக்கு சுஜூது செய்திட வைத்து கௌரவம் கொடுத்ததும் ஆகும். அதுதான் அல்லாஹ் கொடுக்கின்ற அறிவு. இது புலன்களால் பெறக் கூடியது அல்ல. புலன்களுக்கு அப்பாற் பட்டது அணுக்கிரகமாக கொடுக்கப்பட்டது. அல்லாஹ்வின் அஸ்மாக்கள் வெளியாகிற போது மனிதன் சம்பூரணமானவனாக - இன்ஸான் காமிலாக ஆகின்றான். ஆகவே இந்த சம்பூரண நிலையைக் கெடுத்துக் கொண்டால் நஷ்டமடைகிறான் மனிதன்.

'கத் அப்லஹல் முஃமினூன்...' என்ற ஆயத்தில் தொழுதவர்கள் முக்தியடைந்தார்கள் என்று சொல்லவில்லை. உள்ளச்சத்துடன் தொழுதவன் முக்தி அடைந்தான் என்கிறான். உள்ளத்திலே அச்சம் வர வேண்டுமானால் முதலில் தொழக் கூடியவர்கள் தான் செய்கின்ற வேலை தன் உள்ளத்தில் வர வேண்டும். ஆஜராகவேண்டும். தொழகின்ற போது தனது ரூஹு- ஆன்மா சுவர்க்கத்தில் கிடப்பதாக நினைத்தால் அச்சம் வராது.

முதலில் அவனது ரூஹு தொழுகிற இடத்தில் வரவேண்டும். அப்பால் அவன் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் நிற்பதாக எண்ண வேண்டும். அப்போது அச்சம் வரும். அல்லாஹ்வை அவனது அஸ்மாக்களை எண்ணினால் அச்சம் வரும். பயம் தானாக வரும். இனி எல்லாவகையான எண்ணங்களை – நினைப்புகளை விட்டு தவிழ்ந்து அல்லாஹ்வின் ஞாபகத்தில,; அச்சத்தில் நிற்கின்ற போது அல்லாஹ் தனது அஸ்மாக்களை இவனில் வெளியாக்குவான்.

இறைவன் ஜீவனுள்ளவன். அறிவுள்ளவனாக – பார்வை உள்ளவனாக கேள்வி உள்ளவனாக சக்தி உள்ளவனாக இருக்கிறான். என்றாலும் மனிதனையும் பார்வையுள்ளாவனாக-ஜீவனுள்ளவனாக-கேள்வியுள்ளவனாக – சக்திபெற்றவனாக ஆக்கியுள்ளான்.

ஆயினும் மனிதனுடைய ஜீவனும் பார்வையும் சக்தியும் ஒரு கட்டுப்பாட்டிற்குள் அடங்கியது. குறிப்பான – கட்டுப்பாடான பார்வை, கேள்வி, ஜீவன், சக்தி இவை ஒரு கட்டுப்பாட்டிற்குள் தான் இயங்கும். அல்லாஹ்வுடைய ஸிபாத்துகள், அஸ்மாக்கள் கட்டுப்பாட்டிற்குள் அமைந்ததல்ல. கட்டுப்பாடின்றி இந்த ஸிபத்துகள் மனிதனில் வெளியாகுமானால் அப்போது தான் மனிதன் அல்லாஹ்வுடைய அஸ்மாக்களை ஏற்றுக்கொண்டான். அல்லாஹ்வுடைய இஸ்மு அவனில் வெளியாகிறது என்று சொல்லப்படும். இப்போது மனிதன் சம்பூரணமடைந்தான், முக்தி அடைந்தான்.

உதாரணமாக ஹலரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸாரியா அவர்களின் தலைமையில் ஒரு படையை 3 மாதத் தொலைவிலுள்ள ஒரு ஊருக்கு அனுப்பி வைத்தார்கள். அந்த ஊருக்குப் போய் ஸாரியா சண்டைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மதீனாவில் குத்பா ஓதிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது, 'ஸாரியா அல்ஜபல!; ஸாரியா அல்ஜபல்! சாரியா மலை! சாரியா மலை! என்று சொன்னார்கள். பின்னால் சண்டையிலிருந்து திரும்பி சாரியா வந்த போது, இதைப்பற்றி அவரிடம் கேட்டபோது அவர் சொன்னார் 'எதிரிகள் எங்களை விரட்டிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு எங்கே போவது? என்பது தெரியவில்லை. அப்போது உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மலை! மலை! என்று கூறினார்கள். நாங்கள் மலை மீது ஏறினோம். சண்டையில் வெற்றியானோம்'

அல்லாஹ்வுடைய பார்வை கட்டுபாடில்லாதது. அந்தப் பார்வையைக் கொண்டு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பார்த்தார்கள். அதேபோல அல்லாஹ்வுடைய கேள்வியும் கட்டுப்பாடு இல்லாதது. அந்தக் கேள்வியைக் கொண்டு ஸாரியா கேட்டார். இப்படியே ஒவ்வொரு சிபத்தும் மனிதனில் வெளியாகிறது. இப்படி வெளியாகின்ற போது அல்லாஹ்வின் சிபத்தை எடுத்தான். அஸ்மாவை எடுத்தான் மனிதன் தான் அல்லாஹ்வின் அஸ்மாக்களை ஏற்றுக் கொள்வதற்கு அருகதை உடையவனாக இருக்கிறான். இந்த அருகதை, தகுதி வெளிரங்கத்தில் வரும் போது அவன் அஸ்மாக்களை ஏற்றுக் கொள்கிறான். இப்படி ஏற்றுக் கொள்ளும் போது அந்த மனிதன் முக்தி அடைந்தான். மனிதர்கள் மட்டுமே இதற்கு தகுதி பெற்றவர்கள் மற்ற ஒரு வஸ்துவுக்கும் இந்த தகுதி இல்லை.

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அல்லாஹ்விடம் கேட்டார்கள் 'ரப்பே நீ எப்படி மௌத்தானவர்களை உயிர்பிப்பாய்?என்று. உங்களுக்கு நம்பிக்கை இல்லையா? என அல்லாஹ் கேட்டான். 'நான் ஈமான் கொண்டிருக்கிறேன். என் மனது சாந்தி பெற வேண்டும்' என்று நபியவர்கள் இறைவனிடம் சொன்னார்கள்.

www.sufimanzil.org

4 பறவைகளை அறுத்து ஒன்றாகக் கலந்து ஒரு மலையில் வைத்து கூப்பிடுங்கள் என்றான் இறைவன். அப்படியே இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்தார்கள். கூப்பிட்டார்கள். 4 பறவைகளும் அதனதன் உருவத்தில் வந்தது. அல்லாஹ் இறந்து போனவைகளை ஹயாத்தாக்கியது பெரிதல்ல. ஆனால் அந்த உயிhப்;பிக்கிற சிபத்தை தன்னிடத்திலே தருமாறு நபியவர்கள் கேட்டார்கள்.

அதனால் அல்லாஹ் 'நீங்களே அழையுங்கள்' என்றான். அவர்கள் அழைத்தார்கள். அவை உயிருடன் எழும்பின. இப்போது ஹயாத்தாக்குதல் என்ற இறைவனுடைய சிபத்து நபியவர்களிடத்திலே வெளியானது. இவ்வாறு தனது சிபத்துக்கள் மனிதனில் வெளியாகின்ற தன்மையில் மனிதனை அமைத்துள்ளான் இறைவன்.

இந்த தன்மை அமைப்பிலே உள்ள தன்மை எப்போது, எப்படி வெளியாகுமென்றால் அல்லாஹ் சொல்கிறான், 'இன்னா அரழ்னல் அமானத்த அலா...' நாம் நமது அமானத்தை வானம் பூமி மலைகளிடம் ஏற்றுக் கொள்கிறீர்களா? என அவைகளிடம் வினவியபோது, அவை பயந்து மறுதலித்து விட்டன. மனிதன் தூக்கிக் கொண்டான். ஏன் அவன் சுத்த அனியாயக்காரனாகவும், சர்வ முட்டாளாகவும் இருக்கிறான்.

அதாவது அல்லாஹ்வுடைய அஸ்மாக்கள் வெளியாக ஒரு வஸ்துவும் லாயிக்கானதாக இல்லை. மனிதன் தான் லாயிக்கானவனாக இருந்தான். மனிதனில் அஸ்மாக்கள் வெளியாயின. ஏன் வெளியானது என்றால் அவன் சுத்த அனியாயக்காரனாகவும் சர்வ முட்டாளாகவும் இருந்தான். அதனால் வெளியானது. அல்லாஹ் வெளியாக்கினான்.

ஆகவே அஸ்மாக்கள் வெளியாக வேண்டுமானால் மனிதன் சுத்த அனியாயக்காரனாக – சர்வ முட்டாளாக இருக்கவேண்டும். மடையன் என்றால் ஒரு விஷயத்தைத் தெரியாதவன், அறியாதவன். ஆனால் அவனுக்கு அது தெரியாது என்பதும் தெரியாமல் இருந்தால் அவன் சுத்தமடையன். இதுபோல அனியாயக்காரன் என்றால் ஊரில் அனியாயம் செய்யக்கூடியவன் தன்னை வளர்ப்பதற்காக, தன் நன்மைக்காக அனியாயம் செய்பவன். சுத்த அனியாயக்காரன் என்று சொன்னால் தனக்குக் கூட அநியாயம் செய்பவன்.

ஆக சுத்த அநியாயக்காரனாகவும,; சுத்த மடையனாகவும் இருந்தால் இறைவனின் அமானிதத்தை ஏற்றுக் கொண்டான். அமானிதத்தை ஏற்றுக் கொள்வது என்றால் இறைவனை நெருங்குவது என்று பொருள். அல்லாஹ்வை அண்மிப்பது என்பது அமானிதத்தை ஏற்றுக் கொள்வதாகும்.

இறைவனுக்கும் நமக்குமிடையில் தூரம் கிடையாது. அவன் நம்முடனே இருக்கிறான். நெஞ்சில் இருக்கின்றான். அவனிடத்தில் நெருக்கம் நம்மை அறியாமல் நிகழுகிறது. இதை நாம் அறிந்து விட்டோமானால் அவனை நெருங்கி விட்டோம் என்று அர்த்தம். அவனிடத்தில் சேர்ந்து விட்டோம் என்று அர்த்தம்.

www.sufimanzil.org

சர்வ படைப்புகளுக்குமிடையில் எப்படி தொடர்பு இருக்கிறது என்று கேட்டால், அல்லாஹ் இந்த சர்வ சிருஷ்களிலும் வெளியானான். இது தவிர சிருஷ்டிகளைப் படைக்கின்ற போது மூலப்பொருளிலிருந்து சிருஷ்டிக்கின்ற போது அவன் வேறாக அனாதியாக இருக்கின்றான் என்று பொருளல்ல. உதாரணமாக சிருஷ்டிகளை முன்னர் தான் தானாக தனியனாக இருந்த போது முதலாவதாக படைத்தது ரஸூலுல்லாஹ்வுடைய நூரைத்தான். அதைப் படைக்கிறபோது வேறெந்த பொருளுமில்லை.

அல்லாஹ் சொல்கிறான் 'நான் மறைபொருளாக இருக்கிறேன். நான் அறியப்பட வேண்டுமென்று விரும்பினேன். கல்குகளைப் படைத்தேன். முதல்முதலாக நூரே முஹம்மதி;ய்யாவைப் படைத்தான். ஒரு மூலப்பொருள் இல்லாதபோது நூரை எப்படி படைத்தான்? தன்னிடமிருந்து பிச்சு எடுத்தானா? தன் ரூஹிலிருந்து எடுத்தான் என்றால் அது பழுதடையக் கூடியதல்ல. ஜடப்பொருள் தான் பழுதாகக்கூடியது. அப்படி என்றால் நூரைப் படைத்தான் எனச் சொன்னால் அந்த நூறுடைய கோலத்தில் இறைவன் வெளியானான். வெளியாகிறபோது எல்லா சிருஷ்டிகளிலும் அவன் ஒன்றாகவே – அவன் தானாகவே இருக்கின்றான்.

மனிதன் என்றால் 'ஹயவானுன் - நாதிக்' பேசக் கூடிய ஒருபிராணி. பேச்சு இலட்சணம், ஆதேயப்பொருள் பிராணி என்பது ஆதாரம் பேச்சு ஸிபத், பிராணி மவ்சூப,; பேச்சு அர்ழு பிராணி ஜவ்ஹர். ஆதாரம் - ஜவ்ஹர் மாறக்கூடாது. லட்சணம் - என்பது மாறக்கூடியது, அப்போது மாறுவதெல்லாம் புதிது புதிதாக உண்டாவது என்றாகிறது. புதிது என்பது சுயமாக – அசையக் கூடிய – வளரக் கூடிய ஒரு சடலம் வளர்தல், அசைதல் என்பது இலட்சணம். இந்த இலட்சணங்களெல்லாம் சடலத்தை அண்டி நிற்கிறது. சடலம் ஒன்றுதான் ஆதாரமாக இருக்கிறது. இந்த ஆதாரம் புதிதானது. ஜவ்ஹர் என்றால் 'தூவுஜுது' உஜூதை உடையது. இதில் உடையது என்பது இலட்சணம். அப்படி என்றால் முடிவில் மிஞ்சி நிற்பது உஜுது உள்ளமை ஒன்றுதான். இந்த உஜுது தான் எல்லாம். அதுதான் மெய்ப்பொருள். இந்த மெய்ப்பொருள் தான் எல்லா கோலங்களிலும் வெளி வருகிறது. இப்படி கோலங்களில் வருவது சிருஷ்டி. கோலம் இல்லாமல் இருப்பது சிருஷ்டி கர்த்தா.

உதாரணமாக மரத்தினாலான ஒரு யானைக்குட்டி இருக்கிறது. இந்த யானைக் குட்டியில் இலயித்து பார்க்கும் போது மரம் மறைந்து விடுகிறது. மரத்தைப் பார்க்கிற போது யானைக் குட்டி மறைந்து விடுகிறது. இந்த யானைக்குட்டியின் ஒவ்வொரு அணுவிலும் மரத்தைத் தவிர வேறொரு பொருள் இருக்கிறதா? இல்லை. எனவே யானையில் மனதைச் செலுத்துகிற போது மரத்தைக் காணவில்லை. மரத்தை மறைக்கிறது யானை. இந்தக் கவனத்திலிருந்து மாறுகிற போது கண்ணுக்குத் தெரிவது மரம். அது போல சர்வ சிருஷ்டிகளையும் விட்டு நீங்கி சிருஷ்டிகர்த்தாவின் ஞாபகத்தில் திளைக்கும் போது சிருஷ்டிகளைவிட்டு அப்பாற்பட்டு விடுகிறாய்! அவ்வளவு தான். சிருஷ்டிக்கும் கர்த்தாவுக்கும் மத்தியில் இடைவெளி ஏற்படுவது இதை அறியாததால் தான் ஏற்படுகிறது.

இறைவனைச் சேருவதற்கு – அறிவதற்குத் துணை வணக்கம். இந்த மாதிரி அவனை அறிய –சேர சில வணக்கங்கள் கட்டாயமாகவும் சில கட்டாயமற்றதாகவும் இருக்கிறது. இதில் எந்தவொரு அமலைக் கொண்டு அவனளவில் போனாலும் அதன் குணமென்ன அவனைச் சேர்வது ஒன்று தான்!.

மனிதனை அல்லாஹ் தனது அஸ்மாக்கள் வெளியாகிற அமைப்பில் படைத்துள்ளான். இந்த அமைப்பில் உள்ளது வெளியே வருமானால் மனிதன் முக்தி பெற்றான். ஆகவே வணக்க முறைகளை நன்கு அறிந்து வணங்கினால் இறைவனது ஸிபத் அவனில் வெளியாகும். பாவா ஆதம் நபியவர்களைப் போலவே இவனும் கலீபாவாக ஆகி விடுகிறான். கலீபாவாக ஆனபோது இவனது வேலையை இறைவனே செய்து விடுகிறான். இப்ராஹீம் நபியவர்கள் பறவையை அழைத்தர்கள். அது ஹயாத்தாக வந்தது. அல்லாஹ்வுடைய சக்தி உயிர்பித்தல் எனும் தன்மை இவர்களிடத்திலே வெளியானது. அதனால் பறவைகள் உயிருடன் வந்தன.

அல்லாஹ் ஹயாத்தாக்குவதைப் பார்க்க வேண்டுமென்று நபியவர்கள் கேட்கவில்லை. அந்த ஸிபத்தை கொடு என்று கேட்டார்கள். எனவே 'நீங்கள் அழையுங்கள்' என்றான். இறைவன் நபியவர்களுடைய வாhத்தையைக் கொண்டு ஹயாத்தாயின. அவர்களுடைய வார்த்தை அல்லாஹ்வுடைய சிபத். ஆகவே இது போன்ற எல்லா அஸ்மாக்களும் மனிதனில் வெளியாகும். இந்த வெளியாக்குதலே முக்தி. இதற்காகத்தான் மனிதனும் படைக்கப்பட்டுள்ளான். இத்தன்மையின் முறைகளைக் கற்பது தான் நாம் படிக்கும் இல்மு, அறிவு. இல்முல் அத்யான் - தீனுடைய அறிவு, மார்க்கத்துடைய அறிவு இந்த அறிவைக் கற்று அமல் செய்ய வேண்டும். அமல் செய்தால் அவனிடத்தில் இறைவன் நெருங்குவான்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் சொன்னார்கள், 'மனிதன் கல்வியில் அதிகமாகி நேரான பாதை அவனில் வரவில்லையானால், நேரான பாதையில் போகவில்லையானால் அல்லாஹ்விடமிருந்து தூரத்தில் போவான். ஆகவே அறிவு என்பது அல்லாஹ்வின் வழியில் செல்வதாகும். நேர்வழியில் செல்லவில்லையானால் அவன் இறைவனிடமிருந்து வெகு தொலைவில் ஆகிவிடுவான். அல்லாஹ் அவனுடைய சமூகத்தில் நெருங்குவதற்கு மிக லேசான ஒரு பாதையைச் சொல்கிறான் - தன் அமானிதத்தை ஏற்றுக்கொள்ள மிக இலகுவான ஒரு வழி காட்டுகின்றான். எப்படி? எவன் சுத்த மடையனாகவும் சுத்த அனியாயக்காரனாகவும் இருக்கின்றானோ அவன் ஏற்றுக் கொள்வான். சுத்த மடையன் என்றால் தன்னைக் கூட அறியாதவன். தான் அறியவில்லை என்பதை அறியாதவன். அப்படியானால் 'தான்' என்பதை இழக்க வேண்டும்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் கூறினார்கள், 'உத்குரூல்லாஹ ஹத்தா...' அல்லாஹ்வை திக்று செய்யுங்கள் எதுவரை உங்களை மஜ்னூன் என்று சொல்வது வரை'

அல்லாஹ்வை நாம் திக்று செய்தால் நம்மை பைத்தியக்காரன் எனச் சொல்வார்களா? மாட்டார்கள். நாம் திக்றில் மூழ்கி நம்மை மறந்தோமானால் இழந்தோமானால் அந்த

திக்றிலேயே ஃபனாவாகி விட்டோமானால் நம்முடைய சொல்லும் செயலும் மேன்மையுறும். மகிழ்ச்சியானவைகளாக அமையும்.

உங்களை பைத்தியக்காரன் என்று சொல்வது வரை நீங்கள் திக்று செய்க! என்று கூறினால் அந்த திக்ரிலேயே மூழ்கி மாய்ந்து விடுங்கள் என்று அர்த்தம். 'உங்கள் ஆண்டவனுடைய பெயரைக் கூறி அதிலே ஒரேயடியாக மூழ்கிவிடுங்கள்' என்று அல்லாஹ் சொல்கிறான். ஆகவே அல்லாஹ்வின் சமூகத்தில் போவது எனச் சொன்னால் அத்திக்றிலேயே மாய்ந்துவிடுங்கள் என அர்த்தம். நான் என்ற எண்ணம் அற்றுப்போக வேண்டும்.

'எனக்கும் உனக்குமிடையில் தடை என்னவென்றால் நான் என்ற எண்ணம்தான் உணர்ச்சிதான்' என்று சொல்கிறார்கள் பெரியார்கள். எனவே நான் என்ற உணர்ச்சியை விட்டுவிடு. நான் என்ற உணர்ச்சி அற்றுப்போனால் ஹக்குடைய சமீபத்தில் சேர்ந்துவிடலாம்.

அல்லாஹ் படைப்புகளைப் படைத்தான் என்றால் இந்தக் கோலங்களில் வெளியானான் என்று பொருள். இப்படி கோலங்களில் அவன் வெளியாக முன்னர் எல்லா சிருஷ்டிகளையும் அவன் நன்றாக – விளக்கமாக – சரியாக அறிந்திருந்தான். இந்த சிருஷ்டிகளுக்கு இவை சிருஷ்டி ரூபத்தில் வருமுன் அவைகள் தம்மைப்பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால் ஹக்கு சுபுஹானஹு வதஆலா அவைகளை தெரிந்து வைத்திருந்தான். தம்மைப்பற்றியும் அறியாத – பிறவற்றையும் புரியாத வஸ்துக்களுக்கு இறைவன் முதலில் உணர்வை கொடுத்தான். இந்த உணர்வைப் பெற முன்னர் அவைகளுக்கு சிருஷ்டி என்று சொல்லப்படமாட்டாது. 'அஃயான தாபிதா' என்று சொல்லப்படும். இந்த உணர்வு வந்த பின்னர்தான் - சிருஷ்டி என்ற பெயர் வந்தது. வானம் பூமி முதல் சகல சிருஷ்டிகளும் ஏற் கனவே இறைவனது அறிவில் இருந்தது. அப்படி அறிவில் இருந்த போது வானத்துக்கு தன்னை வானமென்றோ பூமி தான் பூமியென்றோ அறிந்திருக்கவில்லை மனிதனுக்குத் தன்னை மனிதன் என்றே தெரியாது. ஆனால் ஹக் தஆலா அவைகளை நன்கு அறிந்திருந்தான்.

பின் அவன் அறிவை – உணர்வைக் கொடுத்த போது மனிதன்தான் மனிதன் எனவும், பிற வஸ்துக்கள் தங்களையும் அறிந்தன. உணர்வு வந்தபின் உணர்வுடைய கோலத்தில் ஹக்கு வெளியானான். உணர்வு வந்த பிறகு சூட்சும உலகு வந்தது. பின்னர் ஸ்தூல உலகம் வந்தது. முதலில் சூட்கும கோலத்திலும் தொடர்ந்து ஸ்தூல ஜட கோலத்திலும் வந்து போகவும் லாபக்கான பல அணுக்களால் உருவாக்கப்பட்டது.சூக்கும உலகு அணுக்களால் உண்டாக்கப்பட்டவை அல்ல . அது காணவும் கேட்கவும் முடியாதது.

இது கனவில் காணப்படுகிற ஒரு உலகைப் போன்றது என்றாலும் அதுவும் ஒரு உலகம்தான். கண்களால் வெளியே காண முடியாதது சூட்சும உலகம்! இந்த உலகத்தில் காலமும் இடமும் கிடையாது. காலம் இடம் என்பவைகள் எல்லாம் வெளியில் காணக் கடைக்கிற ஸ்தூல உலகத்தில்தான்.

ஒரு வஸ்துவுக்கு மேலே இன்னொரு வஸ்து வைக்கப்படுகிறது. அப்போது கீழ்வஸ்து – தட்டு மேல் தட்டுக்கு மகான் என்பர். கீழே இருக்கிற தட்டு மேலே இருக்கிற தட்டை

சார்ந்திருக்கிறது. இதுதான் 'மகான். இந்த தட்டு என்பவைகள் எல்லாம் ஸ்தூலத்தில் தான் வரும். மேல் - கீழ் தட்டுகள் இருந்தால் ஸ்தூலம் உண்டாகும். ஸ்தூலம் இல்லாவிட்டால் தட்டு இல்லை. தட்டு இல்லாவிட்டால் ஸ்தூலம் இல்லை.

இந்த சூக்கும உலகுக்கு அப்பால் உள்ளது ஆன்ம உலகம். இந்த ஆன்ம உலகிலும் காலம் இல்லை. இடம் இல்லை. கோலம் இல்லை. இந்த ஆன்ம உலகம், சூட்கும ஸ்தூல உலகங்களை மூடிக் கொண்டிருக்கிறது. எல்லா அணுக்களுக்குள்ளும் இருக்கிறது. இந்த ஆன்ம உலகம் தான் இப்படி சூட்கும உலகமாய் ஸ்தூல உலகமாய் ஆனது.

ஆன்ம உலகுக்கு அப்பாலே இருக்கக் கூடியது - ஹக்கு தஆலாவுடைய தரஜா. அப்போ ஹக்குடைய தரஜாதான் இப்படியெல்லாம் வெளியாகின்றது என்றால் ஹக்குடைய உஜுது – உள்ளமை ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறது. மெய்பொருளுடைய உஜுது எங்கும் வியாபித்திருக்கிறது. அப்படியானால் உங்களுக்கு இந்த ஆன்ம சூட்கும ஸ்தூல உலகங்கள் தெரியாமல் போகக் காரணம் உங்களையே நீங்கள் தெரியாமல் போனதுதான். உங்களை நீங்கள் புரிந்து கொண்டால் ஹக்கை சமீபித்து விடுவீர்கள். ஆகவே 'நான்' என்பது இல்லாது போனால் ஹக்கை சமீபித்தாய.; அப்போது அவன் தனது அஸ்மாக்களை நம்மில் வெளிப்படுத்துவான்.

உனக்கு பதவி; வேண்டுமானால் 'நான்' என்பதை அழித்துவிடு. வித்தில் மறைந்திருக்கின்ற விருட்சம் வெளியாக வேண்டுமானால் வித்து அழிய வேண்டும். வித்து இருப்பது வரை மரம் வராது. ஆகவே நீ இருப்பது வரை அவன் வரமாட்டான். எப்படி மர யானையில் மரத்தைக் காணுகிற போது யானையைக் காண முடியாதோ அதுபோல, மரம் போனால் யானை வரும். யானை போனால் மரம் வரும். அதுபோல நீ பனாவாகிப் போனால் அவன் வருவான்.

நான் வேறு, அவன் வேறு என்ற திரை அற்றுப் போக வேண்டும். இந்தத் திரை அற்றுப் போக ஓயாமல் அவனைத் தியானிக்க வேண்டும். அல்லாஹ்வின் நினைவினிலேயே இருக்க வேண்டும்.

'குல் அல்லாஹ்' - சொல் அல்லாஹ் என்று இறைவன் சொன்னான். குல்லுக்குப் பிறகு – கவ்லுக்குப் பிறகு வருவது ஒரு ஜும்லா – வாக்கியமாக இருக்க வேண்டும். இங்கே அல்லாஹ் என்ற ஒரு சொல் மட்டுமே இருக்கிறது. எழுவாய், பயனிலை – செயல், செய்பவன் ஆக ஒரு வாக்கியமாக அமைய வேண்டும். எனவே 'குல் யா அல்லாஹ்' 'குல் அந்த அல்லாஹ் என்றிருக்க வேண்டும்.

மர யானையைப் பார்த்து மரம் எனச் சொல். யானை போய் விடும். அது போல அல்லாஹ் அல்லாஹ் என்று சொல்!

அஸ்தஃபிருல்லாஹ் மிம்மா ஸிவல்லாஹ்

வகுல்லு ஷையின் யகூலு அல்லாஹ்!

'அல்லாஹ் அல்லாதவற்றிலிருந்து அல்லாஹ்விடம் பிழை பொறுக்கத் தேடுகிறேன். எல்லாப் பொருளும் அல்லாஹ்! அல்லாஹ்! என்று சொல்கின்றன.

அப்படியானால் உன்னை மறந்து விடு. மூஸா நபியவர்கள் அல்லாஹுவின் தரிசனத்துக்காக தூர்ஸீனா மலைக்குப் போனார்கள். அப்போது அங்கே மரத்திலிருந்து 'இன்னனீ அனல்லாஹு ரப்புல் ஆலமீன்'. உறுதியாக நானே அல்லாஹ்! ரப்புல் ஆலமீன்!; என்று சப்தம் வந்தது. அப்போது அல்லாஹ் மரமா? அல்ல. மரத்தில் அல்லாஹ் வெளியானான். மரம் நீங்கியது. அதுபோல் உன்னை விட்டு நீ நீங்கு.

ஈமான் என்பது இல்முல் யகீன் - கேட்டு அறிவது. இல்முல் யகீனென்றால் ஒருவர் சொல்லக் கேட்டு அதை நம்பினால் அது இல்முல் எகீன். இல்முல் எகீன் சந்தேகமற்றது. சந்தேகம் வந்து – சந்தேகமும் நம்பிக்கையும் சமமானால் அது ஷக்கு. ஒன்று மிகைத்தும் மற்றது குறைந்துமிருக்குமானால் மிகைத்ததற்குப் பெயர் ளன்னு. மற்றது வஹ்மு. இப்படி இல்லாமல் உறுதி மட்டுமிருக்குமானால் அது எகீன்.

ஈமான் என்று சொன்னால் மறைவான சிலதைப் பற்றி நமது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள் என்றால் அதையும் நாம் நம்ப வேண்டும். 'அல் ஈமானு தஸ்தீகுர் ரஸூலி பிமா ஜாஅ பிஹி' – ரஸூலுல்லாஹ் கொண்டு வந்ததையெல்லாம் ஈமான் கொள்வது. ரஸூல் சொன்னவைகளை நாம் பார்க்கவில்லை. ஆனாலும் நம்பித்தான் ஆக வேண்டும். இதுதான் இல்முல் எகீன்.

அடுத்து ஐனுல் எகீன் அனுபவத்தால் ஏற்படுவது. சிலருக்கு சில மறைவானவைகள் வெளிப்பட்டு அதை நம்புவது ஐனுல் எகீன். பின்பு நல்ல

சம்பூரணமாவது ஹக்குல் யகீன். இப்றாஹீம் நபியவர்கள் மௌத்தானவர்களை அல்லாஹ் ஹயாத்தாக்குவான் என்று நம்பினார்கள். ஆனாலும் அதை அனுபவத்தால் அறிய வேண்டுமென விரும்பினார்கள். அனுபவத்தால் அறிந்ததற்கு பெயர் ஐனுல் எகீன். கண்ணால் கண்டு உறுதியானதற்கப் பின் அது ஹக்குல் எகீனாயிற்று.

இதுபோல ஹக்குடைய சமூகத்தில் உங்களுடைய நெருக்கம் இரண்டு விதத்தில் ஏற்படலாம். 1. பயம் 2. ஆசை. பயம் அதிகமாகும் போது தன்னை மறந்து விடுவான். உதாரணமாக ஒருவன் புலியைப் பார்த்ததே இல்லை. அதனுடைய அமைப்பைக் கேள்விப்பட்டிருக்கிறான். ஒருநாள் புலி அவனுக்கு நேராகவே வந்து விடுகிறது. அப்போது அவனுக்கு எப்படி இருக்கும்? 'புலி அடிப்பதற்கு முன் கிலி அடித்துவிட்டது' என்பார்களல்லவா? அப்படி நடுங்கிப் போவான். புலிக்கு இவனை அடிக்க வேண்டுமென்ற எண்ணமில்லாமல் இவனை ஒன்றுஞ் செய்யாமல் திரும்பி போய் விட்டால் கூட இவன் அந்த நிலையிலேயே மயங்கிப் போய் கிடப்பான்.

செய்யிதுனா அபூபக்கர் சித்தீக்கவர்கள் ஒரு முறை குர்ஆன் ஓதினார்கள், 'ஜபானியாக்களிடம் நரகின் அதிபதி சொல்வார் இந்த பாவிகளைப் பிடியுங்கள் பின்னர்

நரகத்தில் தள்ளுங்கள்' - இந்த ஆயத்தை ஓதியதும் யார் பாவியென்று குறிப்பிட்டுச் சொல்லவில்லையே? நாமும் பாவிதானே! என்று நினைத்து அவர்கள் மயங்கிவிழுந்தார்கள். ஆக மனிதனுக்கு அதிகமான பயம் ஏற்பட்டாலும் அவன் தன்னை மறப்பான்.

அதிகமான ஆசை உண்டானாலும் தன்னை மறப்பான். அல்லாஹ் சொன்னான் அதிகமாக என்னை நேசித்துக் கொண்டிருப்பான். நான் அவனை நேசிப்பது வரை. இறைவனை அதிகமாக ஆசிக்கும் போது இவன் பேரில் அவனுக்கும் ஆசை வரும்.

ஒரு மனிதன் என்னை அவனுடைய மனதில் நினைத்தால், அவனை ஒரு கூட்டத்தில் வைத்து நினைப்பேன். ஒரு கூட்டத்தில் வைத்து என்னை நினைத்தால,; அதைவிடப் பெரிய கூட்டத்தில் வைத்து நினைப்பேன். என்னிடத்தில் ஒரு ஜாண் வந்தால், நான் ஒரு முழம் அவனிடத்தில் செல்வேன். ஒரு முழம் என்னிடத்தில் வந்தால், நான் ஒரு கஜம் அவனிடத்தில் போவேன். அவன் நடந்து வந்தால் நான் ஓடிப் போவேன்.'

ஒரு மனிதன் அல்லாஹ்வை நேசிக்கத் தொடங்கினால், அந்த மனிதன் இறைவனை நேசிப்பதைவிட பல மடங்கு கூடுதலாக இறைவன் அவனை நேசிக்கிறான் என்பதை இறைவனே ஹதீஸ் குத்ஸி மூலமாக நமக்குச் சொல்லித் தருகிறான.; இறைவன் நேசிக்கிறான் என்றால் என்ன அர்த்தம்? அல்லாஹ் இவனை பிடித்திழுப்பான். தன்னளவிலே அந்த மனிதனைச் சேர்த்துக் கொள்கிறான் என்று தான் அர்த்தம்.

இறைவன் தான் நாடுகிறவர்களை தன்னளவில் இணைத்துக் கொள்கிறான். அவனளவில் போனவர்களுக்கு நேர்வழி காட்டுகிறான் - இப்படி இரண்டு வழிகளை அல்லாஹ் காட்டுகிறான.; உதாரணமாக பணக்காரனொருவன் விருந்துக்குச் சொல்கிறான் என்றால் விசேசமானவர்களுக்கு கார் அனுப்பி அழைத்து வரச் செய்வான.; சாதரணமான ஆட்களானால் வழியில் லைட் போட்டு இருட்டில் வழியைத் தெரிந்து வர வகை செய்யப்பட்டிருக்கும்.

இதுபோல் அல்லாஹ் தன்னிடம் வருகிறவர்களுக்கு வழிகாட்டுவான். தான் விரும்புகிறவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வான். ஆகவே அல்லாஹுவிடத்தில் போவதற்குண்டான வழி ஸுலூக்குடைய – ஜதுபுடைய வழியாகும். ஜதுபுடைய வழியென்றால் அல்லாஹ் இவனைத் தன்னளவில் இழுக்கிற இந்த வழி. இந்த வழி மூலம் அல்லாஹ்விடம் இவன் சீக்கிரம் சென்று சேருவான்.

' அல்லாஹுடைய ஒரு சிறு இழுப்பானது மனு ஜின்னுடைய இபாதத்தை விட சிறப்பானது' என்பது ஹதீஸ். திடீரென அவன் தன்னளவில் பிடித்திழுப்பான். கோலத்தை மாற்றி விடுவான். இப்போது அவன் மஜ்தூபு – அல்லாஹ்வினால் இழுக்கப்பட்டவன்.

மஜ்னூனும், மஜ்தூபும் ஒன்றே தான். மஜ்னூன் மூளைக் கோளாறினால் சுயநினைவு இழந்தவன். எனவே தான் நீங்கள் பைத்தியக்காரர் எனச் சொல்லப்படுவது வரை திக்று செய்யுங்கள் எனச் சொல்லப்பட்டது. நினைவை இழந்து விட்டீர்கள் என்றால் ஹக்குடைய சமூகத்தில் சென்று விட்டீர்கள். அல்லாஹ்வுடைய சமூகத்தில் போக இதுதான் லேசான வழி.

அல்லாஹ், பாவா ஆதம் நபி அவர்களை தன் கலீபாவாக்கி எல்லா அஸ்மாக்களையும் கற்பித்துக் கொடுத்து எல்லாரையும் சுஜூது செய்யக் கூறிய சமயத்தில் தன்னை பெரிதாக நினைத்து ஷெய்தான் காபிராகி போனான். அவன் அல்லாஹ்வை விட்டுத்தான் விலகினானே தவிர ஆதமை விட்டு விலகவில்லை.

ஆதமுடைய சந்ததிகளைக் கலைப்பதாகக் கூறினான். மனிதர்களை கலைப்பதென்றால், அல்லாஹ்வுடைய பாதையை விட்டு அவர்களை தூரமாக்குவது, அப்புறப்படுத்துவது என்று அர்த்தம். எனவே ஷெய்தானுடைய மாய வலையில் வீழ்ந்துவிடாமல் அல்லாஹ்வின் சன்னிதானத்தை அடைவதற்கு ஒரு ஆசான் தேவை.

' யா அய்யுஹல்லதீன ஆமனூ வத்தகுல்லாஹ வப்தகூ இலைஹில் வஸீலத... ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை தக்வா செய்யுங்கள். அவனளவில் வசீலா தேடுங்கள். அவனுடைய பாதையில் முயற்சி செய்யுங்கள். நீங்கள் முக்தி அடைய போதும் என அல்லாஹ் சொல்வதில் முக்தியடைய – சம்பூரணமுடைய 4 விஷயங்கள் உள்ளது. ஈமான் கொண்டோரே! எனக் கூப்பிட்டு தக்வா செய்யுங்கள்! வசீலாவைத் தேடுங்கள.. அவனுடைய பாதையில் முயற்சி செய்யுங்கள். அப்போது நீங்கள் முக்தியடைந்தீர்கள் எனச் சொல்வதில் 3 விஷயங்கள் தெரிந்தாலும் ஒன்று மறைத்திருக்கிறது அது ஈமான்.

'யா அய்யு' எனப்படுவதில் யா தூரத்தில் உள்ளவர்களை கூப்பிடுவது. அய்யு எனப்படுவது தெரிந்தவர்களை – அறிமுகமானவர்களை பார்த்து கூப்பிடுவதாகும். எப்படித் தெரிந்தவர்கள்? ஈமானால் தெரிந்தவர்கள்.

உதாரணமாக நம்மிடத்தில் இன்ன தவணையில் தருவதாகக் கூறி கடன் வாங்கிய ஒருவன் திருப்பித் தராமல் தலைமறைவாக நடக்கும் போது ஒரு நாள் அவனைக் கண்டு கடன் வாங்கியவனே! எனக் கூப்பிட்டால் அது அன்போடு கூப்பிட்டதாகவா ஆகும்? இல்லை. காசு வாங்கியவனே காசைத் தந்து விட்டு போ என்றுத்தான் அர்த்தப்படும்.

இதுபோல ஈமான் கொண்டவனே எனச் சொன்னால், அலஸ்து பிரப்பிகும் நான் உங்கள் ரப்பில்லையா? என்று கேட்ட போது பலா ஆமாம் என்று சொன்னவர்களே ஈமானைப் பலப்படுத்துங்கள் என்று அர்த்தம். ஈமானை உறுதியாக்கிக் கொள்ளுங்கள் எனப் பொருள்.

இப்போது 1.ஈமானைப் பலப்படுத்து 2.தக்வா செய் 3.வஸீலாவைத் தேடு 4.அவன் பாதையில் முயற்சி செய். இந்த நான்கையும் செய்தால் முக்தி அடைவாய் என்றாகியது.

இதில் 'வஸீலா' என்பதற்கு அமல் என வஹ்ஹாபிகள் சொல்வார்கள். வஸீலா என்றால் அல்லாஹ்வின் பாதையில் செல்வதற்கு ஒரு பாதை- சிபாரிசு. இங்கே வஸீலாவை அமல் என்று வைக்க இயலாது. ஏனென்றால் இதே வசனத்தில் ஏற்கனவே தக்வா செய் என வந்தாகி விட்டது. தக்வா என்றால் ஏவியவற்றை எடுத்து நடப்பதும், விலக்கியவற்றை விட்டு விடுவதுமாகும். எனவே வஸீலாவிற்கு அமல் என்று வைத்தால் தக்வா எனச் சொன்னதற்கு அர்த்தமில்வாமல் போய்விடும். சொன்னதைத் திரும்பச் சொன்னதாகவும் ஆகும்.

எனவே வஸீலா எனப்படுவது ஒரு காமிலான ஆள்தான். இதே கருத்தைத் தான் ஷாஹ் அப்துர் ரஹீம் திஹ்லவீயும் கூறுகிறார்கள். ஆக நான்கு காரியங்கள் இந்த நான்குமிருந்தால் முக்தி பெறலாம். அந்த நான்கும் ஈமானை உறுதியாக்க வேண்டும். தக்வா செய்ய வேண்டும். ஒரு ஆளைப் பிடிக்க வேண்டும.; அல்லாஹ்வின் பாதையில் முயற்சிக்க வேண்டும்.

ஈமான் என்று சொன்னால் அது பகுத்தறிவு படியான ஈமானல்ல. ரசூலுல்லாஹ் சொன்னபடிக்கான ஈமான். புத்திப்படி ஈமான் என்பதிலேதான் எல்லாக் குழப்பங்களும் வந்து சேருகின்றன.

ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் ரசூலுல்லாஹ்விடம் வந்து இஹ்ஸான் என்றால் என்ன? எனக் கேட்ட பொது நாயகமவர்கள் சொன்னார்கள் நீ அல்லாஹுவைப் பார்க்காவிட்டாலும், அவன் உன்னைப் பார்ப்பதால் அதன்படி இபாபத் செய்ய வேண்டும். அப்போது வணக்கம் இறைவனுக்காக என்றிருக்க வேண்டும். அல்லாஹ் கோலத்தைப் பார்ப்பதில்லை. இருதயத்தை அதிலுள்ள எண்ணத்தை மட்டுமே பார்க்கிறான். அதுதான் இஹ்ஸான்.

இந்த எண்ணத்தில் மனிதனைக் கொண்டு போவது தான் தரீகா. இதற்கு முக்கியம் ஈமான். அது பழுதாகப் போனாலும் ஈமானுக்கு அடுத்த இஸ்லாம் பழுதாகப் போனாலும் முடியாது. அதனால் முதலில் ஈமானும் அடுத்து இஸ்லாமும் சரியாகணும். அப்போதுதான் முக்தி உண்டாகும். அல்லாஹ் தன்னளவில் நெருங்க எந்த அமலை நோக்கமாக வைத்துள்ளானோ அதை அந்த நோக்கத்துக்கு மாறாக செய்தால் பிரயோஜனம் கிட்டாது.

இபாதத்தை தன்பால் நெருங்க ஒரு காரணமாக வைத்துள்ளான். இபாதத் செய்கின்ற போது அல்லாஹ்வின் ஞாபகம் வர வேண்டும். இந்த எண்ணத்தை விட்டுவிட்டு வேறு எண்ணத்தில் இபாதத் செய்தால் அதனால் பிரயோஜனம் இல்லை. ஆக எந்த அமல் செய்தாலும் இதய சுத்தி வேண்டும். இதய சுத்தி-இக்லாஸ் இல்லாத அமலை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான்.

இதுபோல ஈமானில் பழுது ஏற்பட்டாலும் அதாவது ரசூலுடைய உகப்பு இல்லாது போனாலும் ஈமான் போய் விடும். ஈமான் இல்லா விட்டால் அமல் பிரயோஜனப்படாது.

அல்லாஹ் சொல்கிறான். லா தர்ஃர்ஊ அஸ்வாதகும்... 'உங்களுடைய சப்தத்தை நபியுடைய சப்தத்தைவிட உயர்த்தாதீர்கள். உங்களில் ஒருவருக்கொருவர் சப்தமிட்டுப் பேசுவதைப் போல நாயகமவர்களிடம் உரையாடாதீர்கள். இதனால் உங்கள் அமல் அழிந்துவிடும். நீங்கள் இதை உணரமாட்டீர்கள்.'

அமல் யாருக்கு அழியும்? முஃமினுடைய அமல் அழியாது. முஃமின் நிறைய பாவம் செய்து விட்டு ஒரு நல்லமல் செய்தால் கூலி கிடைக்காமல் போய்விடுமா? கிடைக்கும். பாவத்துக்கு தண்டனை. அமலுக்கு தவாப். எனவே செய்த அமல் முஃமினின் அமல் அழியாது. யாருக்கு அழியுமென்றால் காபிர்களுக்கே அழியும். 'நாம் அவர்கள் செய்த அமல்களை புழுதி மண்ணாக ஆக்கிப் போடுவோம்.' என்கிறான் அல்லாஹ். இது யாருக்கு? காபிர்களுக்கு.

காபிர்கள் என்ன அமல்கள் செய்தாலும் அதற்கு கூலி கிட்டாது. முஃமின் செய்ததற்கு கூலி கிடைக்கும் இந்த இடத்தில் அல்லாஹ் நபியின் சப்தத்தைவிட பேசுவீர்களானால் உங்கள் அமல் அழிந்து விடும் என்று சொல்கிறான் என்றால், நீங்கள் அமல் இல்லாமல் போய் விடுவீர்கள் என்று அர்த்தம். ரசூலுடைய சப்தத்தை விட சப்தமுயர்த்தினால் ஈமான் இல்லாது போய்விடும். ஈமான் இல்லா விட்டால் அமல் இல்லாமல் போய்விடும்.

எனவே ஈமானுடைய அஸ்திவாரம் ரசூலுடைய உகப்பு. ஆகையால் உகப்பு இல்லாவிட்டால் ஈமான் இல்லை. ஆகவே ஹுப்புதான் பிரதானம். ஈமானைக் கொண்டுதான் எல்லாம். இதைக் கொண்டுதான் அல்லாஹ்விடம் போகலாம். நேசம் இல்லாவிட்டால் நரகிற்குத் தான் போகணும். இப்லீஸ் எவ்வளவு அமல் செய்தான்? ஆனால் காபிரானான் ஏன்? அல்லாஹ்வுக்கு இணை வைத்தானா? இல்லை. ஆனால் ஆதமுக்கு சுஜுது செய்ய மறுத்ததோடு நிற்காமல் தன்னை பெரிதாக எண்ணினான். ஆதம் நபியவர்களை எல்லோருக்கும் மேலானவர்களாக ஆக்கி சுஜுது செய்யப் பணித்த போது ஷெய்த்தான் உடன்படவில்லை. பெருமையடித்தான் காபிரானான்.

ரசூலுக்கு மரியாதை செய்யாமல், அவமரியாதை செய்ததால் காபிரானான். ரசூலைவிட தான் மேலானவன் என வாதிட்டான். ரசூலைவிட இவன் ரொம்ப அறிந்தவன் என்று ஒருவன் சொன்னால் அவன் காபிராகிப் போவான். ஏனென்றால் ரசூலுல்லாஹ்வுக்கு எல்லாவற்றையும் அல்லாஹ் அறிவித்துக் கொடுத்துள்ளான்.

ஆதம் நபியவர்களைப் பற்றிய சம்பவங்களை குர்ஆனில் கூறப்படும்போது நீங்கள் நினைத்து பாருங்கள்! என இறைவன் கூறுகிறான். ஆதமுக்கு சுஜுதுச் செய்யச் சொன்னது அவர்களுக்கு அஸ்மாக்களைக் கற்றுக் கொடுத்து இப்லீஸ் சுஜுதுச் செய்ய மறுத்தது எல்லாவற்றையும் ரசூலுல்லாஹ் அறிந்திருந்தார்கள். இறைவன் அறிவித்துக் கொடுத்திருந்தான். மலாயிகத்துகள் சுஜுதுச் செய்தது கூட ஆதம் நபியவர்களின் நெற்றியில் இலங்கிக் கொண்டிருந்த நூர் முஹம்மதிய்யாவுக்குத்தான்.

ஆகவே கொஞ்சமாவது ரசூலைக் குறைவு படுத்தினால் அவன் காபிர். ரஸூலைக் கௌரவப்படுத்தினால் அல்லாஹுவை நெருங்குவான். ஆகவே நாயகமவர்களைக் குறைவாக எண்ணினால் இபாதத்தை விட்டதற்கான தண்டனையைவிட அதிகமான தண்டனை கிடைக்கும்.

இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி இஹ்யாவில் பாபுர் ரஜாயி வல் கௌபி என்ற பாடத்தில் 'அல்லாஹ் கஃபாவைக் கண்ணியப்படுத்தி உள்ளான். சங்கைக்குரிய கஃபாவை ஒவ்வொரு கல்லாக உடைத்தெடுத்தால் என்ன தண்டனை இறைவன் அவனுக்கு கொடுப்பானோ அதை விட அதிகமான தண்டனையை ஒரு ஒலியைக் குறைவு படுத்தினால் கொடுப்பான்' என்கிறார்கள்.

கஃபா அல்லாஹ்வின் வீடு, முஃமினின் இதயம் அல்லாஹ்வின் அர்ஷு வீட்டைக் குறைவுபடுத்துபவனுக்கு கொடுக்கிற தண்டனையைவிட, இறைவனுடைய சிம்மாசனமான

அர்ஷுக்கு அவமரியாதை செய்கிறவனுக்கு கொடுக்கிற தண்டனை பெரியது. முஃமினானவர்களை குறைவு படுத்தினால் இவ்வளவு தண்டனை என்றால் ரசூலுல்லாஹ்வை குறைவாகக் காண்கிறவர்களுக்கு என்ன தண்டனை கிடைக்கும்? ஈமானே பறிபோய்விடும். அமல் நாசமாகும்.

ஈமான் தான் பிரதானம். அதன் அஸ்திவாரம் ரசூலுடைய உகப்பு. மேலும் அவர்கள் உகந்தோரை உகக்கவும், அவர்கள் வெறுத்தவரை வெறுக்கவும் வேண்டும். அப்போது இந்த உகப்பு உண்மையானதாக ஆகும். இறைவன் சொல்கிறான் 'அல்லாஹ்வைக் கொண்டும், இறுதி நாளைக் கொண்டும் ஈமான் கொண்டவர்களை அல்லாஹ்வுக்கும் ரசூலுக்கும் விநோதமானவர்களை நேசிப்பவர்களாக நீங்கள் காணமாட்டீர்கள.' இவர்கள் அவர்களுக்கு தகப்பனாகவோ, பிள்ளையாகவோ, சகோதரனாகவோ, மற்ற உறவினர்களாக இருந்தாலும் சரிதான் ஒருக்காலும் நேசிக்கிறவர்களாக பார்க்க மாட்டீர்கள். அப்படி நேசித்தால் அவன் முஃமினாக மாட்டான். ஆகவே பிரதானமானாதாக ஈமான் அடுத்து இஸ்லாம்.

எனவே ஒருவன் தரீக்கில் செல்ல வேண்டுமானால் - ஹக்குடைய சமூகத்தை அடைய வேண்டுமானால் அதற்குப் பிரதானமானது – மிக முக்கியமானது ஈமான்.

செய்யிதுனா முஹ்யித்தீன் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் இஷ்கிலேயே அல்லாஹ்வின் நினைப்பிலே- ஆசையிலேயே மூழ்கிக்கிடந்தார்கள். இஷ்க்தான் அல்லாஹ்வில் சீக்கிரம் கொண்டு போய் சேர்க்கும.; இஷ்க் எப்போது வருமென்றால், அல்லாஹ்வை எப்போதும் நினைக்கிற போது அந்த மஹப்பத்திலே கிடக்கிற போது வரும். மஹப்பத் சிறிது. அந்த மஹப்பத்திலே கிடக்கிற போது இஷ்க் வரும்.

அல்லாஹ்வுடைய ஆஷிக் அவன் நினைப்பிலே – அவனுடைய இஷ்கை அதிகப்படுத்தி அதிலேயே கிடப்பான். அப்படிக் கிடக்கிறபோது எல்லாம் அவனுக்கு தானாக வரும். அல்லாஹ்விடம் லயித்துப்போய் கிட என்று சொன்னால் சிலருக்கு அப்படியானால் ரிஸ்கு எப்படி கிடைக்கும?. பிள்ளை குட்டிகளுக்கு யார் சம்பாதித்துக் கொடுப்பார்கள?;. என்று சந்தேகம் வரும். பயம் வரும்.

இந்த சந்தேகத்தைப் போக்குவதற்கு அல்லாஹ் சொன்னான் ரப்புல் மஷ்ரிகி ரப்புல் மஃரிபி… மஷ்ரிகுடையவும், மஃரிபுடையவும் ரப்பு அவன் உன்னை மட்டுமல்ல அகில உலகங்கள் அனைத்திலுள்ளவைகளுக்கும் உணவளிப்பவன், போஷிப்பவன், காப்பவன், படைத்து பரிபாலிப்பவன்.

இவர்களையெல்லாம் போஷிப்பவனுக்கு உன்னையும், உன் குடும்பத்தையும் போஷிப்பது கஷ்டமா? முடியாதா? எனவே பதறாதே. அவனன்றி வேறொன்றுமில்லை. எல்லாம் அவன்தான். அப்படி இருக்கிறபோது ஏன் பயப்படுகிறாய்?.

ஆகவே அல்லாஹ் நமக்கெல்லாருக்கும் அவனது இஷ்கைப் புகட்டி, அவனுடைய நினைவிலேயே இருந்து அவனை எந்நேரமும் நாம் நினைத்து நம்மை மறந்து அவன்

சமூகத்தில் சேர்ந்து பாவா ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய கிலாபத்திற்கு ஆளாக்கி அவர்களுடைய அறிவை நமக்கு அனந்தரமாக்கித் தருவானாக! ஆமீன்! வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

**பேருரை : 3**

**முக்தி பெறுவதற்கான வழி!**

ஹம்து சலவாத்திற்கு பின்னால்

யா அய்யுஹல்லதீன ஆமனூ வத்தகுல்லாஹ வப்த இலைஹில் வஸீலத்த அல்லாஹ் ஜல்ல ஸானுஹூ இந்த ஆயத்தில் சொல்கிறான். ஈமான் கொண்டவர்கள் அல்லாஹ்வை தக்வா செய்து கொள்ளுங்கள். அவனிடத்தில் போவதற்கு ஒரு வஸீலாவைத் தேடிக் கொள்ளுங்கள். அவனது பாதையிலே தெண்டிப்புச் செய்யுங்கள். நீங்கள் முக்தி அடைவீர்கள்.

மனிதன் முக்தியடைவதற்கு நான்கு விஷயங்களை அல்லாஹ் கூறுகின்றான். முக்தி என்றால் என்ன? ஒவ்வொரு வஸ்துவும் சம்பூரணம் அடைவதாகும். முக்தி அடைகிறது என்றால் அந்த வஸ்துவிலே என்ன அமைப்பு வைக்கப் பட்டிருக்கிறதோ அது வெளிப்படுமானால் அது சம்பூரணம் அடைந்து விட்டது. முக்தி பெற்றுவிட்டது பூரணமாய் பெற்றுவிட்டது எனச் சொல்கிறோம்.

மனிதர்களிலே அல்லாஹ் அபரிதமான சக்திகளை வைத்திருக்கிறான். அவன் கலீபா (பிரதிநிதி) ஆவதற்குரிய அருகதையைக் கொடுத்திருக்கிறான். அல்லாஹ் தனது அஸ்மாக்கள் அத்தனையும் வெளியாவதற்குரிய லாயக்கை மனிதனுக்கு கொடுத்திருக்கிறான். இப்படி அல்லாஹ்வுடைய அஸ்மாக்கள் அத்தனையும் வெளியாவதற்கு லாயக்குடையவனாக படைத்ததினால்தான் மனிதன் மலக்குகளை விடவும் மேலானவர்களான நமது பாவா நபி ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு அல்லாஹ் எல்லா அஸ்மாக்களையும் படித்துக் கொடுத்தான்.

பின்னர் மலக்குகளை நோக்கி இந்த வஸ்துக்களின் பெயர்களை நீங்கள் சொல்லுங்கள் என்றான். நீ எங்களுக்கு எவ்வளவு கற்றுத் தந்தாயோ அதுதான் தெரியும். அதைவிட அதிகமாய்த் தெரியாது, என்று மலக்குகள் பதில் சொன்னார்கள். அப்பால் ஆதம் நபி அவர்களிடம் நீங்கள் நீங்கள் அவர்களின் பெயர்களைச் சொல்லுங்கள் என்று சொன்னவுடனே ஆதம் நபி அவர்கள் எல்லா வஸ்துக்களின் பெயர்களையும் சொன்னார்கள். அல்லாஹ் மனிதனை கலீபாவாகப் படைக்கப் போகிறேன் என்று சொன்ன போது நாங்களெல்லாம் உன்னை தஸ்பீஹ் செய்கிறோம், துதி செய்கிறோம் அப்படி இருக்க, இந்த மண்ணிலிருந்து உன் கலீபாவை மனிதனைப் படைக்க போகிறாயே! பூதங்களிலிருந்து படைத்தால் பூதங்களும் நாடும் ஒன்றுக்கொன்று விரோதம் கொண்டு இரத்தம் கொட்டிக் கொண்டிருப்பார்களே அவர்களையா படைக்கப் போகிறாய் என்று மலக்குகள் ஆட்சேபணை செய்தார்கள்.

அதற்காகத்தான் அல்லாஹ் ஆதம் நபி அவர்களுக்கு எல்லா அஸ்மாக்களையும் படித்துக் கொடுத்து பின்னர் எல்லா மலக்குகளிடமும் இந்த அஸ்மாக்களை சொல்லுங்கள் என்று சொல்ல, முடியாமல் போனார்கள். ஆதம் அலைஹிஸ்ஸலாம் பூரணமாக எல்லாவற்றையும் சொன்னார்கள். எனவே ஆதம் அவர்களை எல்லாரை விடவும் மேலாக்கி வைத்தான். மேலான அவர்களை விட குறைந்த நீங்கள் எல்லாம் அவர்களுக்கு சுஜூது செய்யுங்கள் என்றும் மலக்குகளுக்குச் சொன்னான். இப்லீசைத் தவிர எல்லாரும் சுஜூதும் செய்தனர்.

அல்லாஹுத் தஆலா மலக்குகளை எல்லாம் ஆதம் நபி அவர்களுக்கு சுஜூது செய்ய வைத்த அம்சம் இருக்கிறதே இது மகத்தானது! அல்லாஹ்வுடைய எல்லா அஸ்மாக்களும் வெளியாகுவதற்குரிய லாயக்குடையவர்களாக மனிதர்களை வைத்திருக்கிறான். இந்த அமைப்பு வெளியில் வராதபடிக்கு உள்ளுக்குள்ளே அமைந்து அப்படியே போய் விடுமானால் அப்போது சம்பூரணம் அடைவதற்கு முக்தியடைவதற்குப் பகரமாக நஷ்டமடைந்தவனாக ஆகி விடுவான். அல்லாஹ் சொல்கிறான் 'கத் அப்லஹ மன் ஸக்காஹா வகத் காப மன் தஸ்ஸாஹா'- எவன் இருதயத்தை சுத்தப்படுத்துகிறானோ அவன் முக்தியடைந்தான். எவன் அதைப் பாழ்படுத்தினானோ அவன் நஷ்டமடைந்தான்.

முக்தியடைவதற்குரிய வழியை யா அய்யுஹல்லதீன ஆமனு வத்தகுல்லா... என்ற இந்த ஆயத்தில் இறைவன் சொல்கிறான். ஈமான் கொண்டவர்களே! என கூப்பிடுகிறான். அரபியில் அய்யு என்றால் அறிமுகமான ஒன்றைச் சொல்வது ஹா என்று சொல்வது எச்சரிக்கை. அப்படியானால் அறிமுகமான ஒரு ஆளை - ஈமானால் அறிமுகமான ஆளை கூப்பிடுகிறான். ஈமான் கொண்ட மனிதனே! என்று சொன்னால், ஈமானை சரியாய்ச் செய்! ஈமானைச் சரிபடுத்து! என்று ஒரு எச்சரிக்கை இருக்கிறது. இப்படி ஈமானைக் கெட்டிப்படுத்து என்று முதலாவதாக சொல்கிறான். இரண்டாவதாக இத்தகுல்லாஹ்... அல்லாஹ்வை நீங்கள் தக்வா செய்து கொள்ளுங்கள். மூன்றாவதாக அவனுடைய பாதையில் போய் சிபாரிசு தேடிக் கொள்ளுங்கள். வஸீலாவைத் தேடிக் கொள்ளுங்கள். அப்புறம் அவனது பாதையிலே தெண்டிப்புச் செய்யுங்கள். ஜிஹாதுச் செய்யுங்கள். இவ்வளவும் செய்வீர்களானால் முக்தியடைவீர்கள் என்று நான்கு கருமங்களை இறைவன், மனிதன் முக்தியடைவதற்குச் சொல்கிறான்.

முக்தியடைவதற்காகதான் மனிதன் வந்தான். முதலாவதாக ஈமான். ஈமான் என்றால் என்ன? எல்லாரும் சொல்வார்கள் ஈமானைக் காப்பாற்றிக் கொள் என்று. எல்லாரும் பிரதானமாக நினைப்பதும் ஈமானைத்தான். ஏன்? ஈமான் சரியாக இல்லையென்றால் இஸ்லாம் பிரயோஜனம் கொடுக்காது. அனுஷ்டானம் - இபாதத் பிரயோஜனம் தராது. அல்லாஹ் சொல்கிறான், காபிரீன்களின் அமல்களை நாம் புழுதி மண்ணாக ஆக்கிப் போடுவோம். இன்னொரு இடத்தில் சொல்கிறான் நன்றாக இடுப்பு கட்டி வேலை செய்யக்கூடியவர்கள் கடைசியாக அவர்களை எரியும் படியான நரகில் தூக்கிப்போடுவோம் என்று. யாரை? ஈமான் இல்லாதவர்களை காபிரீன்களை காபிரின்கள் எவ்வளவு அமல்கள் செய்தாலும் அந்த

அமல்களுக்கு ஒரு பிரயோஜனமுமில்லை ஈமான் இருந்தால் தான் மற்ற அமல்கள் பயன் தரும்.

ஈமான் என்பது கண்ணுக்குத் தெரியும் வஸ்துவல்ல! ஈமான் என்பது என்ன? ஈமானுக்கு இலக்கணம் சொல்லுகின்ற போது சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களுக்கும் காரிஜிய்யா, முஃதஸிலாக்களின் சொல்லுக்கு மிடையே வித்தியாசம் இருக்கிறது.

கஸ்ஸாலி இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பைஸலுத்தப்ரிகா 'பைனல் இஸ்லாம் வஸ்ஸன்தகா' என்ற நூலில் சொல்கிறார்கள், 'ஈமான் என்பது ரசூல் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் என்னென்ன விஷயத்தைக் கொண்டு வந்தார்களோ அவை அத்தனையிலும் அவர்களை மெய்யாக்கி வைக்க வேண்டும். இது தான் ஈமான.; சாதரணமாக மக்களெல்லாம் சொல்வார்கள் ஈமான் என்பது மனதினால் நம்புவதும், வாயினால் விண்ணப்பம் செய்வதும், உறுப்பினால் அமல் செய்வதுமான மூன்று கருமங்களாகும் என்று. ஆனால் ரொம்பவும் அலசிப் பார்த்துச் சொல்லக் கூடியவர்களான இமாம் ஷாபிஈ ரஹ்மதுல்லாஹ் அவர்கள் பிக்ஹுல் அக்பர் என்ற தங்களுடைய கிதாபிலும்

இமாம் அபூஹனிபா ரஹ்மதுல்லாஹ் அவர்கள் பித்ஹுல் அக்பர் என்ற தங்களுடைய கிதாபிலும் சொல்கிறார்கள், ஈமான் என்பது மன நம்பிக்கை. சுன்னத் வல் ஜமாஅத்தினர் மன நம்பிக்கைகுத்தான் ஈமான் என்று சொல்கிறார்கள். மனதில் ரசூலுல்லாஹ் அவர்களை நம்புவது. இப்படி நம்புவதற்கு மாத்திரம் தான் ஈமான் என்று சொல்லப்படும். வாயினால் சொல்வதோ (கலீமா) இது புதிதாக இஸ்லாத்தில் சேருபவன் சொல்ல வேண்டும் என்பது கடமை. ஏன்?

இஸ்லாமிய சட்டத்தை அவன் பேரில் நடத்துவதற்கு அவன் வாயினால் கலிமா சொல்வது ஷர்த்து. அவன் எனக்கு முஸ்லிம் பெண்ணை நிகாஹ் செய்து வையுங்கள் எனக் கேட்கிறான். அவன் முஸ்லிம் என்று தெரிந்தால்தானே முஸ்லிம் பெண்ணை நிகாஹ் செய்து கொடுக்க முடியும். அதேபோல் ஒருவன் மௌத்தாகி விட்டான். அவன் முஸ்லிம் என்று தெரிந்தால் அவனை குளிப்பாட்ட வேண்டும். கபனிட வேண்டும்இ ஜனஸா தொழுகை வைக்க வேண்டும். இது மற்ற முஸ்லிம் பேரில் கடமை. இதை அவன் முஸ்லிம் என்று தெரிந்தால் தான் நாம் செய்ய முடியும். எனவே அவன் முஸ்லிம் என்று தெரிவதற்கு கலிமாவை வாயினால் சொல்ல வேண்டும். இப்படி வாயினால் சொல்வது இஸ்லாமியச் சட்டங்களை அவன் பேரில் நிறைவேற்றுவதற்கு ஷர்த்துதானே தவிர அல்லாஹ்விடத்தில் அவன் முஃமினாக இருக்க ஷர்த்து அல்ல.

புதிதாக வாயினால் கலிமா சொல்லி, ஈமான் கொண்டவன் அடுத்ததாக உறுப்புகளினால் அமல் செய்ய வேண்டும். தொழுக வேண்டும், நோன்பு பிடிக்க வேண்டும் மற்ற மற்ற கடமைகளைச் செய்ய வேண்டும்இ இப்படி உறுப்புகளினால் அமல் செய்வது இருக்கிறதே இது ஈமானுடைய மேம்பாட்டுக்கு ஷர்த்து தானேத் தவிர அசல் ஈமானுக்கு ஷர்த் அல்ல.

ஒருவன் தொழாமல், நோன்பு பிடிக்காமல், ஏவப்பட்ட கருமங்களைச் செய்யாமல் விலக்கப்பட்டவைகளை செய்து கொண்டிருந்தானேயானால் அவனையும் முஃமின் என்று தான்

சொல்லுவோம். அவன் ஷிர்க்கானஇ குப்ரான கருமங்களை செய்யாதவரை. ஆனால் ஏவப்பட்டவைகளை அவன் செய்யாதிருந்தால் ஈமானுடைய மேம்பாட்டை இழந்து விடுவான். பாவியாகி விடுவான் என்றுதான் சொல்வோமே தவிர முஃமினல்ல, காபிர் என்று சொல்லமாட்டோம். இதுதான் சுன்னத் வல் ஜமாஅத்துடைய கொள்கை. அப்போ மனநம்பிக்கை ஒன்றுக்குத்தான் ஈமான் என்று சொல்வது.

ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் கொண்டு வந்தததைச் சுருக்கி சொன்னால், தௌஹீது – ரிஸாலத் - (லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரசூலுல்லாஹ்) இதுதான் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கொண்டு வந்தது. மற்றவையெல்லாம் இதனுடைய விபரம்தான். அதாவது வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வை தவிர யாருமில்லை. முஹம்மதாகிய நான் அவனுடைய தூதன். இந்த இரண்டையும் தான் அவர்கள் சொன்னார்கள். இந்த இரண்டையும் மனதில் நம்புவதற்குப் பெயர் தான் ஈமான்.

காரிஜிய்யாக்கள், முஃதஸிலாக்கள் என்ற இரு கூட்டம் அந்த காலத்திலிருந்தே இருக்கிறது. இவர்களுடைய கொள்கை என்னவென்றால் ஈமான் என்பது மன நம்பிக்கையும், உறுப்பினால் அமல் செய்வதுமான இரண்டாகும். நன்றாக கவனிக்க வேண்டும். குழப்பமெல்லாம் இங்கிருந்து தான் வரும். இரண்டும் இருந்தால் தான் அவன் முஃமின் என்று ஏகமாகச் சொல்கிறார்கள். இந்த இரு சாராரும் இவர்களிடத்தில் இரண்டில் ஒன்று போய்விட்டால்...?

உதாரணமாக உறுப்பினால் செய்யும் அமல் போய்விட்டால் அதாவது ஏவப்பட்ட கருமங்களை செய்யவில்லை, விலக்கப்பட்ட கருமங்களையே செய்கிறான் என்றால் அவன் யார்?

ஈமானுக்கு நேர் மாற்றமானது குப்ர். முஃமினுக்கு எதிரானது காபிர். இரவு, பகல் இது தவிர வேறொன்றும் இல்லை. ஒன்று இரவாக இருக்கவேண்டும் அல்லது பகலாக இருக்க வேண்டும். இது போலவே ஈமானுக்கு முரணாணது குப்ர்.

இப்போது நாம் மேலே சொன்ன இரண்டு கூட்டத்தாரிடமும் உறுப்பினால் அமல் செய்ய வில்லையானால் அவன் யார்? என்று கேட்டால் காரிஜிய்யாக்கள் அவன் காபிர் அதாவது சிறு பாவம் செய்தாலும், பெரும் பாவம் செய்தாலும் அவன் காபிர் என்று சொல்வார்கள். ஏனென்றால் ஈமானுக்கு அவன் இரண்டு பகுதிகளை வைத்திருக்கிறானே! ஒன்று மனதில் நம்புவது. மற்றொன்று உறுப்பினால் அமல் செய்வது என்று.

முஃதஸிலாக்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் அவன் முஃமினுமல்ல, காபிருமல்ல என்று.

இப்படிச் சொல்வது பொருந்தாது. ஏனென்றால் முஃமின் - காபிர் இந்த இரண்டைத் தவிர வேறொன்று இல்லை.

முஃதஸிலாக்கள் கொள்கைப்படியும் மேல் குறிப்பிட்ட அம்சங்கள் ஈமானுக்கு வேண்டும். அதில் ஒன்றான உறுப்பினால் அமல் செய்வது இல்லாது போய் விடுவதால் அவன் முஃமினல்ல என்கிறார்கள். அப்போ காபிரா? என்று கேட்டால் தடுமாறுகிறார்கள். ஏனென்றால் காபிர் என்னும் போது இரண்டு அம்சங்களும் இருக்கக்கூடாது. ஆனால் அவனிடத்தில் ஒரு அம்சம் அதாவது மன நம்பிக்கை இருக்கிறதே.

நம் சுன்னத் வல் ஜமாஅத் கொள்கைப்படி அவர் முஃமின்தான். ஆனால் அமல் செய்யாததால் ஈமானுடைய மேம்பாட்டை இழந்துவிட்டான். வல்லாஹுகலக்கும் வமா தஃமலூன் - அல்லாஹ் உங்களைப் படைத்தான், உங்களுடைய செயலையும் படைத்தான். என்று குர்ஆனில் சொல்கிறான. அப்படியானால் சர்வ வஸ்துவையும் அல்லாஹ்

தான் படைக்கிறான். மனிதன் படைக்கவில்லை. மனிதத் தன்மையின் செயலும் அதுவல்ல. இதுதான் சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை. மனிதன் தனது செயலைப் படைக்கவில்லை. ஆனால் ஒரு இக்தியாரை – சுய இஷ்டத்தைக் கொடுக்கப்பட்டிருக்கிறான். இத்தியாரைக் கொடுத்து மனிதன் செய்யும் செயலை அவன் பக்கம் சேர்க்கிறான். மனிதனும் எனது செயல,; அதை நான் செய்தேன் என்று துடிக்கிறான். இப்படி துடிக்கிறதனாலே தான் ஏவல் விலக்கல்கள் எல்லாம் வந்தது.

இக்தியார் - சுய இஷ்டம் என்பதற்கு ஒரு உவமானத்தைக் கூறலாம். ஒரு நிற்கிற மனிதனை எடுத்துக் கொள்வோம். அந்த மனிதனுக்குப் பின்னால் சிறு பையனும் நிற்கிறான். இப்போ நான் நிற்கிற அந்த மனிதனைப் பிடித்து தள்ளுகிறேன். தள்ளிய வேகத்தில் அவன் சிறுவன் மேலே விழுந்து அதன் காரணமாக சிறுவனின் கை முறிந்து விடுகிறது என்று வைத்துக் கொள்வோம். இப்போ கையை ஒடித்தது யார் செயல்? விழுந்தவரின் செயலா? அல்லவா?

இனி மற்றொரு உவமானத்தைப் பார்ப்போம். என் முன்னால் நிற்கிற ஒருவனிடம் கண்ணை நீ பொத்தக்கூடாது என்று சொல்லிவிட்டு அவன் கண்களுக்கு நேரே எனது விரலைத் தூக்கி நீட்டினால் அவன் என்ன செய்வான்? கண்களை பொத்துவான் இல்லையா? கண்ணைப் பொத்தியது யார் செயல்? அவன் செயல்தானே!.

இனி ஒருவன் மற்றொருவனை வீணுக்கு அடித்து விட்டான். இப்போ செயல்கள் மூன்று வகையாகி விட்டது. முதலில் நான் பிடித்துத் தள்ளி அந்த மனிதன் சிறுவன் மேலே விழுந்து, சிறுவனின் கையை ஒடித்த செயல் இருக்கிறதே – அப்போது அம்மனிதனுக்கு நாம் கீழே விழுவோம் என்ற உணர்வே இல்லை. ஏதோ பிடித்து தள்ளினான் என்ற உணர்வு மட்டும் இருக்கும். இரண்டாவது கண்ணைப் பொத்திய செயல் இருக்கிறதே! இந்தச் செயல்களுக்குப் பேர் 'இள்திராரீ' – நிர்பந்தமான செயல். கையை கண்ணை நோக்கி நீட்டும்போது பொத்தாமலிருக்க முடியாது, பலமாக பிடித்துத் தள்ளும்போது கீழே விழாமல் இருக்க முடியாது. எனவே இது இள்திராரீ –நிர்பந்தமான செயல் என்றாகிறது.

அடுத்து வேண்டுமென்று ஒருவனை அடித்த செயல் இருக்கிறதே இததான் 'இக்தியாரீ' – சுய இஷ்டமான செயல். விரும்பினால் அடிக்காமலும் இருக்கலாமல்லவா? எனவே தான் இது இக்தியாரீ ஆகுகிறது. இப்போ சொன்ன மூன்று செயல்களுமே அல்லாஹ்வுடைய நாட்டத்தில்தான் நடக்கிறது. இது அல்லாஹ்வுடைய செயலன்றி மனிதனின் செயலல்ல. மேலே குறிப்பிட்ட மூன்று செயல்களும் மனிதனில் ஓடுகிறது. கால்வாயில் எப்படி வெள்ளம் ஓடுகிறதோ அது போன்று மனிதனிலே இறைவனது செயல்கள் ஓடுகிறது.

முதலில் மனிதனைப் படைத்து பின்னர் அவன் வழியாக அவன் செயலை படைக்கிறான். செயலை ஓட்டுகிறான். இப்படி மனிதனில் இறைவனால் நடத்தப்படும் செயல்களை எனது செயல், நான் செய்தேன் என்று தன்னோடு மனிதன் சேர்க்கிறதாலேயும் இக்தியார் - சுய இஷ்டமும் இருக்கிறதனாலேதான் அல்லாஹுதஆலா இவனுக்கு ஏவல் விலக்கல்களையெல்லாம் ஏற்படுத்தினான். எப்படி இருந்தாலும் எல்லா செயலும் அல்லாஹ்வுடையதுதான். அல்லாஹ் தஆலாவுடைய செயல் இரண்டு மாதிரி இருக்கிறது. இரண்டில் ஒன்று 'உமூரத் தக்வீனி' – அல்லாஹ்வால் சும்மா படைத்து நடத்திக் கொண்டு போகிறசெயல.; மற்றொன்று 'உமூரத் தஷ்ரீஈ'. இது இறைவனால் மக்களுக்கு மார்க்கமாக ஆக்கப்பட்டது. இப்படிச் செய், அப்படிச் செய் என்று சொல்லி ஏவல் விலக்கல் செய்கிறது. இந்த மாதிரி எப்படிச் செயல்கள் வெளி வந்தாலும் அது இறைவனுடையதுதான். இறைவனால் கொடுக்கப்பட்ட சக்தி மூலமாக மனிதன் செய்கிறான். அல்லாஹ் சொல்கிறான்.

'இன்னா கலக்னல் இன்ஸான மின் நுத்பத்தீன்...' நாம் மனிதனை நுத்பாவிலிருந்து படைத்தோம். பின்னர் அவனைக் கேட்கிறவனாகவும், பார்க்கிறவனாகவும், நாம் ஆக்கினோம். அவன் சுயமாக கேட்கிறவனல்ல, அவன் சுயமாக பார்க்கிறவனுமல்ல. நாமே மனிதனை பார்க்கிறவனாகவும், கேட்கிறவனாகவும் ஆக்கினோம். இது 'அதாயி' இறைவனால் கொடுக்கப்பட்ட தன்மையாகும். ஆனால் இறைவனுக்குரிய செயல்கள் இருக்கிறதே அது 'அதகாயி' பிறரால் கொடுக்கப்பட்டதல்ல. இறைவன் செயல்கள் எல்லாமே அவனுக்கு சுயமானது. அவனது தாத்தும் அவனுக்குச் சுயமானதே! அதாவது தனக்குத்தானே உண்டாகி தன்னிலைக்கு தானே ஆதரமாக நிற்கக்கூடியது அவனது ஸிபாத்து. இலட்சணங்கள் தனக்குத்தானே உண்டாகி அவனது தாத்துடன் நிற்கக்கூடியாதாகும்.

அல்லாஹ்வுடைய செயல்கள் அவனது சுயமான சிபத்தை தன்மைகளைக் கொண்டு நடப்பதாகும். ஆனால் மனிதர்களுடைய செயல்கள் இறைவனால் படைத்துக் கொடுக்கப்பட்டதாகும். இதுபோன்று சிருஷ்டிகளுடைய இலட்சணங்களும் அல்லாஹ்வால் கொடுக்கப்பட்டதாகும்.

தாத்- ஸதூலங்கள் இறைவனால் படைக்கப்பட்டது போன்றே இலட்சணங்களும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டு அவனாலேயே நிலை நிற்கிறது. ஆனால் மனிதன் தான் செய்ததாகத் துடிக்கிறான். இறைவனால் கொடுக்கப்பட்ட இக்தியார் - சுய இஷ்டம் ஒன்று தவிர வேலையெல்லாம் இறைவனால்தான் நடக்கிறது.

'வமா அஸாபகமின் ஹஸனத்தின் ஃப மினல்லாஹ், வமா அஸாபக மின் ஸய்யிஅதின் ஃபமின் நஃப்ஸிக. குல்குல்லுன் மின் இந்தில்லாஹ்'

எல்லா வஸ்துக்களுமே அல்லாஹ்விடத்திலிருந்து வந்ததுதான். இதுதான் நமது நம்பிக்கை. இப்படி எல்லாமே இறைவனுடையது என்று நம்புவதும் நமது ஈமானுக்கு ஷர்த்தாகும். அதாவது நன்மை, தீமை அனைத்துமே அல்லாஹ்வின் ஏற்பாட்டில் உள்ளது என்று நம்புவதாகும். இப்படி நம்பாதவர்கள் முஃமின்களாக மாட்டார்கள். இப்படி இதை நம்புவது தான் களா – கத்ரை நம்புவது என்று சொல்வது. களா – கத்ரை நம்பாதவன் முஃமினல்ல. களாக்கத்ரை நம்புவது ஈமானின் ஆறு காரியங்களில் ஒரு அம்சமாகும்.

ஆக செயல்கள் அனைத்தும் அல்லாஹ்வைக் கொண்டது. சர்வ உலகத்தில் நடக்கும் வேலைகளும் அல்லாஹ் ஒருவனால்தான் நடத்தப்படுகிறது. மெய்பொருள் அவன் ஒருவனேயாகும். யுக்தி சுருதி பிரமாணங்களைக் கொண்டு நன்றாக அறிய வேண்டும். இப்படி அறிவதற்கு பெயர்தான் ஈமான். அதில் உறுதியாக இருந்தால் அதற்குப் பெயர் இல்முல் யகீன். இல்முல் யகீன் என்றால் யார் வந்து அசைத்தாலும் அசைக்க முடியாதது. இதற்கு கண்காட்சி தேவையில்லை. முதலாவது இந்த ஈமான் வேண்டும். அப்புறம் ஐனுல் யகீனாக வேண்டும். அதற்கும் மேலே ஹக்குல் யகீனாக வேண்டும்-கண்காட்சியாக வேண்டும். அதுக்கு மேலே ஹக்குல் யகீனாக வேண்டும் - கண்காட்சியாக வேண்டும். இப்படி இரண்டுவிதமான ஈமானும் கொள்ள வேண்டும். கண்காட்சி இல்லாத இல்முல் யகீன,; கண்காட்சியான ஐனுல் யகீனுமான இரண்டு வித ஈமானும் கொள்ள வேண்டும்.

'யா அய்யு ஹல்லதீன ஆமனூ' என்று சொன்னால் ஈமான் கொண்டு போனவனே ஈமானை நீ பலப்படுத்து என்று பொருள்.

இப்படி பலமான ஈமான் கொண்டபிறகு இத்தகுல்லாஹ்... அல்லாஹ்வை வணங்கவேண்டியது.

தக்வா என்று சொன்னால் மூன்று மாதிரி 1.தஜன்னுபு, 2.தகப்புளு, 3.விகாயத். தஜன்னுபு என்றால் தவிர்த்து கொள்ளுதல். அல்லாஹ்வுடைய கட்டளைக்கு விரோதம் செய்வதை தவிர்த்துக் கொள்ளுதலாகும். இது முதல் தக்வாவாகும். அடுத்தது அல்லாஹ்வுடைய நினைப்புகளைத் தவிர மற்ற நினைப்புகள் அதிகமாக மனதில் வராதபடிக்குப் பார்த்துக் கொள்வது. அதற்கு மேலேயும் போவதானால் அல்லாஹ்விலேயே ஃபனாவாகி-இலயித்து அதன் பிறகு பகாவுக்கு-நிரந்தரத் தன்மைக்கு வந்ததன் பின் நல்லகாரியங்களை யெல்லாம் அல்லாஹ்வின் பக்கம் சோப்பதும் கெட்ட கருமத்தை எல்லாம் தன் பக்கம் சோக்கிறதுமாகும்.

நல்ல கருமங்களை அல்லாஹ்வின்பால் சோப்பது அதபு – ஒழுக்கமாகும். அவனுக்கு எந்த மருவும் வந்துவிடக்கூடாது என்பதற்காகும். கெட்ட கருமங்களை நம் பக்கம் சேர்ப்பது அல்லாஹ்வின் அந்தஸ்தைப் பாதுகாக்குவதற்காகவும் - இதைத்தான்

'வமா அஸாபகமின்ஹஸனத்தின்' - என்ற வசனத்தின் மூலம் அல்லாஹ் நமக்கு எடுத்துச் சொல்லுகிறான்.

ஈமான் கொள்ளுதல், அடுத்து தக்வா செய்தல் பிறகு அவனளவில் செல்வதற்கு ஒரு வஸீலாவை சிபாரிசை எடுத்துக் கொள்ளுதல்.

'வப்த கூ இலைஹில் வஸீலத' அவன்-(அல்லாஹ்) பக்கம் செல்வதற்கு ஒரு சிபாரிசை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த வஸீலா என்பதற்கு இபாதத் என்று சிலர் அர்த்தம் சொல்கிறார்கள்.

அல்லாஹ் ஒரு செயலை செய்த பிறகு அதன் வழியாக இன்னொரு செயலைச் செய்வான். இதில் முந்தியதற்கு 'ஸபப்' என்றும் 'வஸீலா' என்றும் சொல்லப்படும். உதாரணமாக முதலில் தீயைப் படைத்தான். பின் அதன் வழியாக சூட்டைப் படைத்தான். இந்தத் தீயும் அதிலுள்ள சூடும் அல்லாஹ்வால் படைக்கப்படட்டது தான். தீ சுட்டது என்றால் உண்மையில் தீ சுடவில்லை. அல்லாஹ்தான் சுட்டான் .அல்லாஹ்வின் இச்செயல் தீ வழியாக நடந்திருக்கிறது. அதனால் இத் தீயை வஸீலா,வாஸிதா, ஸபப் என்றெல்லாம் சொல்லலாம்.

இதுபோன்று இபாதத் செய்வதையும் அல்லாஹ் வஸீலாவாக ஆக்கியுள்ளான். அல்லாஹ்வுடைய பாதையிலே சேருகிறதர்க்கு இதை ஒரு வழியாக வைத்திருக்கிறான். அதனாலேயே இதையும் (இபாதத்தையும்) வஸீலா என்று சொல்லலாம். அதனாலேயே தான் வஸீலா என்பதற்கு இபாதத் என்று பொருள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 'வப்தகூ இலைஹில் வஸீலத' என்பதிலுள்ள வஸீலாவுக்கு (இபாதத்) வணக்கம் என்ற கொருளைக் கொடுப்பது பொருத்தமல்ல. ஏனென்றால் இதற்கு முந்திய வாசகத்தில் 'இத்தகுல்லாஹ்' அல்லாஹ்வை வணங்குங்கள் என்று சொல்லியாகிவிட்டது. 'இத்தகு' என்றால் ஏவல் அனைத்தையும் எடுப்பது விலக்கல் அனைத்தையும் விடுதல், தவிர்த்தல் எல்லாமே அடங்கிவிட்டது. அப்போ தொழுகை இபாதத் எல்லாம் வந்து விட்டது. ஆகவே மறுபடியும் 'வப்த கூ இலைஹில் வஸீலத'- அவனளவிலே வஸீலாவைத் தேடுங்கள் என்று முந்திய கருத்தில் சொன்னால், சொன்னதைத் திரும்ப சொன்னதாக ஆகிவிடும். ஆகவே இது முந்திய கருத்தைக் கொண்டுள்ளது அல்ல. வேறொரு பொருளைக் கொண்டதாகும். அந்தப் பொருள் என்ன?

***வப்த கூ இலைஹில் வஸீலத***

(இதில் வஸீலா என்பதற்கு இபாதத் என்ற பொருள் ஏற்புடையது அல்ல என்பதை ஷெய்குனா அவர்கள் விளக்கி உரையாற்றியது வஸீலா என்பதற்கு இபாதத் என்று பொருளில்லையாயின் அதற்கு என்ன கருத்தைக் கொடுக்க வேண்டும். இதோ ஷெய்கு நாயகம் அவர்கள் பேசுகிறார்கள் கேளுங்கள்.)

***வஸீலா--***

'அது ஒரு ஆளைப் பிடித்துக் கொள்ளுங்கள் என்ற பொருளை தரும். இபாதத் எல்லாம் இத்தகூ- நீங்கள் வழிபடுங்கள் என்ற வார்த்தையில் சேர்ந்துவிட்டது. இப்போது உனக்குப் பாதையைக் காட்ட ஆளைப்பிடி என்று பொருள். உனது கல்புடைய பிணிகளை (உளப் பிணிகளை) சொல்லித் தருவதற்குத் தகுந்த ஒரு ஆளைப்பிடி. உள்ளத்தடன் போராடுவதற்குத் தகுந்த ஒரு ஆளைப்பிடி – ஒரு ஷெய்கைப்பிடி என்று தான் பொருள். ஷெய்கின் வழியில் செல்வதினாலே ஷெய்க் ஒரு வஸிலா. ஆகவே வப்தகூ என்று கூறினால் காமிலான ஒரு ஷெய்கை பிடித்துக் கொள் என்று பொருள். உள்ளத்து பிணிகளை உணர்த்துவதற்கு-எடுத்து உரைப்பதற்கு உளவியலறிஞரால் தான் முடியும். இதனாலேயே எவனுக்கு ஷெய்கு இல்லையோ அவனுக்கு ஷெய்க் ஷெய்தான் என்று கூறுகிறார்கள். அப்படி என்றால் எவருக்கு வழிகாட்ட

ஆளில்லையோ அவனை ஷெய்த்தான் எங்காவது கொண்டு போய்த் தள்ளி விடுவான். இதற்காகத்தான்- நல்ல ஒரு வழிகாட்டி வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில்தான்- நோக்கத்தில்தான் நாம் தினமும் ஃபாத்திஹாவில் இஹ்தி நஸ்ஸிராத்தல் முஸ்தகீம்- எங்களுக்கு நேரான பாதையில் வழிகாட்டு என்று ஓதுகிறோம். அந்த நேரான பாதை- சீரான பாதை எது? என்ற கேட்டால் 'ஸிராத்தல்லதீன அன்அம்த அலைக்கும்'- நீ யாருக்கு நிஃமத் செய்தாயோ அந்த ஆட்களுடைய வழியிலே- அத்த நிஃமத் செய்யப்பட்டவர்கள் யார்? என்று கேட்டால் அவர்கள் தான் நபிமார்கள், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள், உலாயிக அன் அமல்லாஹு அலைகும் மினன்னபிய்யீனஇ வஸ்ஸித்தீகீன, வஷ்ஷுஹதாயி, வஸ்ஸாலிஹீன்.

இந்த மேன்மைக்குறியவர்களின் வழியிலே நேர்வழியைக்காட்டு! என நாம் கேட்கிறோம். அவர்கள் கடந்து வந்த பாதையிலே நடந்து வந்த வழியிலே நாமும் வெற்றி நடை போட வேண்டும். அந்தப் பாதையில் போனால் தான் முக்தி அடைய முடியும். இதுதான் ஒரு ஆளைப் பிடித்துக் கொள் என்று பொருளே தவிர தொழுகை, நோன்பு என்பதல்ல. அது இத்தகுல்லாஹ் என்பதிலே முடிஞ்சுது. அப்புறம் இப்படிப் பிடித்துக்கொண்டு சும்மா உட்காந்திருந்தால் நடக்காது.

*வ ஜாஹிதா ஃபீஸபீலில்லாஹி*

போர் புரியுங்கள் - அதாவது அவனளவில் போவதற்கு உங்கள் நஃப்ஸ்களுடன் போராடுங்கள். அப்படியாயின் நீங்கள் முக்தியடைவீர்கள். ஏன்? அல்லாஹ் நமக்கு ஒரு இக்தியாரைத் தந்தான். இக்தியாரைத் தந்த உடனேயே எல்லாம் நம்முடைய செயல் என்று வாதிக்க ஆரம்பித்து விடுகிறோம.; நம்முடைய செயல் என்று வாதிப்பதற்கு முன்னால் இச் செயல்கள் எல்லாம் ஆதேயம் ஆகும். ஆதேயம் என்றால் அண்டி நிற்பது, அண்டி நிற்கக் கூடியவர்களுக்கு ஆதாரம் வேண்டும். ஒரு பொருளை எடுத்துக்கொண்டு ஒருவன் நான் பார்த்தேன். நான் செய்தேன் என்று எல்லாவற்றிலும் நான் நான் என்று சொல்கிறான். இவ்வாறு நான் தான் என்று கூறுவதுதான் அவனுடைய ஹயாத். ஹயாத்தின் பக்கம்

எல்லாவற்றையும் சேர்க்கிறான். இந்த ஹயாத் உஜூது கவனித்துப் பார்த்தால் இந்த உஜூது ஒரு ஆதாரப் பொருளில்லை – ஆதேயம் தான். அதாவது ஆதேயம் என்றால் சுவர். சுவரிலுள்ள நிறம், சுவரை அண்டித்தான் நிற்கிறது. சுவரை அண்டாமல் நிறம் தனியே நிற்குமா? நிற்காது. இன்னொன்றை அண்டி நிற்பது ஆதேயம். எதைப்போய் அண்டி நிற்கிறதோ அதற்குப் பெயர் ஜவ்ஹா-; ஆதாரம். அந்த சுவர் ஆதாரம் அது போல நம்முடைய புலன்கள் அத்தனையும் பார்ப்பதுஇ கேட்பதுஇ தொட்டறிவது போன்ற எல்லாமே ஆதேயம். இவை, தான் என்ற பொருளைக் கொண்டு நிற்கிறது. இது இல்லை என்றால் இந்தப் பொருட்கள் அத்தனையும் யாருடைய செயலோ அவன் பக்கம் சேரும். நான் என்பது இல்லை என்று போனால் மையயத்தாகிவிட்டால் அல்லாஹுத்தஆலாதான் இவை எல்லாவறிற்கும் அதிகாரி. இதைத்தான் நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹிவஸல்லம் அவர்கள் 'மன் அரஃப நப்ஸஹுவ கத்அரஃப ரப்பஹு என்று கூறினார்கள். எவன் தன்னுடைய நஃப்ஸை அறிந்தானோ அவன் தன்னுடைய ரப்பை அறிவான். நஃப்ஸ் என்றால் நான் என்ற ஹயாத்தான உஜூது. அதை எப்படித் தெரிந்தானானால் மைய்யித் என்று தெரிந்தான். மைய்யித் என்று தெரிந்த பிறகு அதில் நடக்கின்ற வேலைகளெல்லாம் தன்னுடையதல்ல, இதற்கு உடமைக்காரன் யார்? என்றும் தெரிந்துக் கொண்டான். இப்படித் தெரிந்த ஆட்கள், செயல்களையெல்லாம் தன்பக்கம் சேர்க்கிறதை விட்டுவிட்டு அல்லாஹ்வின் பக்கம் சேர்ப்பார்கள். இவர்கள்தான் ஒலிமார்கள்.

அகக்கண் திறந்தவர்களைத்தாம் ஒலி என்று சொல்கிறோம். அல்லாஹ் சொல்கிறான் 'அலா இன்ன ஒளலியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வலா ஹும் யக்ஸலூன்'

இதில் அலா என்ற எச்சரிக்கையும் இன்ன என்ற உறுதியையும் சேர்த்து கூறுகின்றான். 'கவனம்! நிச்சயமாக அல்லாஹ்வுடைய அவ்லியாக்களாகிறவர்கள், அவர்களுக்கு பயமுமில்லை சலிப்படையவுமாட்டார்கள்'. இப்படிச் சொல்லவேண்டிய காரணமென்னவென்றால் ஒரு காலத்தில் அவ்லியாக்களை பற்றி குறைவுபட சொல்கிறவர்களும்இ மறுக்கிறவர்களும் இருப்பார்கள் என்று தெரிந்துதான் இப்படிச் சொல்கிறான்.

ஏன் கவலைப்படமாட்டார்கள்? 'அல்லதீன ஆமனூ வகானூ யத்தகூன்'

அவர்கள் ஈமான் கொண்டவர்கள், முத்தகீயாக ஈமான் கொண்டு ஆகிவிட்டார்களே அப்படிபட்டவர்கள். பரிபூரணமான முஃமின்களாகி சம்பூரணமான முத்தகீகளாக ஆகிவிட்டார்கள். ஆகையினால் அவர்களுக்கு பயமும் கிடையாது கவலையும் கிடையாது.

இல்முல் யகீனிலிருந்து ஐனுல் யகீனுக்கும், ஹக்குல் யகீனுக்கும் போய் கண்காட்சியாக பார்க்கும் - இங்கே நடக்கும் விவரங்களை கண்காட்சியாக கண் கொண்டு பார்க்கும் முஃமின்களுக்கு அல்லாஹ்வைத் தவிர அவர்களுக்கு வேறொன்றும் கிடையாது. எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள். தம்மையே மறந்தவர்கள் தன்னை மறந்து அல்லாஹ்வின் ஞபகத்தில் இலயித்து விட்டவர்கள். அப்படி இருக்கும் போது அவர்களுக்கு

மற்ற விஷயங்கள் ஒன்றுமே தெரியாது. ஒன்றுமே தெரியாத போது மற்றவைகளைப் பற்றி பயம் எப்படி வரும்? கவலை எப்படி உண்டாகும்?.

சாதாரணமாக ஒரு மனிதனுக்கு பயம் ஏற்படுகிறது என்றால் பிறரிடமிருந்து அவனுக்கு ஏதாகிலும் ஆபத்து வருவதை எதிர்பார்த்தால் பயம் வரும். இந்தப் போலீஸ் அடித்து விடுவானோ? பிடித்து விடுவானோ? என்று ஆபத்தை எதிர்பார்க்கிறதனால் பயம் வரும். ஒரு ஆபத்து நடந்து விட்டது என்றாலோ ஒரு ஐசுவரியம், சொத்து, சுகம் போய் விட்டது என்றாலோ கவலை வரும்.

ஆனால் இந்த ஒலிக்கோ தன்னைத் தெரியாது வேறொரு வஸ்துவைத் தெரியாது. எல்லாமே அல்லாஹ்வின் செயல் என்று அல்லாஹ்வையே பார்த்துக் கொண்டிருக்கும் போது எந்த போலீஸைக் கண்டு பயப்படுவார்கள்?.

இப்போது ஒலி என்றால் யார்?

தன்னையே மறந்தவர். தன்னை இல்லை என்று தெரிந்தவர். தனது ஹயாத்தை – உஜூதைப் பாhத்தவர். தன்னை எப்படிக் காணுகின்றார் என்றால,; தான் மௌத்தாகிப் போய் விட்டவர் என்று காணுகிறார். தன்னை ஒரு மய்யித்து என்று பார்த்தவர்! இறைவன் சொல்கிறான் 'இன்னக மய்யிதுன் வ இன்னஹூம் மய்யிதூன்'.

நாயகமே! தாங்கள் மௌத்தாகிறவர்கள.; அவர்களும் மௌத்தாகிறவர்கள் என்று. அல்லாஹ் சொல்கிறான் சாதரணமாக நீங்களும் மரணமாகக்கூடியவர்கள் அவர்களும் மரணமடையக்கூடியவர்கள் என்று சொன்னால், நீங்களும் நாளை மௌத்தாவீர்கள் அவர்களும் மௌத்தாவார்கள் என்பதுதானே அர்த்தம். அப்படியல்ல!

அரபிப் பாஷையில் வினைச்சொல் (இஸ்மு ஃபாயில்) என்பது ஒரு பொருளையும், ஆளையும் குறிக்கக் கூடியதாகும். வினைப் பெயர்ச் சொல்லுக்கு காலம் கிடையாது. ஃபஅல-செய்தான் யஃப்அலு-செய்வான் ஃபாஇலுன்-செய்கிறவன் என்று சொல்லும்போது வினைப் பெயர் சொல்லில் நீங்கள் ஒரு காலத்தையும் சேர்க்கிறீர்கள். செய்கிறவன் என்றால் இப்போது செய்கிறவன் என்று அர்த்தம். அல்லது செய்தவன் என்று சொல்லுங்கள். சென்ற காலத்தில் செய்தவன்- இனிமேல் செய்கிறவன் என்று சொல்வீர்கள். அரபியில் 'இஸ்மு ஃபாயில்' என்று சொன்னால் வினைப்பெயர். சொல்லுக்கு காலம் கிடையாது. வினையையும், ஆளையும்தான் அது குறிக்கும். அது போன்று வினையும், ஆளையும் குறிக்கும் சொல் தமிழில் சொல்ல முடியாது. காலத்தையும் சேர்த்துதான் சொல்ல வேண்டும். மற்ற மொழிகளில் கூட அப்படித்தான் உள்ளது. சில பதங்களில் மட்டும் தான் அரபியில் உள்ளது போல வருமே தவிர மற்றதில் வரவே வராது. உதாரணமாக தாபிக்ஃ - சமையல் செய்பவன் அல்லது சமையல் செய்கிறவன் அல்லது சமையல் செய்தவன் எனச் சொல்வீர்கள். இந்த மூன்று காலத்தில் ஒரு காலத்தைச் சேர்த்து சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம் மூன்றில் ஒரு காலத்தைச் சேர்த்துச் சொல்வீர்கள்.

இது மூன்றையும் குறிக்காமல் வெறும் சமையலையும், சமையல் செய்யும் ஆளையும் மட்டும் குறிக்க வேண்டும். இதைத் தமிழில் எப்படிச் சொல்ல வேண்டும்? சமையல்காரன் எனச் சொல்லலாம். தையல்காரன் எனச் சொன்னால் இன்று தைப்பவன், நேற்று தைத்தவன், நாளை தைப்பவன் எல்லாரும் சேர்ந்து விட்டார்கள்.

காலமில்லாமல் செயலையும், ஆளையும் சேர்த்து மேலே சொல்லப்பட்டதுபோல் ஒன்றிரண்டுதான் கிடைக்குமே தவிர மற்றவைகளில் கிடைக்காது.

ஆனால் அரபியிலே எடுத்துக் கொண்டால் எந்தப் பதத்தை எடுத்துக் கொண்டாலும் வினைச்சொல் காலம் இல்லாமல் ஆளையும், வினையையும் மட்டுமே குறிக்கும்.

'ரஸ்ஸாக்' என்று சொன்னால் உணவு கொடுப்பவன் என்று சொல்வீர்கள். நேற்று கொடுத்தான் என்றால் இன்று கொடுக்கவில்லையா? நாளை கொடுக்க மாட்டானா? எனவே இப்படி இல்லாமல் -

மூணுகாலத்தையும் சேர்த்துச் சொல்ல முடியுமா? ரஸ்ஸாக் என்பதற்கும், அல்லாஹ்வுடைய மற்ற திரு நாமங்களுக்கும் பொருள் சொல்ல முடியுமா? முடியாது. அரபிப் பாஷையில் வினையையும்இ ஆளையும் மட்டுமே குறிக்கக்கூடிய தனி விஷேசமிருக்கிறது.

அதுபோல் மய்யித் என்பதும் வினைச்சொல.; மய்யித் என்றால் மௌத்தானவர் என்ற பொருளா? அல்லது மௌத்தாகிறவர் என்ற பொருளா? அல்லது இனிமேல் மௌத்தாகக்கூடியவர் என்ற பொருளா?

இம்மூன்று காலத்தையும் விட்டுவிட்டு வெறும் மௌத்தையும், ஆளையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றால் அன்றும், இன்றும், எப்பவும் நீங்கள் மௌத்தானவர்கள். இன்னக மய்யிதுன் நேற்றும் மய்யித்துதான். இப்பவும் மய்யித்துதான். நாளைக்கும் மய்யித்துதான். இதைப்போன்று அவர்களும் இன்றும், என்றும், எப்பவும் மய்யித்துதான். இதை ஆரிபீன்கள் கண்காட்சியாகக் காணுகிறார்களா. தாங்கள் மௌத்தானவர்கள் என்பதை உணர்ந்திருக்கிறார்கள். தான் என்ற எண்ணம் அற்று மௌத்தாகி அல்லாஹ்வின் பக்கம் சேர்ந்து விட்டவர்கள் இவர்கள்.

இதோ ஆஷிக் சொல்கிறார். ஆண்டவனே! நான் உன்னிடத்தில் வராமல் தூர விலகிப் போய் கிடக்கிறேன். நான் என்ன பாவம் செய்தேனென்று என்னை தூரத்தில் போட்டிருக்கிறாய்? எனக் கேட்டேன். அந்த நேசன் பதில் சொன்னான்: 'உன்னுடைய உஜூது( உள்ளமை)தான் பாவம் நீ போனால் அவன் வருவான்'என்று.

அப்படியானால் தன்னை அறிய வேண்டும். மௌத்தை தெரிந்துக் கொள்ள வேண்டும். மௌத்தைத் தெரிந்துக் கொண்டவர் - தானொரு மய்யித்து என்பதைப் புரிந்துக் கொண்டவர்தான் வலி. தான் மய்யித்து என்பதைத் தெரிந்து கொள்ளாமல் தான் உயிரோடிருப்பதாக எண்ணிக் கொண்டிருப்பவன் அல்லாஹ்விடம் போக இயலாது.

'நீ நம்மிடம் சேர வேண்டுமென விரும்பினால் நீ செத்து விடுவது ஷர்த்து (நிபந்தனை) கொஞ்சம் பாக்கியிருக்கும் உயிர் கூட இருக்கக்கூடாது! சாவில்லா சுக வாழ்வை நாடி செத்துப் போக வேண்டுமே! சேர்த்துவைக்கும் சால சிறந்த வழி இதுவே நேசரே!'

ஆஷிகீன்களுக்கு தானும்இ அல்லாஹ்வும்தான் இருப்பதாத் தெரியும். மற்றவர்களைப் பற்றி அவர்களுக்கு தெரியாது. இவர்கள்தான் மௌத்தை அனுபவித்தவர்கள் தங்கள் நப்ஸை மௌதாக்கிக் கொண்டவர்களாகும்.

நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லமவர்கள் ஒரு முறை யுத்தத்திற்குச் சென்று திரும்பிய பொழுது சொன்னார்கள், நாம் இப்போது சின்னச் சண்டையில் இருந்து திரும்பியுள்ளோம். பெரிய சண்டைக்கு வந்திருக்கிறோம். சஹாபாக்கள் கேட்டார்கள், எங்கள் உயிரையெல்லாம் கொடுத்து ஜிஹாதுச் செய்திருக்கிறோம். இதைவிடப் பெரிய சண்டை வேறென்ன இருக்கிறது?. 'நப்சுடன் செய்கிற சண்டை தான் அது' என பதில் சொன்னார்கள்.

நப்சுடன் செய்கிற சண்டைதான் பெரிய சண்டை. இதைப் பெரிய சண்டை என்று சொன்னதற்கு பல காரணங்கள் உண்டு. காபிரீன்கள் கண் முன்னால் இருந்தார்கள். ஆனால் இந்த எதிரியோ நம் கண்ணுக்குத் தெரியமாட்டான். இந்த எதிரிக்கு ஷெய்த்தான்களும் பக்கபலமாக இருக்கிறார்கள். இந்த எதிரியை நாம் அடக்கினால் தான் முக்தி பெற முடியும். காபிர்களோடு நாம் ஜிஹாதுச் செய்து வெட்டுப்பட்டால் ஷஹீது ஆவோம். நாம் அவர்களை வெட்டினால் பீஸபீல் செய்த நன்மை கிடைக்கும்.

இப்படி நப்சுடன் செய்கிற சண்டைக்கு வசீலா தேவை. ஆகவே அல்லாஹ் சொல்கிறான், 'வப்தகூ இலைஹில் வஸீலத்த' இப்படி சண்டை செய்து வெற்றியாகி விட்டால் - அல்லாஹ்வின் பக்கம் சேர்ந்து விட்டாய். அப்போ உன்னையே நீ பார்த்துக் கொண்டாய், மௌத்தை நீ தெரிந்து கொண்டாய் என அர்த்தம். பின்பு

'அலா இன்ன ஔலியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வலாஹும் யக்ஸனூன்';

நிச்சயமாக அல்லாஹ்வுடைய ஔலியாக்களுக்கு பயமுமில்லை. அவர்கள் கவலைப்படவுமாட்டார். 'அல்லதீன ஆமனூ வகானூ யத்தகூன்'. அவர்கள் ஈமான் கொண்டு தக்வா செய்தார்களே – தக்வா செய்தவர்களாக ஆனார்களே அப்படிப்பட்டவர்கள்.

'லஹுமுல் புஷ்ரா ஃபில் ஹயாத்தித்துன்யா....'

அவர்களுக்கு இவ்வுலகிலும் நல்வாழ்வு இருக்கிறது, மறுமையிலும் நல்வாழ்வு இருக்கிறது. அல்லாஹ்வின் வார்த்தைகளில் மாற்றமிருக்காது. இதுதான் மிகப் பெரிய பாக்கியம் என்று அல்லாஹ் சொல்கிறான்.

இந்த உலகத்தில் அவர்களுக்கு என்ன நல்வாழ்வு – நன்மாராயம்? எனக் கேட்டால் கராமத் நடக்கிறது. அல்லாஹ் அவர்களைக் கொண்டு எத்தனையோ வேலைகள் முடிக்கிறான்.

இப்போது ஒளலியாக்களுக்கு – மௌத்தாய்ப் போனவர்களுக்கு கராமத் எப்படி வருமெனக் கேட்கிறார்கள். கராமத் நடக்க வேண்டுமானால் மௌத்தாய்ப் போகிறது ஷர்த்தாகும் எப்படி?

விலாயத் - ஒலித்துவம் வருகிறது என்றால் - வலீயாக ஆவது என்றால் மௌத்தைப் பற்றி தெரிந்திருக்க வேண்டும். தானொரு மய்யித்து என்று தெரிந்திருக்க வேண்டும். தானென்ற எண்ணம் மௌத்தாகிப் போனால்தான் விலாயத் வரும்.

அப்போ விலாயத்துக்கு மௌத்து ஷர்த்தாகும்போது கராமத்துக்கு மௌத்து எப்படி இடைஞ்சலாக முடியும்? கராமத் என்றால் என்ன?

அல்லாஹுத்தஆலா வழக்கமாக ஒன்றுக்குப் பின் ஒன்று என செய்து வருகிறானே இதற்குப் பெயர் இயற்கை. இந்த இயற்கைக்கு – வழமைக்கு மாற்றம் செய்வதே கராமத். இப்படி வழமைக்கும், இயற்கைக்கும் மாற்றமாகச் செய்வதும் அல்லாஹ்வுடைய வேலைதான். இதை ஒலி பக்கம் சேர்க்கிற போது அதற்குப் பெயர் தான் கராமத். ஒரு நபியின் பக்கம் சேர்கிறதாயிருந்தால் முஃஜிஸாத. கராமத்தும் சரி, முஃஜிஸாத்தும் சரி இரண்டுமே அல்லாஹ்வுடைய செயல்தான். இது இயற்கைக்கு மாற்றமான செயல். இயற்கை படி செய்வது கராமத் அல்ல.

கராமத் என்பது கர்குல் ஆதத் - வழமைக்கு மாற்றமான செயல். இந்த வழமைக்கு மாற்றமான வேலைகளைச் செய்வது அல்லாஹ்தானே தவிர ஒலி அல்ல. இப்படி இருக்கிறபோது மௌத்தாய் போயிட்டா அவர்களுக்கு கராமத் வராது என்றால் என்ன அர்த்தம்?.

அப்படியானால் ஹயாத்தாயிருக்கிறவர்கள் - அவர்கள் செய்யும் வேலைகள் எல்லாம் அவர்களாலே செய்யப்படுகிறது என்று அர்த்தமாகி விடுமா? ஹயாத்தாக இருப்பவர்கள் அவர்கள் வேலையை அவர்கள்தான் செய்கின்றனர் என்பது நமது கொள்கையல்ல. சுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையல்ல. காரிஜியாக்களின் கொள்கையாகும். மனிதன் தனது செயலைத் தானே படைக்கிறான் என்பது காரிஜியாக்களின் கொள்கையாகும்.

நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் பத்ரு யுத்தத்திலே செத்துப் போன காபிர்களை ஒரு கிடங்கில் புதைக்கச் செய்த பிறகு, அவர்களில் ஒவ்வொருவருடைய பெயரையும் கூப்பிட்டு அல்லாஹ்வுடைய வார்த்தைப்பாட்டை பெற்றுக் கொண்டீர்களா? நாங்கள் பெற்றுக் கொண்டோம் எனச் சொன்னதைக் கேட்ட உமர் ரலியல்லாஹுஅன்ஹுஅவர்கள், 'செத்தவர்களைக் கூப்பிட்டு பேசுகிறீர்களே!' என்று கேட்டபோது, 'நீங்கள் கேட்பதை விட நன்றாக அவர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்லத்தான் முடியாது' என்றார்கள்.

ஏன்? கேட்கும் சக்தி உறுப்புக்கல்ல மனதுக்கு - ரூஹுக்காகும். ரூஹு செத்துப் போகாது. முஃமினான நல்லவர்களுக்கு அல்லாஹ் கராமத்தை - இயற்கைக்கு மாற்றமான செயலைக் கொடுத்திருக்கிறான். அவர்கள் மரணமானவர்களானாலும், உயிரோடிருப்பவர்களானாலும் சரியே! இந்த சக்தியை இறைவன் கொடுத்திருக்கிறான்.

நாயகமவர்கள் ஜன்னத்துல் பகீஹுக்குச் சென்று மௌத்தானவர்களுக்கு ஸலாம் சொல்லி விட்டு, 'அஸ்அலுக்கல்லாஹ லீ வலகுமில் ஆ∴பியா' அல்லாஹ்விடத்தில் எனக்கும், உங்களுக்கும் ஆ∴பியத்தைக் கேட்கிறேன் என்று சொல்வார்கள்.

'கப்றுஸ்தானிற்குச் சென்று எனக்கும், உங்களுக்கும் ஆ∴பியத்தைக் கேட்கிறேன்' என ஏன் கேட்க வேண்டும்?.

அந்த இடத்தில் - அங்கே அடங்கப் பெற்றிருக்கும் நல்லவர்களுக்கு இறைவன் சங்கை செய்கிறான். அல்லாஹ்வின் ரஹ்மத் இறங்குகிறது. ரஹ்மத் இறங்கும் அந்த இடத்தில் துஆ கேட்டால் அதை கபூல் செய்கிறான். ஏற்றுக் கொள்கிறான். மற்ற இடத்தைவிட அந்த இடத்தில் கபூல் செய்வான் என்ற இயற்கைக்கு மாற்றமான விஷயத்தை அவர்கள் அறிந்திருந்ததினால் அவ்விடத்தில் போய் துஆச் செய்தார்கள்.

இதைப் போலவே மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடைய விஷயமுமாகும். 'குல்லமா தகல அலைஹா ஜகரிய்யா அல்மிஹ்ராப வஜத இன்தஹா ரிஸ்கன்...' மர்யம் அவர்களைத் தனியே அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் இருந்த அறையை அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறார்கள் நபி ஜக்கரியா அலைஹிஸ்ஸலாம் அவர்கள்!

மர்யம் அலைஹிஸ்ஸலாம் தனியே இருந்து இபாதத் செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஜகரிய்யா அலைஹிஸ்ஸலாம் அங்கே போய் பார்த்தால் அங்கு உணவுகள் இருக்கிறது. காலங்களுக்கு மாற்றமான பழங்கள் - கனி வர்க்கங்கள் இருக்கின்றன. எந்தக் காலத்தில் எந்தப் பழமிருக்குமோ அந்தப் பழமில்லாமல் மற்றொரு காலத்தில் வரவேண்டிய பழங்கள் இருக்கின்றன. அதாவது சீசனுக்கு மாற்றமான பழங்கள் வந்திருக்கிறது. இவற்றை யார் தந்தாhர்கள்? என ஜக்கரியா அவர்கள் கேட்டபோது 'அல்லாஹ் தந்தான்! அல்லாஹ் தான் நாடியவர்களுக்குக் கொடுக்கிறான்' என மர்யம் அலைஹிஸ்ஸலாம் கூறினார்கள்.

அல்லாஹ் மாற்றமான காலத்தில் - அந்த காலத்தில் வராத பழங்களைக் கொண்டு வருகிறான் என்றால், நமது காரியத்திலும் இயற்கைக்கு மாற்றமானது செய்வான். இந்த இடத்தில் இயற்கைக்கு மாற்றமானது நடந்திருக்கிறது. எனவே இந்த இடத்தில் வைத்துக் கேட்டால் நமக்கும் தருவான். அந்த கராமத்தைச் செய்வான் என நினைத்து –

'ஹுனாலிக தஆ ஜகரிய்யா ரப்பஹு கால ரப்பி ஹப்லீ மின்லதுன்க துர்ரிய்யதன் தய்யிபதன்'

என்னுடைய இறைவனே! எனக்கு ஒரு அழகான குழந்தையைக் கொடு! என்று கேட்டார்கள். என்னுடைய துஆவை நீயே அங்கீகரிக்கிறவன் என்றும் துஆ செய்கிறார்கள்.

ஜகரிய்யா நபியவர்களுக்கோ அதிக வயது. அவர்களுடைய மனைவியோ பிள்ளைப் பேறு இல்லாதவர்கள். இந்த நிலையில் இயற்கைக்கு மாறானதைக் கேட்கிறார்கள். ஏனென்றால் அதே இடத்தில் இயற்கைக்கு மாறானதை அல்லாஹ் செய்து காட்டியிருக்கிறான்.

எனக்கொரு அழகான குழந்தையைக் கொடு! நீயே எனது துஆவை அங்கீகாரம் பண்ணக் கூடியவன். இவ்வளவுதான் கேட்டார்கள். பின்தொழுதார்கள். உடனே துஆ கபூலாகிவிட்டது. அவர்கள் தொழுதுக் கொண்டிருக்கும்போதே மலக்குகள் வந்து 'இன்னல்லாஹ யுபஷ்ஷிருக பி யஹ்யா'- அல்லாஹ் உங்களுக்கு யஹ்யா அவர்களைத் தருவதன் மூலம் நன்மாராயம் சொல்கிறான்.

ஔலியாக்களுடைய இடத்திலே போய் கேட்டால் பதில் கிடைக்கிறது. இயற்கைக்கு மாற்றமானது அங்கே நடக்கிறது. அப்படியானால் கராமத் மௌத்தானவர்களிடத்திலேதான் நடக்கிறது. மௌத்து கராமத்துக்கு ஷர்த்தாகும். ஏனென்றால் விலாயத்துக்கு மௌத்து ஷர்த்து. விலாயத் என்று சொன்னால் தானொரு மய்யித்து என்பது தெரிந்திருக்க வேண்டும். இப்போது மௌத்தானவர்களுக்கு கராமத் வராது என்று எப்படிச் சொல்லலாம்? புத்திசாலி அப்படிச் சொல்லவே மாட்டான்.

அல்லாஹ்வுடைய வேலைகளை 'தக்வீனி, தஷ்ரீஈ' என்று இரண்டு வகையாகப் பிரித்து முந்திச் சொல்லி இருக்கிறோம்.

இயற்கையாக நடத்திக் கொண்டு போவது தக்வீனி. மக்களுக்கு ஏவலாக கடமையாக ஆக்குவது தஷ்ரீஈ. இந்த வேலை முஃமினானவர்களுக்கு மட்டும்தான் செய்யவேண்டும்.

முஃமினானவர்கள் மௌத்தாகி விட்டால் அவர்களைக் குளிப்பாட்டி கபனிட்டு தொழுக வைக்க வேண்டும். இதையெல்லாம் செய்ய வேண்டுமென்று மக்களுக்கு இறைவன் கடமையாக்கி வைத்துள்ளான். இது முஃமினானவர்களுக்கு இறைவன் செய்கிற சங்கை. ஒரு கராமத் - வழமைக்கு மாற்றமான செய்கை.

மற்ற காபிரானவர்கள்இ மிருகங்கள் செத்துப் போனால் இது மாதிரி வேலைகளைச் செய்யுங்கள் என்று அல்லாஹ் கட்டளையிடுகிறானா? குளிப்பாட்ட வேண்டும், தொழ வைத்து அடக்க வேண்டும் இப்படிப்பட்ட சங்கைகளை மௌத்தாய்ப் போன முஃமின்களுக்குத் தான் அல்லாஹ் வைத்துள்ளான்.

மய்யித்துகள் அடங்கப்பட்டிருக்கும் கப்றுகளை மிதிக்கக்கூடாது. மௌத்தாய் போனவர்களை குறை கூறக் கூடாது. அவர்களைச் சங்கை படுத்த வேண்டும். இவையெல்லாம் வழமைக்கு மாற்றமாக இறைவனால் ஏற்படுத்தப்பட்டவை.

அப்போ கராமத் ஏற்பட வேண்டுமானால் மௌத்தாக வேண்டியது ஷர்த்து. மௌத்து கராமத்தை தடுக்காது. மௌத்தானவர்களுக்கு கராமத் இல்லை என்பது தவறு. மௌத்தானவர்களுக்குத்தான் கராமத் வரும.; ஏனென்றால் அது அல்லாஹுவினால் செய்யப்படும் செயல்.

அடுத்து ஈமான், ஷிர்க் என்றால் என்ன?

www.sufimanzil.org

ஈமான் என்று சொன்னால் மனதில் நம்புவது. தௌஹீது – ஏகத்துவத்தையும், ரிஸாலத்தையும் மனதில் நம்புவது. இந்த ஏகத்துவ

நம்பிக்கைக்கு நேர் மாற்றம்தான் ஷிர்க். தௌஹீதின் இடம் மனம். மனதில் அல்லாஹ் ஒருவன். அவனே வணக்கத்திற்குரியவன். அவனது தாத்திலும் ஸிபத்திலும் - இலட்சணங்களிலும் யாரும் கூட்டு இல்லை என்று மனதில் நம்புவது. இதுதான் ஈமான்

அல்லாஹுவுடைய தாத்திலோ ஸிபத்திலோ இணைவைப்பது- கூட்டுவைப்பது தான் ஷிர்க.; மனதில் கூட்டை நம்புவது! இறைவனின் தாத் தனக்குத் தானாகி உண்டாகி தன்னிலே நிற்கக் கூடியது. இதுபோல இந்த ஒலியுல்லாவும் தனக்குத்தானாகி உண்டாகி நிற்பவர் என்று சொன்னால் - நம்பினால் ஷிர்க்.

அல்லாஹுவின் இலட்சணங்களெல்லாம் தனக்குத் தானாகி உண்டாகி நிற்பவை. அவனின் செயல்களெல்லாம் அவன் தனது சுய சக்தியைக் கொண்டு செய்பவை. இதைபோல இன்ன அவ்லியாவுடைய செயல்களும் அவரது சுய சக்தியை கொண்டு செய்யப்படுபவை என்று நம்பினால் ஷிர்க் செய்து விட்டவனாவான். அல்லாஹுவோடு அந்த அவ்லியாவை ஒப்பாக்கி விட்டான்.

இறைவன் தனது சுயசக்தி கொண்டு செய்கிறான். அவன் கொடுத்த சக்தி கொண்டு ஒலியுல்லா செய்கிறார் என்றால் ஷிர்க்காகுமா? அவ்லியா மட்டுமல்ல இந்த உலகத்திலுள்ள எல்லா பொருட்களுமே அல்லாஹ்வினால் கொடுக்கப்பட்ட சக்தியைக் கொண்டுதான் செய்கிறார்கள். வேலைகளை அல்லாஹ்தான் செய்கிறான். சுயசக்தி கொண்டு மற்றவர்கள் செய்யவில்லை. இதுதான் முஃமினானவர்களுடைய நம்பிக்கை.

அவ்லியாக்கள் அல்லாஹ்வுடைய செயல்கள் வெளியாவதற்கு வழியாக இருக்கிறார்களே தவிர, அவர்கள் சுயமாக செயல்படவில்லை என்றுதான் நாம் சொல்கிறோம்.

மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடத்தில் ஜிபுரீல் அலைஹிஸ்ஸலாம் வந்து, 'நான் உங்களுடைய ஆண்டவனின் தூதர். நான் உங்களுக்கு ஒரு நல்ல அழகான குழந்தையைக் கொடுக்க வந்தேன் என்று சொல்கிறார்கள்'. இப்போது குழந்தையைக் கொடுப்பது யார்? ஜிபுரீல் கொடுத்தார்களா? அவர்கள் தன்பக்கம் சேர்த்து, நான் குழந்¦யைக் கொடுக்க வந்தேன் என்று சொல்லக் காரணமென்ன? இறைவன் என் வழியாக குழந்தையைக் கொடுக்கிறான் என்று காட்டுவதற்கு!

'ஆறு ஓடுகிறது' என்றால் ஆறா ஓடுகிறது? தண்ணீர் ஓடுவதற்கு ஆறு ஒரு வழியாக இருக்கிறது. அவ்வளவு தான். அல்லாஹ் குர்ஆனில் கியாமநாள் சிறுபிள்ளைகளையெல்லாம் நரைக்கச் செய்துவிடும் என்கிறான். நாளா நரைக்கச் செய்கிறது? அல்லாஹ்தான் நரைக்கச் செய்கிறான். நரைக்கு இந்த நாள் ஒரு காரணமாக இருக்கிறது அவ்வளவுதான். இது போன்றுதான் ஔலியாக்கள் பக்கம் செயல்களைச் சேர்த்துச் சொல்வதுமாகும்.

'மதலுல்லதீன யுன்பிகூன பீ ஸபீலில்லாஹ்........'

அல்லாஹ்வின் பாதையில் தர்மம் செய்கிறவர்களை ஒரு வித்துக்கு உவமானம் காட்டுகிறான் அல்லாஹ்! அந்த வித்து நூறு கதிர்களை உண்டாக்குகிறது. ஒவ்வொரு கதிரிலும் ஏழு வித்துக்கள் இருக்கிறது. இப்படியே சொல்லி வருகிறான். அப்படியானால் வித்துக்களா கதிர்களைப் படைக்கிறது? இறைவனேதான் படைக்கிறான். கதிர் உண்டாவதற்கு வித்து வழியாக இருப்பதால,; வித்தின் பக்கம் தனது செயலைச் சேர்த்து சொல்கிறான.; இப்படிச் சேர்ப்பதற்கு அரபியில் 'நிஸ்பத்தே மஜாஸி' எனச் சொல்வார்கள்.

மலக்குல் மௌத்து நப்சுகளை மௌத்தாக்குகிறார் - மரணமடையச் செய்கிறார் எனச் சொன்னால் மலக்குல் மௌத்தா இந்தச் செயலை செய்கிறார்? இல்லை. அல்லாஹ் இவர் வழியாகச் செய்கிறான். இவர் இறைவனால் கொடுக்கப்பட்ட சக்தியைக் கொண்டு செய்கிறார். ஆகவே இப்படி மௌத்தை மலக்குல் மௌத் பக்கம் சேர்த்துக்கச் சொல்வதால் ஷிர்க் வந்துவிடாது. மாறாக அவர் சுய இஷ்டப்படி – சுய சக்தியைக் கொண்டு அல்லாஹுடைய துணைவில்லாமல் செய்கிறார் எனச் சொன்னால் ஷிர்க் வரும்.

ஆகவே ஷிர்க் என்பது மனதில் - எண்ணத்தில்தான் இருக்கிறது.

வயிற்று வலியை –நோயை டாக்டர் குணமாக்கி விட்டார்இ மருந்து குணமாக்கியது எனச் சொல்கிறவன் முஷ்ரிக் ஆகிவிடுவானா? அது போலவே எனது நோயைக் குணப்படுத்துங்கள் என்று கேட்டால் அல்லாஹ்வினால் கொடுக்கப்பட்ட சக்தியைக் கொண்டு சுகமாக்குங்கள் என்றுதான் அர்த்தம்.

நன்மை, தீமை அனைத்தும் அல்லாஹ்விடமே இருக்கிறது என்று ஈமான் கொண்டவர்கள் நாம்! இப்படி ஈமான் கொண்டவர்கள் வலியுல்லா சுகமாக்கித் தந்தார்கள் என்று சொன்னால் அது நிஸ்பத்தே மஜாஸி ஆகும்.

அரபி இலக்கியங்களில் இவ்வாறு சொல்லப்படுகிறது, 'ஒருவன் மழை புற்பூண்டை முளைக்கச் செய்தது' என்று சொன்னால் சொன்ன ஆள் முஸ்லிமா? காபிரா? என்று பார்க்க வேண்டாம். முஸ்லிமாயிருந்தால் அது மஜாஸி ஆகும். ஏனென்றால் எல்லா காரியமும் அல்லாஹ்வடையது என்று நம்பிக்கை உடையவன் அவன். காபிரானால் மழையின் பக்கம் அவன் சேர்த்தது அவனது எதார்த்தமான நம்பிக்கையே ஆகும். இப்படி இருக்கும் போது முஸ்லிமுடைய வாயிலிருந்து வலீ செய்தார் என்று வருமானால் அது எப்படி ஷிர்க்காகும்.

எனவே நமது நாதாக்கள் ஔலியாக்களை நேரடியாக அழைத்து வேண்டுதல் செய்கிறார்கள்.

'யா ஸாஹிபன் நாகூரி குன்லீ நாஸிரீ.....' நாகூர் ஆண்டவர்களே! எனக்கு உதவி செய்யுங்கள். என் கண்களுக்குப் பார்வையைக் கொடுங்கள். நீண்ட ஆயுளைக் கொடுங்கள் என்றெல்லாம் நேருக்கு நேர் கேட்கிறார்கள்.

நாகூர் ஆண்டவரே! அல்லாஹ்விடமிருந்து எனக்கு கண்பார்வை கொடுங்கள் என்றோ, அல்லாஹ்வே நாகூர் ஆண்டவர் பொருட்டால் எனக்கு கண் பார்வை கொடு என்றோ கேட்கவில்லை.

இப்படிக் கேட்பவர்களும் முஃமினாச்சே! அவர்கள் ஷிர்க்கைச் செய்து விட்டார்களா? ஆகவே இது மஜாஸி ஆகும். அப்படி இல்லாமல் இதுவும் ஷிர்க் என்றிருக்குமானால் உலகத்தில் எந்தக் கருமமும் நடக்காது. வீட்டில் போய் சோறு தா! என்று கேட்டால் அதுவும் ஷிர்க் தான்.

அல்லாஹ்வுடைய செயலைப் போன்று இன்னாருடைய செயல் இருக்கிறது என்று நம்பினால் இறைவனைப் போல இவரும் சுயசக்தி கொண்டு செய்கிறார் என நம்பினால் ஷிர்க்காகும். ஒருவனுக்கு முன்னால் கை கட்டி நிற்கிற போது கை கட்டி நிற்பவன் எதிரே இருப்பவனைப் பற்றி இவன் இறைவனைப் போல் சக்தியும்இ செயலுமுடையவன் என நம்பினால் மாத்திரமே ஷிர்க் உண்டாகும். ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்

ஆகவே சுன்னத் வல் ஜமாஅத்தின் அகீதாவை – கொள்கையை நல்லபடித் தெரிந்து கொண்டு அல்லாஹ் நடத்தக் கூடிய எல்லா செயல்களையும் கண்காட்சியாக காண வேண்டும் என்றால்தான் முக்தி அடைய முடியும.; அல்லாஹ் நம் ஒவ்வொருவருக்கும் முக்தியடையக் கூடிய வழியைக் காட்டுவானாக! அல்லாஹ் அவனது நூரைக் கொண்டு கல்பை நிறைக்கச் செய்வானாக!

அவனது திருக்காட்சியையும், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய ஷபாஅத்தையும் பெறச் செய்வானாக! வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

---

**ஒரு மாலைப் பொழுதில்......**

(அள்ளக் குறையா ஞானப் பேரமுதை தம்மிடம் வருவோர்க்கெல்லாம் வரையாது வாரி வழங்கும் ஞானப் பெருவள்ளல் ஷெய்குனா ரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் ஒரு நாள் மாலைப் பொழுதினில் பொழிந்த போதனை மழையின் சில துளிகள் ....!)

மூன்று காரியங்கள் ஒரு மனிதனிடத்தில் குடி கொண்டு விட்டால் அவன் நாசமடைந்து விடுவான் 1 அடிமைப்படுத்தும் உலோபித்தனம் 2. பேராசை 3. அகம்பாவம்.

அடிமைப்படுத்தும் உலோபித்தனம் என்றால் கஞ்சதனத்திற்கு இம்மனிதன் அடிமையாகி விட்டானென்று பொருள். கஞ்சத்தனம் ஒரு மனிதனை அதிகமாக ஆக்ரமித்துக் கொள்ளுமானால் அவன் நாசப்பட்டு விடுவான். கஞ்சத்தனம் ஒரு மனிதனில் மிகைத்து நிற்குனால் அவன் கண்டிப்பாக நஷ்டவாளனாகி விடுவான்.

பேராசை: தேவையற்ற அதிக அளவிலான ஆசையானது மனிதனை சீர்கெடச் செய்து விடுகிறது. தனது மனோ இச்சைக்குக் கட்டுப்பட்டு அவன் வழி தவறி விடுகிறான்.

அகம்பாவம்: தன்னை பெரியவனாக எண்ணி தனக்கு மற்றவர்கள் கட்டுப்பட வேண்டும், மரியாதை செய்ய வேண்டும், மதிப்புக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல்.

மற்றவர்களிடமிருந்து மரியாதையை இவர்கள் எதிர்பார்க்கிறபோது மற்றவர்கள் இவர்கள் எதிர்பார்க்கிற அளவுக்கு மரியாதை செய்யாதபோது தம்மை உதாசீனப்படுத்துவதாக எண்ணி அவர்கள் மீது கோபம் கொள்வார்கள். இந்தக் குணம் மிகவும் மோசமானது. மனிதனை இழி நிலை அடையச் செய்கிறது.

இப்லீஸ் அல்லாஹ்வின் சன்னிதானத்தில் செல்வாக்குள்ளவனாகவும், கல்வி அறிவு பெற்றவனாகவும்இ கௌரவம் உடையவனாகவும் இருந்தான் எனினும் அவன் காபிராகிப் போனது மட்டுமின்றி இறுதிநாள் வரை சபிக்கப்பட்டவனாக ஆகிவிட்டானே அது ஏன்?

அல்லாஹ்வின் கட்டளையை ஏற்க மறுத்தான். தானே பெரியவனென்று பெருமையடித்தான். அபா வஸ்தக்பர.... என அவன் காபிராகிப் போன காரணத்தை இறைவன் குர்ஆனில் சுட்டிக் காட்டுகிறான்.

அன கைருன் மின்ஹு.... நான் ஆதமை விட சிறந்தவன் என்று இறைவனிடமே தர்க்கம் செய்தான். தான் பெரியவன் தனக்குத்தான் உயர்ந்த அந்தஸ்து தர வேண்டும். மதிப்பு தர வேண்டுமென்ற அகம்பாவ எண்ணம் அவன் கல்பில் உண்டானது.

இப்படியொரு கர்வமான நினைப்பு அவனுக்கு ஏற்பட்டதால் ஆதம் நபிக்கு சுஜூதுச் செய்யச் சொன்னபோது அவன் மறுத்து விட்டான். அல்லாஹ்வுடைய ஆணையை ஏற்றுக் கொள்ள அவனது கல்பு இடம் தரவில்லை.

நெருப்பினிலே படைக்கப்பட்ட நானல்லவா உயர்ந்தவன். எனவே எனக்குத்தான் கண்ணியம் தரப்பட வேண்டும் என குதர்க்க வாதம் புரிந்தான். இறை கட்டளையை ஏற்றுக் கொள்ள மறுத்து சர்ச்சை செய்த காரணத்தினால் அல்லாஹ் என்ன தண்டனை கொடுத்தான்?;.

வ கான மினல் காபிரீன் அவன் காபிராகிப் போனான் என இறைவன் அறிவித்தான். இறைவனை வணங்கமாட்டேன் என மறுத்தானா? அல்லது வேறு குப்ரான காரியங்களைச் செய்தானா? இறைவனுக்கு இணை வைக்கின்ற செயல்கள் எதையும் செய்தானா? எதுவுமே இல்லை.

அவனுடைய கல்பில் ஆதம் நபியவர்களைப் பற்றித் தாழ்வான எண்ணம் ஏற்பட்டது. இதனால் தானே பெரியவன். தனக்கே உயர் அந்தஸ்து தரப்பட வேண்டுமென வாதம் செய்தான். இதுவே அவன் செய்த பெரிய பாவம். அவனுடைய அகம்பாவமே அவன் செய்த கொடிய குற்றம். தலைமைத்தனம் வேண்டுமென்ற பிடிவாதமான குணத்தினால் அவன் காபிராகிப் போனான்.

தலைமைத் தனத்தை விரும்புவர்களுக்கு அடுத்து உடனே பொறாமைக் குணம் ஏற்படும்.; தலைமைத் தனத்தை ஆசைப்பட்ட ஷெய்தான் ஆதம் நபியவர்கள் பேரில் பொறாமை

கொண்டான். மண்ணால் படைக்கப்பட்டவருக்கு பெரிய பதவி ஏன்? என்ற பொறாமை அவனுக்கு ஏற்பட்டது.

இப்படி முதலில் பொறாமை ஏற்பட்டு, அடுத்து அவர்களைக் கெடுக்க வேண்டுமென்ற ஆசை வரும். இல்லாததை இட்டுக் கட்டி நாலு பேரிடம் சொல்லி அவர்களை மோசமானவர்கள் என்று காட்ட வேண்டும் என கல்பில் தோன்றும்.

ஆதம் அலைஹிவஸல்லம் அவர்களுக்கு கிடைத்த அந்தஸ்துகளைக் கண்டு பொறாமை பட்டு அவர்களைக் கெடுக்க எண்ணினான்; ஷெய்தான் அவர்கள் அல்லாஹ்வுக்கு மாறு செய்ய வேண்டுமென்று பல சதிகளைச் செய்தான்.

ஆக அகம்பாவத்தின் தந்தை பொறாமை என்றால் கெடுக்கும் புத்தி அதன் பிள்ளையைப் போன்றது.

மோசமான இந்த சிந்தனைகள் எல்லாம் தலைமைத் தனத்தையும், வீண் கௌரவத்தையும் மனிதன் ஆசைப்படுவதால் உண்டாவதாகும்.

---

**ஞானப் பேரமுதிலிருந்து சில துளிகள்.**

அல்லாஹ்வுக்கு பல்வேறு வகையான ஸிபத்துகள் - இலட்சணங்கள் உண்டு. அவற்றுள் முக்கியமானதும், பிரதானமானதுமான இலட்சணம் ரஹ்மத் - கிருபை. ரஹ்மான் என்றொரு பெயரும் இறைவனுக்கு உண்டு. நல்லவர்களுக்கும், தீயவர்களுக்கும் கிருபை செய்பவன் அவன். இந்த இலட்சணத்தினாலேயே சர்வ சிருஷ்டிகளும் வெளியில் வந்தன. மற்ற கஹ்ஹார் போன்ற இலட்சணங்களால் சிருஷ்டிகள் வெளியில் வராது அப்போது சிருஷ்டிகள் கோலமெடுத்து வெளியில் வருவதற்கு காரணம் ரஹ்மான் என்ற இலட்சணம்.

ஆனால் எந்த சிருஷ்டி வந்தாலும் அதற்கு – அவை வெளிவருவதற்கு ஒரு வழியை இறைவன் அமைத்துள்ளான். அதுதான் நூரே முஹம்மதிய்யா! நாயகம் சொன்னார்கள் 'நான் அல்லாஹுவின் நூரில் நின்றுமுள்ளவன். எல்லா சிருஷ்டிகளும் எனது நூரில் நின்றுமுள்ளவை'.

நாயகம் அல்லாஹ்வின் நூரிலிருந்து வந்தார்கள். மற்றவை ரசூலின் ஒளியிலிருந்து வந்தன. நாயகமவர்கள் நேரடியாக இறைவனிடம் செல்வார்கள். நாம் அவர்கள் வழியாக மூலமாகத்தானே போயாக வேண்டும்.

எல்லா வஸ்துக்களுமே அல்லாஹ்விடம் குடிகொண்டிருக்கிற கிருபைக் குணத்தினால்தான் வந்தன. வெளி வந்தவை அனைத்தும் மீண்டும் அதே கிருபையைக் கொண்டே நிலைபெறும். எனவே ஒவ்வொரு வஸ்துவுக்கும் இரண்டு வகையான நி:மத்துக்களை வழங்கி உள்ளான் இறைவன்.

1. இல்லாமையிலிருந்து உண்டாவது.

2. உண்டானவைகள் நிலைப்பெற்றிருப்பது.

இல்லாமையிலிருந்து ஒரு பொருள் வெளிவருவது இறைவன் வழங்கிய ரஹ்மத். அப்போது இந்த கிருபை என்பது மிகப்பெரிய நிஃமத் - பாக்கியம். அடுத்து அவைகளுக்கு உஜூதைக் கொடுப்பதம் ஒரு பெரும் பாக்கியம்.

சிருஷ்டிகளின் உஜூது என்றால் ஒரு வஸ்து, வஸ்து என்று ஆவது. இது ஒவ்வொன்றினுடையவும் உஜூது. இந்த வஸ்து உண்டானது ரஹ்மானுடைய கிருபையினாலே – அருளினாலேதான் அல்லவா? இந்தக் கிருபை இல்லையென்றால் அது உண்டாகாது. ஆகவே இது இறைவன் கொடுத்த நிஃமத்துகளில் பெரிய நிஃமத்.

உஜூதைக் கொடுத்தபின் கியாமைக் கொடுக்க வேண்டும். விதையிலிருந்து பயிர் முளைக்கிறது. இல்லாமையிலிருந்து உண்டாகிறது. உண்டானதன பிறகு அது நிலைத்திருப்பது கியாம். விதை பயிராக முளைத்த பின் தண்ணீரும், உரமும் போனால்தான் அது நிலையாக நிற்கும.; நிலையாக நிற்க ஆகாரம் தேவை.

அப்படியானால் இல்லாமை என்ற நிலையிலிருந்து உருப் பெற்றதும் அவை இறையோனிடம் கையேந்துகின்றன, 'இறைவா எங்களை நிலைப் பெற செய். எங்களுக்க ரிஸ்கு கொடு.' இறைவன் தனக்கிருக்கிற ரஹ்மான் என்ற ஸிபத்தினால் அவன் எல்லாருக்கும் ரிஸ்கு கொடுக்கிறான். கிருபை செய்கிறான். ஆதாரமாக இருக்கின்ற உணவைத் தருகிறான்.

ஆனால் இந்த உணவை எப்படி அவன் தருவான?;. யார் மூலமாக சிருஷ்களுக்கு உஜூதைக் கொடுத்தானோ அவர் மூலமாகவே இந்த ரிஸ்கையும் வழங்குகிறான. இறைவன் நேரடியாகவே சிருஷ்டிகளிடம் வழங்கி விடுகின்றானா? இல்லை. அதனால்தான் நாயகமவர்கள் கூறினார்கள், 'அல்லாஹ் கொடுக்கிறான், நான் பங்கு வைக்கிறேன்.'

இல்லாமையிலிருந்து வெளி வந்ததும் யா ரஸ்ஸாக் எங்களுக்கு உணவு கொடு! ரிஸ்க் கொடு! என ஒவ்வொன்றும் கேட்கின்றன. இறைவன் தனது கிருபை காரணமாக நல்லவன், பொல்லாதவன் என்ற பாகுபாடு இல்லாமல் எல்லோருக்கும் கொடுக்கின்றான். அதை நேரடியாகத் தராமல் ரசூலுல்லாஹ்விடம் மொத்தமாக கொடுத்து, அவர்கள் யார் யாருக்கு எவ்வளவு தேவை என்னென்ன வகையான ரிஸ்கு தேவை என்பதைப் பார்த்து அந்தப்படி அந்தந்த வகையை அந்தந்த அளவை கொடுக்கின்றார்கள்.

ரிஸ்கு எப்படிப்பட்டது? அதை யாருக்குக் கொடுக்க வேண்டும்?. ஏன் கொடுக்க வேண்டும?;. என்பவையெல்லாம் நாயகமவர்களுக்குத் தெரியும். ஒரு ஆளுக்குக் கொடுக்க வேண்டியதை மற்றொரு ஆளுக்கு கொடுத்துவிட்டால் அது வீணாகிவிடும் என்பதுவும் அவர்களுக்குத் தெரியும்.

இந்த ரிஸ்கு எவ்வளவு காலத்துக்கு வரும் என்பதுவும் அவர்களுக்குத் தெரியும. எல்லாம் தெரிந்த ஏக இறைவனின் அருமைத் தூதரல்லவா? அவர்களுக்குத் தெரியாதது ஏதுமில்லை.

படைப்பினங்கள் அனைத்தும் அவர்களின் காரணமாக – அவர்களின் வழியாக வந்தன.வந்ததினால் இவர் எப்படி இரு;தார்? எப்படி வந்தார்? எப்போது வந்தார்? என்பனவெல்லாம் அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்களைவ விட்டு எந்தவொரு வேலையும் நடக்காது.

இப்பொழுது மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான நி..மத்துகளும் ரசூலுடைய வழியாக நடக்கும்போது சிருஷ்டிகளுடைய வகை என்ன? அவை எதற்காக படைக்கப்பட்டன? எந்த நோக்கத்திற்காக உண்டாக்கப்பட்டன?. அவைகளுக்கு எப்போது? என்ன ரிஸ்கு கொடுக்க வேண்டும?. ஆகிய எல்லா விவரங்களும் அவர்களுக்குத் தெரியும்.

சிருஷ்டிகள் எதிலிருந்து வந்தன. தோற்றம் எங்கே? அல்லாஹ்வின் அறிவில் - அ..யான தாபிதாவில் - அல்லாஹுவின் சமூகத்தில் எங்கே இருந்தனர்?. இப்போது எங்கே வந்தார்?. எங்கே போவார்?. எப்படிப் போவார்? என்பவைகளும் அவர்களுக்குத் தெரியும்.

இறைவனுக்கும் எல்லாம் தெரியும். ரசூலுக்கும் எல்லாம் தெரியும் எனச் சொல்லும்போது இருவருடைய அறிவையும் சமமாக்கி விட்டோமா? இறைவனுடைய அறிவைப் போல ரசூலுக்கோஇ வேறொருவருக்கோ இருக்கிறது அல்லது ஸிபத் இருக்கிறது என்று சொன்னால் இரண்டையும் சமமாக்கியதாக ஷிர்க் - இணைவைத்தல் உண்டாகும். அப்படி நம்பினால் ஷிர்க் உண்டாகும்.

ரசூலுல்லாஹ்வின் அறிவு இறைவனுடைய அறிவுக்கு சமமானதல்ல. இறைவனுடைய அறிவு கட்டுப்பாடு இல்லாதது, எல்லையற்றது, விரிந்தது, ஸ்திரமானது, பூர்விகமானது. பிறருக்கு அறிவை அவனே வழங்குகிறான்.

ரசூலின் அறிவு பூர்வீகமானது அல்ல! அது எவ்வளவு அதிகமானாலும் சுயமானதல்ல. அத்தனையும் இறைவனால் வழங்கப்பட்டது. அதாயீ – நன்கொடையாக இறைவனால் வழங்கப்பட்டவை. ரசூலும் ஒரு சிருஷ்டியாக

இருப்பதனால் அவர்களுடைய அறிவு, தாத்து, ஸிபாத்து எல்லாம் எல்லைக்குட்பட்டது. ஆனால் இறைவனுடையது எல்லைகளில்பாற்பட்டதல்ல. இப்போது இருவருடைய அறிவும் ஒன்றாகுமா?

அல்லாஹுவின் ஸிபத் தனக்குத்தானே உண்டாகி, யாராலும் கொடுக்கப் படாமல் - தன்னிலேயே நிற்கிறது. அதுபோல இன்னாருடைய ஸிபத்தும் சுயமாக யாராலும் கொடுக்கப்படாமல் உண்டாகியது என்று கூறினால் ஷிர்க் உண்டாகும்.; நாம் அப்படிச் சொல்லவில்லையே.

நாயகமவர்களுடைய அறிவை, அது இறைவனால் கொடுக்கப்பட்டதாகத்தான் சொல்கிறோம். ஆனால் அதனுடைய அளவு நமக்குத் தெரியாது. கொடுத்தவனுக்கும், பெற்றுக்

கொண்டவர்களுக்கும் மட்டுமே அதைப்பற்றித் தெரியும். ஆனாலும் இரண்டு பேருடைய அறிவும் சமமானதல்ல.

உதாரணமாகச் சொல்வதனால் ஹலரத் இமாம் பூஸரி தமது புர்தா ஷரீபில் சொல்கிறார்கள்:

வ இன்ன மின் ஜூதிக துன்யா வ ளர்ரதஹா

வ மின் உலூமிக இல்முல் லௌஹி வல்கலமி

நாயகமே! உங்களுடைய தர்மத்தில் நின்றுள்ளதுதான் இந்த பூமியும் ஆகிரமும். உங்கள் இல்மில் நின்றுமுள்ளதுதான் லௌஹு, கலாமுடைய இல்மும்.

இப்படிப்பட்ட மனிதன் ஏன் படைக்கப்பட்டான்?. அல்லாஹ்வை வணங்குவதற்காக. மனிதன் ஓயாமல் அல்லாஹ்வை இபாதத்துச் செய்கின்றபோது அவன் இறைவனது பக்கம் நெருங்குவான்.

இப்படி இறைவனை நெருங்குகிறபோது அவன் தனது ஸிபத்துகளை இம்மனிதனுக்கு கொடுப்பான். எப்போது கொடுப்பானெ;னறால் மனிதன் தனது ஸிபத்தை விட்டு விடுகிறபோது – தனது செயல்களை ஒழித்து விடுகிறபோது கொடுப்பான். இப்படி சிபத்துகளை செயல்களை விட்டுவிடுவதற்குப் பெயர்தான் ஃபனாஉ.

நாம் என்பது ஒரு புதிய பொருளல்ல. அது போல நமது செயல்களும் நமக்குச் சொந்தமானது அல்ல. நாமும் நமது பொருட்களும் எல்லாம் இறைவனுக்கு உரியது. எனவே இறைவன் சென்னான், 'நான் உங்களையும் படைத்தேன். உங்கள் செயல்களையும் படைத்தேன்' நாம் என்ன சொல்கிறோம்?. நான் செய்தேன். இது எனது செயல், என செயல்களை நம் பக்கம் சேர்த்துக் கூறுகிறோம். நாம் எனப்படுவது எப்பவும் வரக் கூடாது.

பஞ்சுஇ நூலுடைய கோலத்தில் வெளியானது. பிறகு துணியுடைய கோலத்தில் வெளிவந்தது. நூலுடைய கோலத்தில் வெளிவந்ததும் நூல், நான் நூல் என்கிறது. துணியுடைய கோலத்தில் வந்ததும் துணி, நான் துணி என்கிறது. ஆனால் பஞ்சு தான் இப்படியெல்லாம் வெளியாயிருக்கிறது. நூலானாலும், துணியானாலும் அவை பஞ்சு இல்லை என்றாகி விடுமா? பஞ்சின் கோலங்களே நூல்இ துணி எல்லாம்!

அதுபோல அல்லாஹ்தான் மனிதனுடைய கோலத்தில் வெளியானான் அப்படி வெளியானதும் மனிதன், 'நான் மனிதன், இது எனது செயல்' எனச் சொல்கிறான். அல்லாஹ் தனது செயலை இவனில் நடத்தாட்டியபோது தான் செய்ததாக சொல்கிறான் மனிதன். ஆனால் மனிதனையும்இ அவனது செயலையும் படைத்தது இறைவனே! இதை அனுபவப்பூர்வமாக நாம் பார்க்கவில்லை.

இறைவனையே இபாதத் செய்து கொண்டிருந்தால் இவைகளெல்லாம் இவனுடைய செயல்களே என கண்காட்சியாகக் காண்பான். தனது எனவும், தனது செயல் எனவும் எதையும் காணமாட்டான். இதற்குப் பெயர்தான் ஃபனாவுல் அஃப்ஆல் செயல்கள் இல்லாது போய் விடுவது. அடுத்து தன்னையே இழந்து விடுவது.

இப்பொழுது தனது கட்டுப்பாடோ, எல்லைகளோ அற்ற ஸிபாத்துக்களை அல்லாஹ், இந்த மனிதனிடத்தில் போடுவான். எப்படி ஹலரத் உமர் அவர்கள் தொலை தூரத்து நஹவாந்தில் போரிட்டு கொண்டிருந்த சாரியாவை கூப்பிட்டு, 'சாரியா மலை! சாரியா மலை!' என்றார்களே! அப்போது மதீனாவிலிருந்து வெகு தொலைவிலுள்ள நஹவாந்தை கண்காட்சியாகக் கண்டு சப்தம் கொடுத்தார்களே இது இறைவன் கொடுத்த ஸிபத்.

சாரியாவுக்கு இறைவன் கொடுத்த கேள்வியும் இப்படிதான் மதீனாவிலிருந்து உமர் நாயகம் கொடுத்த சப்தத்தை நஹாவந்திலிருந்த சாரியா செவியேற்கிறார். இறைவனுடைய பார்வைக்கும், கேள்விக்கும் தடையோ, காலமோ இல்லை. உமர் கத்தாப் தனது பார்வையை இழந்து இறைவனின் பார்வை கொண்டு கண்டார்கள். சாரியா தனது கேள்வியை இழந்து இறைவனுடைய கேள்வி கொண்டு கேட்டார். அதற்கு தூரம் தொலைவு இல்லையே.

இப்படி நம்முடைய வேலைகளை அவனிடம் ஒப்படைத்து விட்ட பிறகு நமக்கு அவன் வலீயாக-நம்முடைய காரியங்களை நடத்தாட்டுபவனாக அவன் ஆகி விடுகிறான். அல்லாஹ் நமது கார்டியனாக-பொறுப்பாளனாக ஆகி விடுகிறான.; பிறகு இவனுடைய காரியங்களை அவன் எடுத்துக் கொண்டதுபோல தனது காரியங்களுக்காக இவனை வலீயாக அவன் ஆக்குகிறான். ஆண்டவன் இவனை தனது கலீபாவாக- பிரதிநிதியாக எடுத்துக் கொள்கிறான்.

பாவா ஆதம் நபியவர்களிடம் அமைந்திருந்த தன்மைகளை அவர்களுடைய பிள்ளைகளிடமும் அல்லாஹ் அமைத்திருக்கிறான். இந்த பிள்ளைகளில் இருந்துதான் வலிமார்களை அல்லாஹ் உண்டாக்கினான்.

வலிமார்கள் யார்? அவர்களை எப்படி அறிவது? அல்லாஹ் சொல்கிறான் 'அலா இன்ன அவ்லியா அல்லாஹி லா கௌபுன் அலைஹிம் வ லா ஹும் யஃஸனூன்'.

'அறிந்து கொள்! நிச்சயமாக அல்லாஹ்வுடைய ஔலியாக்களுக்கு பயமில்லை. அவர்கள் கவலைபடவும் மாட்டார்கள்.

பயமும் கவலையும் எப்போது உண்டாகும்? தனக்குண்டான நிஃமத்துகளில் ஒன்று குறைந்துவிடும். தனது பொருட்களில் ஒன்று காணாமல் போய் விடும் என எதிர்பார்த்தால் பயம் உண்டாகும். ஆனால் நான் என்பது இல்லை என்றாகி விடும்போது அச்சமும், கவலையும் எப்படி வரும்?

பொருட்களை நம் பக்கம் சேர்க்கிறபொழுது அவை போய்விட்டதென்றால் கவலை ஏற்படுதல். ஆனால் ஔலியாக்கள் ஏதொன்றையும் தம்பால் சேர்க்கமாட்டார்கள்.



www.sufimanzil.org

எல்லாவற்றையும் இறைவனுக்காக அற்பணித்தவர்கள். அவர்களிடத்தில் இறைவனன்றி வேறொன்றுமேயில்லை.

இந்த நிலையில்இ தனது கட்டுப்பாடோ எல்லையோ இல்லாத ஸிபத்துக்களை அவரில் வெளியாக்குகிறான். இப்போது வழக்கத்துக்கு மாற்றமான அற்புதமான காரியங்கள் நடக்கும்.

வழக்கத்தக்கு மாற்றமான காரியங்கள் நபிமார்களுடைய விஷயத்தில் நடைபெறுமானால் அதற்கு முஃஜிஸாத் என்றும், ஒலிமார்களில் நிகழுமானால் அதற்கு கராமத் என்றும் சொல்லப்படும்.

வல்லாஹு அலா குல்லி ஷையின் கதீர்.

'அல்லாஹ் எல்லா வஸ்துக்களின் மீதும் சக்தி பெற்றவனாக இருக்கிறான்' என்று குர்ஆனில் வருகிறது. இதை வைத்து இறைவன் எல்லா வஸ்துக்களின் சக்தி பெற்றவனென்றால் பொய் சொல்வதற்கும் சக்தி பெற்றவன் என்று வஹாபிகள் சொல்கிறார்கள்.

இறைவன் பொய் சொல்வான் என்பதை ஏற்றுக் கொள்ளும்போது அவன் உண்மையாளன். அவனுடைய வார்த்தைகள் உண்மையானவை. என்பதை எப்படி நம்ப முடியும்?;.

பொய் என்ற குணம் குறையைச் சேர்ந்தது. பொய் சொல்கிறவன் என ஒருவனைப் பார்த்துச் சொன்னால் வருத்தப்படுவான் இல்லையா? சாதாரண மனிதனே தன்னை பொய் சொல்பவன் என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்ளாதபோது, அல்லாஹ்வை பொய் சொல்ல சக்தி பெற்றவன் என வஹ்ஹாபிகள் கூறுகின்றனர்.

குறைவைத் தரும் இலட்சணங்கள் அல்லாஹ்வின் தாத்துக்கு ஏற்றமானதல்ல.குறைவுகளை விட்டு அவன் பரிசுத்தமானவன். எனவே பொய்யுரைப்பது அவனுக்கு 'முஹால்'. அவனுடைய ஹக்கில் பொய்க் குணம் அசம்பாவிதமானது. அசம்பாவிதமான குணங்களில் இறைவனின் சக்தி வெளிப்படாது.

மனிதன் பொய் சொல்ல சக்தியைப் பெற்றிருந்து இறைவனோ பொய் சொல்ல மாட்டான் என்றால் இறைவனுடைய சக்தியைவிட மனிதனுடைய சக்தியானது மேம்பட்டு ஆண்டவனுடைய சக்தி குறைந்ததாக ஆகிவிடாதா? எனக் கேட்கின்றனர்.

பொய் எனப்படும் குறையைச் சார்ந்த குணம் அல்லாஹ் அளவில் கொழுகவில்லை என்பதற்காக அவனுடைய சக்தி குறைந்து விட்டதாக அல்லது பரிபூரணத்துவமற்றதாக ஆகிவிட்டது எனச் சொல்ல முடியாது. ஆண்டவனுடைய குணமனைத்தும் பரிபூரணத்துவம் பெற்றவைகளாகும்.

சில பொருட்கள் சில குறைவைச் சார்ந்த குணங்களை ஏற்றுக் கொள்ளாது. மின்சார இஸ்திரி பெட்டிகளில் சூடு கையைத் தாக்காமல் இருப்பதற்காக ஒரு பொருளை கைப்பிடியாக

அமைத்துள்ளார்கள். அதில் சூடு தாக்காது. அதற்காக நெருப்புக்கு சுடுகிற சக்தி இல்லையெனச் சொல்ல முடியுமா?

இதுபோல குறைவை உடைய பொய்யை இறைவன் சொல்லமாட்டான் என்பதற்காக அவன் சக்தி குறைந்தவனென்று கூறமுடியாது. எனவே அல்லாஹ் பொய் சொல்ல சக்தி பெற்றவன் எனச் சொல்வது சரியல்ல. அகீதாவைப் பற்றி சரியான அறிவற்றவர்கள்தாம் அப்படிச் சொல்வார்கள்.

'வல்லாஹு அலா குல்லி ஷையின் கதீர்' எல்லா வஸ்துக்களின் மீதும் அல்லாஹ் சக்தி பெற்றவனென்று கூறினால் அதற்கு அர்த்தமென்ன? அவனால் நாடப்பட்ட எல்லா வஸ்துக்களின் மீதும் அவன் சக்தி பெற்றிருக்கிறான் என்பது அர்த்தமாகும்.

இறைவனுடைய நாட்டம் எங்கே சென்று கொழுகுகிறதோ அதற்கெல்லாம் சக்தி பெற்றவன் என அர்த்தம். பொய் போன்ற குறைவான குணங்களில் அவனுடைய எண்ணம் கொழுகாத காரணத்தினால் அவனுடைய சக்தி எனப்படும் இலட்சணம் குறைவு பட்டதாக ஆகி விடுவதில்லை. இறைவனுடைய ஸிபத்துகள் குணங்கள் எல்லாம் பரிபூரணத்துவம் பெற்றவைகளாகும்.

இபாதத்துகளை இரண்டாக பிரிக்கலாம். முதலாவது செய்தல் தொழுவது, ஜகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது போன்றவை இதில் சேருகிறது. இரண்டாவது விலக்குதல். நோன்பு விலக்கும் வகையில் உள்ளது. ஒரு வேலையைச் செய்வது எளிதானது, விடுவது கொஞ்சம் சிரமமானது.

செய்வதும், விலக்கவதும் இறைவனுக்காக - இறைவனுடைய லிகாவுக்காக என்று செய்தாலே அந்த அமல் சுத்தமானதாக – கலப்பற்றதாக ஆகும். நாம் செய்யக்கூடிய இபாதத்துகள் எல்லாம் நமக்காகத்தான் செய்கிறோம். நாம் இபாதத்துச் செய்யாமல் இருப்பதனால் அல்லாஹுவுக்கு எதுவும் குறைந்து விடுகிறதா? என்றால் எதுமில்லை.

அப்படியானால் அல்லாஹ்வுக்காகச் செய்தோமென்றால் அவனுடைய அஸ்மாக்கள் நம்மில் வெளியாவதற்காகச் செய்தோம் என்று அர்த்தம். எனவே செய்கின்ற அமல்களின் பிரதி பலன் நமக்குத்தான் கிடைக்கின்றன. அல்லாஹ்வுடைய அஸ்மாக்கள் நம்மிடத்தில் வெளியாகிஇ அவனுடைய பிரதிநிதியாக நாம் ஆக வேண்டுமென்ற அசல் நோக்கத்திற்காக அமல் செய்ய வேண்டும்.

இப்படியான அசல் நோக்கத்திற்காக நாம் அமலைச் செய்யாவிட்டால் அதனால் அசல் நோக்கம் நிறைவேறாது. அசல் நோக்கத்திற்காக செய்யப்பட்ட அமலாகவும் ஆகாது.

தொழுபவர்களுக்கு நரகம்.; தொழுகையை மறந்து முகஸ்துதிக்காக தொழுகிறவர்கள் அப்படிப்பட்டவர்களுக்கு நரகம் என இறைவன் சொன்னான். தன்னை தொழுகையாளி எனச் சொல்வதற்காக வேண்டித் தொழுதால் நோக்கம் தவறி விடுகிறது. அப்போது அசல் இடத்துக்கு போக முடியாது. இறைவனுடைய சமூகத்தை விட்டு தூரமாகிப் போய் விடவேண்டியது வரும்.

அல்லாஹுவுடைய திருச் சன்னிதானத்தை விட்டு தூரப்பட்டு போய் விடுவது அதாப் - தண்டனை. இறைவனுடைய சமூகத்திற்குச் செல்வது தவாப் - கூலி.

தொழுதவர்கள் ஜெயம் பெறுவார்கள் என அல்லாஹ் சொல்லவில்லை. தொழுகையில் உள்ளச்சத்துடன் இருந்தவர்கள் ஜெயம் பெற்றார்கள்.

'கத் அப்லஹல் முஃமினூனல்லதீன ஃபீஸலாதிஹிம் காஷிஊன்' நிச்சயமாக! முஃமினானவர்கள் ஜெயம் பெற்றார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்களென்றால் அவர்கள் தங்களுடைய தொழுகையில் உள்ளச்சத்துடன் இருப்பார்கள் என்றுதான் இறைவன் சொல்கிறான்.

---

**அவ்லியாக்களை நாடுவதால் அல்லல்கள் அகலும் !**

*ஷெய்குனா எழுதிய ஒரு மறுப்புக் கட்டுரை*

அவ்லியாக்களை நாடுவதால் அல்லல்கள் அகன்றிடுமா? என்ற தலைப்பில் 18-12-70 தினபதி யில் மௌலவி பி.எம்.சாகுல் ஹமீது எழுதிய கட்டுரையைப் பார்த்தேன். அதில்

(1) முஸ்லிம்கள் சிலர் தங்கள் கருமங்களை பூர்த்தி செய்யும் பொருட்டு தர்காக்களை நாடிச் சென்று அங்கு தரிசிக்கின்றனர்.

(2) இப்படிச் செய்வதால் தீராத நோய்கள் தீர்ந்து விடுகின்றதென்றும், தங்கள் கருமங்கள் நிறைவேறுகின்றன என்றும் நம்புகின்றனர்.

(3) வசீலா (சிபாரிசு) என்ற குர்ஆனில் வரும் சொல்லை அடிப்படையாக வைத்து, அவ்லியாக்களின் வசீலா கொண்டே இறைவனிடம் உதவி பெறலாம் என்றும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இப்படி மூன்று குற்றங்களை முஸ்லிம்கள் பேரில் சாட்டி, இவை குற்றங்கள் தான் என்பதற்கு ஆதாரமாக தர்கா, ஸியாரம் போன்றவற்றுக்கு நாம் யாத்திரை போக அனுமதிக்கப்படவில்லை அப்படி யாத்திரை போவதற்கு நமக்கு மூன்று இடங்களே அனுமதிக்கப்பட்டிருக்கிறது மக்கா,மதீனா, பைத்துல் முகத்தஸ் எனவும், குர்ஆனில் வரும் வசீலா என்ற சொல்லை அவ்லியாக்களின் சிபாரிசைக் கொண்டு இறைவனிடம் உதவி தேடுங்கள் என்று அருளப்படவில்லை என்பது மார்க்க நலன் பூண்ட ஒவ்வொருவரும் தெரிந்த விடயமெனவும் எழுதுகிறார்.

குர்ஆனில் வரும் வசீலாவுக்கு அவ்லியாக்களை கொண்டு அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள் என பொருளில்லை என்று யார் கூறினார்கள் எந்த ஆயத்தில் ஹதீதில் வருகிறது இமாம்களில் யார் சொல்லி இருக்கிறார்கள் என்ற விவரம் எதையும் காட்டவில்லை.

தர்காக்களில் தங்கி இருப்பதால் கருமங்கள் நிறைவேறுவதாக நம்புவதும், கொடிய ஷிக்காகும் என தீர்ப்புக் கூறி அவ்லியாக்களின் வசீலாவைக் கொண்டு உதவி தேடியவர்கள், அவ்லியாக்களிடம் போனால் தங்கள் நோய்கள் தீர்ந்து விடும் காரியங்கள் முடியும். என நம்பியவர்களை மார்க்கத்தைவிட்டு நீங்கியவர்கள் என்பதாக கூறுகிறார்.

தர்காக்களுக்கு ஜியாரத்தை நாடி போவது குற்றம் என்பதற்கு காட்டிய ஆதாரத்திலும் அது கூடாது என எங்கு வருகிறது யார் சொன்னார்கள். என்ற விவரம் எதுவம் காட்டவில்லை. என்றாலும், நமக்கு மூன்று இடங்களுக்கே அமதிக்கப்பட்டுள்ளன மக்கா, மதீனா, பைத்துல் முகத்தஸ் என எழுதியதிலிருந்து வழிகெட்ட வஹாபியத்தின் மூலக்குருவான இப்னு தைமிய்யாவின் சொல்லைத்தான் இவரும் பின்பற்றுகிறார் என விளங்குகிறது.

லா துஷத்துர் ரிஹாலு.... மூன்று பள்ளிகளுக்கே அல்லாது வாகனம் கட்டப்பட மாட்டாது 1. என்னுடைய இந்தப் பள்ளி 2. மஸ்ஜிதுல் ஹறாம் 3.பைத்துல் முகத்தஸ் என்று ஒரு ஹதீஸ் வருகிறது.

இப்னு தைமிய்யா, இந்த ஹதீதின்படி மக்காவின் கஃபத்துல்லாஹ், மதீனாவிலுள்ள நாயகத்துடைய பள்ளி, பைத்துல் முகத்தஸிலுள்ள மஸ்ஜிதுல் அக்ஸா இம்மூன்று இடங்களுக்கல்லாமல் வேறு எந்த ஜியாரத்திற்கும் யாத்திரை போவது குற்றம் நாயகமவர்களுடைய ரவுலா ஷரீபானாலும் ஜியாரத்திற்காக யாத்திரை போகக் கூடாது. குற்றம் அப்படிப்பட்ட பயணம் பாவமான பயணம்.

எனவே அந்த பயணத்தில் ஜம்உ, கஸ்று தொழுகைகள் கூடாது என்றார். இவர் சொல்வதுபோல் அந்த ஹதீதுக்கு பொருள் வைத்தால் ஸியாரத் என்ன? ஜிஹாதுக்குப் போகக்கூடாது ஹஜ்ஜுக்குப் போகக்கூடாது கல்வி கற்பதற்கோ எதற்கும் போகக்கூடாது என்று வரும் இப்படி யாரும் சொல்ல மாட்டார்கள் மார்க்கத்திலும்கூட அனேக காரியங்களுக்கு யாத்திரை போகும்படி வந்திருக்கிறது.

இந்த ஹதீதுக்கு சரியான கருத்து பள்ளிவாசலில் தொழுதால் கூடுதல் தவாப் கிடைக்குமே அதைவிடவும் அதிகமான தவாபை ஆதரவு வைத்து யாத்திரை போவதென்றால் இந்த மூன்று பள்ளிகளில் ஒன்றுக்குத்தான் போக வேண்டுமென்றும் இவையல்லாது உலகின் மற்ற பள்ளிகளெல்லாம் பள்ளியென்ற அந்தஸ்தில் சமமமேயாகும் சிறிய பள்ளியில் தொழுதாலும் பெரிய பள்ளியில் தொழுதாலும் பள்ளியில் தொழுததற்காகக் கிடைக்கும் தவாபு ஒன்றுபோலவே கிடைக்கும் இப்படித்தான் எல்லா இமாம்களும் கருத்துக் கூறுகின்றனர்.

நான் உங்களை ஜியாரத் செய்வதை விட்டு விலக்கி இருந்தேன் இப்போது ஜியாரத் செய்யுங்கள் என்றும் யாராவது என்னை ஜியாரத் செய்ய வந்தால் மறுமைநாளில் நான் அவனுக்கு ஷபாஅத் செய்வது என் பெயரில் கடமை என்றும் மேலும்பல ஹதீதுகள் வந்துள்ளன.

இந்த ஹதீதுகளின் அடிப்படையில் ஆண்களும், பெண்களும் ஜியாரத்துச் செய்வது சுன்னத் என இமாம்கள் சொல்கின்றனர். பிக்ஹு- சட்ட நூற்களில் இதைக் காணலாம்.

அடுத்து அவ்லியாக்களைக் கொண்டு ஆண்டவனிடம் வஸீலா தேடக்கூடாது என்பதற்கு சரியான ஆதாரம் கர்டாமல் வஸ்தாஈனூ பிஸ்ஸப்ரி வஸ்ஸலாத் நீங்கள் தொழுகையைக் கொண்டும் ஸப்றைக் - பொறுமையைக் கொண்டும் உதவிதேடுங்கள் என்ற ஆயத்தை ஆதரமாகக் காட்டுகிறார்.

குர்ஆனில் வருகிற வஸீலா என்பதன் கருத்து தொழுகை, மற்ற அமலைக் கொண்டு வஸீலா தேடுவதுதான் அவ்லியாக்களைக் கொண்டு வஸீலா தேடுவது ஷிர்க் என்று அவர் நம்புகிறார். போலும் அவ்லியாக்களை வஸீலாவாக வைத்தால் அது ஷிர்க்காகி, அவ்லியாக்கள் அல்லாஹுவுக்கு கூட்டாகி விடுகிறார்கள் ஆனால் தொழுகை, பொறுமை ஆகியவற்றை வஸீலாவாக வைத்தால் அவை ஷிர்க் ஆகாது அல்லாஹ்வுக்கு கூட்டாகாது என நம்புகிறார் போலும் ஒரு பொருளை கூட்டாக்குவதும், மற்றொன்றை கூட்டாக ஆக்காமலும் இருப்பதுதானா தவ்ஹீது.

எனவே கட்டுரை எழுதிய மௌலவி சாகிபுக்கு ஷிர்க் என்றால் என்ன? எதற்கு சொல்வது? வசீலா என்றால் என்ன? எதற்கு சொல்வது? என்பதுகூட விளங்கவில்லை.

வஸீலா – சிபாரிசு என்றால் ஒரு பொருளை அல்லது ஒரு ஆளை அல்லாஹ்வின் உதவி வரும் இடமாக – வழியாக – வெளியாகும் தானமாகக் கருதி ஆண்டவனிடத்தில் ஆண்டவா இவரின் வழியாக அல்லது இதன் வழியாக உன் உதவியைக் கொடு வெளியாக்கு என கேட்பது.

இப்படி அவரை அல்லது அதை இறைவனுடைய உதவி வரும் என்று கருதிக் கொண்டு கேட்பது சில சமயம் இன்னாரின் அல்லது இன்னதின் ஹக்கைக் கொண்டு அல்லது பரக்கத்தைக் கொண்டு அல்லது ஜாஹை, வசீலாவைக் கொண்டு கேட்கிறேன் எனச் சொல்லலாம் இன்னாரைக் கொண்டு உதவி தேடுகிறேன் இரட்சிக்கத் தேடுகிறேன். ஷபாஅத்துத் தேடுகிறேன் எனவும் சொல்லலாம். எப்படிச் சொன்னாலும் கருத்து ஒன்றுதான். அதாவது உதவி செய்வது அல்லாஹ் இவர்கள் அதற்கு வழியாக இருக்கிறார்கள்.

இந்தக் கருத்துப்படி உதவி தேடுவதற்குத் தான் வசீலா என்று சொல்லப்படும். இதுதான் முஸ்லிம்களுடைய கொள்கை. முஸ்லிம்களில் எவருமே அவ்லியாக்களையோ, மற்றவர்களையோ அல்லாஹ்வின் செயலைக் கொண்டல்லாமல் அவர்கள் சுயமாகச் செய்கிறார்கள் என்று நம்பமாட்டார்கள்.

'உங்களையும், உங்கள் செயல்களையும் இறைவன் படைத்தான் என்ற இறைவாக்கின் படி சர்வ சிருஷ்டிகளையும், அவர்களின் செயல்களையும் அல்லாஹ் தான் படைத்தானென்றும், நல்லது கெட்டது எல்லாமே அவனுடைய கட்டளைபடி நடக்கிறதென்றும், களா – கத்ரைக் கொண்டும் நம்பினவர்கள் முஸ்லிம்கள். இந்தக் கருத்துப்படி சில சமயம் வசீலா தேடும்போது

செயலை நேரடியாக அவ்லியாக்கள் கருத்துப்படி சில சமயம் வஸீலா தேடும்போது செயலை நேரடியாக அவ்லியாக்கள் பால் சேர்த்து அல்லாஹுடைய வலியே! அல்லது இன்னாரே! எனக்கு உதவி செய்யுங்கள் எனச் சொல்வார்கள். அல்லது கஷ்டமான நேரத்தில் இன்னாரே! என்று வலிமார்களின் பெயரை மட்டும் சொல்லிக் கூப்பிடுவார்கள். அவர்கள் எப்படிச் சொன்னாலும் செயல் இறைவனுடையதுதான். வலிமார்கள் இறைவனின் செயல் வரும் வழி அல்லது செயல் வெளியாகிற இடம் என்பதுவே முஸ்லிம்களுடைய நம்பிக்கை.

செயல் இறைவனுடையது. வலி அது வருமிடம் என்ற எண்ணத்தோடு – செயலை அவ்லியா பக்கம் சேர்த்து அவர் செய்து விட்டார். - உதவி செய்தார் என்றோ, அவ்லியாவே உதவி செய்யுங்கள்! என்றோ சொல்வதற்கு நிஸ்பத் மஜாஸீ - இரவல் சேர்மானம் எனப்படும்.

அதாவது செயலை செயலுடையவன் பக்கம் சேர்க்காமல் செயல் வருகின்ற வழியில் சேர்ப்பது. இதைப் பற்றி குர்ஆனிலும், அநேக ஹதீதுகளிலும், ஜனங்களுடைய பேச்சு வழக்கிலும் காணலாம்.

உதாரணமாக சிறு பிள்ளைகளை நரைக்க வைக்கும்படியான நாளையில் என குர்ஆனில் வருகிறது கியாம நாளில் அல்லாஹ் சிறுவர்களை நரைக்க வைக்கிற செயலை நாளின் பக்கம் சேர்த்து அந்த நாள் நரைக்க வைக்கும் என்கிறான். ஆற்றில் தண்ணீர் ஓடுகிறது என்பதில் ஓடும் செயலை ஆற்றின் பக்கம் சேர்த்து ஆறு ஓடுகிறது எனச் சொல்கிறார்கள்.

உதவியை, மற்ற செயல்களை ஆண்டவனுடைய துணையின்றி அவ்லியாக்கள் தாமே செய்கிறார்கள் என்று நம்பினால்தானே ஷிர்க். ஷிர்க் என்றால் என்ன? அல்லாஹ்வின் தாத்திலோ, ஸிபத்தலோ மற்றொருவரை கூட்டாக்கி, அல்லாஹ்வைப் போல் ஒருவராலும் உண்டாக்கப்படாமல் தன்னாலே உண்டாகி தனக்குத் தானே ஆதாரமான மற்றொருவன் இருக்கிறான் என்றோ, அல்லாஹ்வின் சிபத்தை உடையவன் மற்றொருவன் இருக்கிறான் என்றோ, ஆண்டவனுடைய செயலைப் போல யாருமில்லாது தான் சுயமாகவே செய்யக் கூடிய வேறொருவன் இருக்கிறான் என்றோ நம்புவதே ஷிர்க். அப்படி ஒருவன் எண்ணினால் அவன் தனது எண்ணத்தில் ஷிர்க் வைத்து விட்டான்.

முஸ்லிம்களுடைய வாயிலிருந்து ஏதும் வார்த்தை வந்துவிட்டால் அதைக் கொண்டு அவர்கள் ஆண்டவனுக்கு கூட்டானவன் இருப்பதாக நம்பி இருக்கிறார்கள், ஷிர்க் செய்து விட்டார்களென நினைக்கக் கூடாது. முஸ்லிம்கள் பேரில் கெட்ட எண்ணம் வைப்பது ஹராம். முஸ்லிம்கள் அப்படிப்பட்ட நம்பிக்கை உடையோரல்ல என்பதற்கு ஆதாரம் அவர்கள் முஸ்லிம்களாக இருப்பதுவேயாகும்.

தொழுகை மற்ற அமல்களை வஸீலா தேடி அல்லாஹ்விடம் உதவி தேடுவது ஆகுமானது போல் அவ்லியாக்கள் மற்றவர்களைக் கொண்டும் வஸீலா தேடி இறைவனிடம் உதவி தேடுவது ஆகுமானதாகும். அவ்லியாக்கள் பொருட்டினால் ஆபத்து அகலுகிறது, உதவி கிடைக்கிறது என்பதற்கு ஆதாரங்கள் எழுதுவதானால் ஏட்டில் அடங்காது, எண்ணியும் முடியாது. ஒரு சில மட்டும் எழுதுகிறேன்.

குர்ஆனில் 'அவர்கள் (யூதர்கள்) முற்காலத்தில் (நாயகம் பிறக்கு முன்) அவர்களைக் கொண்டு (வசீலா தேடி) காபிர்கள் பேரில் உதவி தேடுகிறவர்களாக இருந்தார்கள். அதாவது ஏதாவது ஒரு விஷயம் அவர்களை கவலைப்பட வைக்குமானால் அல்லது அவர்கள் பேரில் காபிர்கள் அடர்ந்தேறினால் ஆண்டவா! கடைசி காலத்தில் அனுப்பக்கூடிய நபியின் லட்சணங்களை நாங்கள் தவ்றாத்தில் பார்த்திருக்கிறோமே! அந்த நபியுடைய பொருட்டைக் கொண்டு எங்களுக்கு உதவி செய்வாயாக! எனச் சொல்வார்கள் அவர்களுக்கு உதவி செய்வாயாக! எனச் சொல்வார்கள். அவர்களுக்கு உதவி கிடைக்கும்.

2;:89ம் வசனத்தின் விரிவுரையில் தப்சீர்களின் பாகம் 1 பக்கம் 71.

மேலும் தப்சீர் காஸின், தப்சீர் கபீர், தப்சீர் ரூஹுல் பயான் இவைகளில் 12:42ம் வசனத்தின் கீழ் எழுதுவார்கள்:

தங்கடங்கள், அக்கிரமங்களை தட்டுவதற்காக ஜனங்களிடம் உதவி தேடுவது ஆகும். தப்றானி அவர்களின் முஃஜமுல் கபீர் என்ற நூலில் வருகிறது ஸஉதுபுனு காரிப் எனும் ஸஹாபி நாயகமவர்களின் சமூகம் வந்து பைத்து படித்தார்கள்.

அதில் ஒரு கவி:

வ இன்னக அத்னல் முற்ஸலீன வஸீலத்தன்

இலல்லாஹி யப்பனல் அக்ரமீனல் அதாயிபி

'நாயகமே! சங்கையான மணமானவர்களின் மகனே! முர்சலான நபிமார்களில் எல்லாம் நீங்களே அல்லாஹ்வுக்கு நெருக்கமான வசீலா (சிபாரிசு)வாக இருக்கும்' நாயகம் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் இதனை சந்தோஷமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். ஆட்சேபிக்கவில்லை.

ஸஹீஹான ஹதீதுகளில் வருகிறது.ரஸூலுல்லாஹ் கேட்கக்கூடிய துஆக்களில், 'அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக பிஹக்கிஸ் ஹாயிலீன அலைக.......' 'ஆண்டவனே உன்னிடம் கேட்கக்கூடிய எல்லார்களின் ஹக்கைக்கொண்டும் உன்னிடம் கேட்கிறேன்' என்ற வாசகமும் இருக்கும். மேலும் இதே மாதிரியான துஆவை கொண்டு பிரார்த்தனை செய்யும்படி சஹாபாக்களையும் ஏவினார்கள். அவற்றை இமாம் சுயூத்தி ரஹிமஹுல்லா தமது ஜாமிஉல் கபீர் நூலில் எழுதி உள்ளார்கள்.

மேலும் அனேக இமாம்கள் பள்ளிவாசலுக்கு போகிற போது ஓதக்கூடிய சுன்னத்தான துஆக்களில் எழுதி இருக்கிறார்கள், 'நாயகமவர்கள் அல்லாஹுவிடம் கேட்கக் கூடியவர்கள் எல்லோரையும் கொண்டு வசீலா தேடி இருக்கிறார்கள். ஸஹாபாக்களையும் அப்படி வசீலா தேடும்படி ஏவியுள்ளார்கள்.'

தப்றானீ, பைஹகீ ஆகியோரின் ரிவாயத்தில் வருகிறது ரசூலுல்லாஹ் சொன்னார்கள் உங்களில் யாராவது ஒரு பொருளை களவு கொடுத்து விட்டால் அல்லாஹ்வின் அடியார்களே! எனக்கு உதவி செய்யுங்கள் என்று கூறவும். இன்னொரு ரிவாயத்தின்படி என்னைக் காப்பாற்றுங்கள் என்று சொல்லவும்.

நூல் : ஹிஸ்னுல் ஹஸீன்.

இப்னு ஹஜர் இமாமவர்கள் தமது கைராதுல் ஹிஸான் எனும் நூலில் சொல்கிறார்கள்: இமாம் ஷாபிஈ ரஹிமஹுல்லா பக்தாதில் இருக்கும்போது இமாம் அபூஹனிபா ரஹிமஹுல்லா அவர்களுடைய கப்றுக்கு போய் ஜியாரத் செய்து சலாம் கூறி, வசீலா தேடி இறைவனிடம் கேட்பவர்களாக இருந்தார்கள்.

இமாம் அஹமது இப்னு ஹன்பல் ரஹிமஹுல்லா ஷாபிஈ இமாம் அவர்களைக் கொண்டு வசீலா தேடினார்கள். ஷாபிஈ இமாம் அவர்கள் அஹ்லு பைத்துக்களைக் கொண்டு வசீலா தேடி இருக்கிறார்கள்.

அப்துல் வஹ்ஹாப் ஷஃரானீ ரஹிமஹுல்லா அவர்கள் தமது 'லவாகிஹுல் அன்சாரில் குத்ஸியா' எனும் நூலில் நபிமார்களையோ, ரசூல்மார்களையோ, வலிமார்களையோ பற்றி அறிந்த ஒவ்வொருவரிடமும் அவர்கள் வருகிறார்கள். அவனுக்கு கஷ்டங்கள் வந்துற்றபோது உதவி செய்வார்கள் என்று எழுதுகிறார்கள்.

*முற்றும்.*

**'தப்லீக்' ஒரு விளக்கம்.**

'ஒரு கூட்டத்தினர் தொழுகைக்கு அழைப்பதை தப்லீக் என பெயர் சொல்கின்றனர். தப்லீக் என்றால் எத்தி வைத்தல் என அர்த்தம். எத்தி வைத்தல் என்றால் எத்தி வைக்கக்கூடிய ஆள், எத்தி வைக்கப்படுகிற பொருள் வேண்டும். உங்களிடத்தில் ஒரு சமாசாரத்தை சொல்லி இதை இன்னாரிடம் தெரிவித்து விடு என்று கூறினால் நீங்கள் எத்தி வைக்கிற ஆள். சமாச்சாரம் எத்தி வைக்கப்படும் பொருள். நீங்கள் யாரிடம் போய் சமாசாரத்தை சொல்கிறீர்களோ அவர் எத்தி வைக்கபப்படுகிறவர். இப்போது உங்களால் தெரிவிக்கப்படுகிற விஷயம் ஏற்கெனவே அவருக்கு தெரிந்திருக்கக் கூடாது. அப்படியானால்தான் அது எத்தி வைத்தல் என்றாகும். ஏற்கனவே அதனை அவர் தெரிந்திருந்தால் அதற்கு எத்தி வைத்தல் என்று சொல்ல முடியாது. தொழ வேண்டுமென்பது எல்லோருக்கும் தெரியும். எனவே தொழ அழைப்பதை எத்தி வைத்தல் என சொல்வது முறையல்ல. தஃவத் - அழைத்தல் என கூறலாம். எனவே இவர்கள் தொழுகைக்கு அழைப்பவர்களல்ல. வஹ்ஹாபியத்தை எத்தி வைக்கின்ற கூட்டத்தினர் இவர்கள்';.

-**ஷெய்குனா ஸூபி ஹலரத்.**